
# உண்மைக் காதல் மாறிப்போகுமா?



ரமணிசந்திரன்



# உண்மைக் காதல் மாறிப்போகுமா?

மேலும் மின்நூல்களுக்கு - www.tamilebooks.net : www.tamilnesan1981.blogspot.com

# உண்மைக் காதல் மாறிப்போகுமா?

## 1

அலுவலகம் செல்லக் கிளம்பி, தன் ஸ்கூட்டியை எடுத்து வாயிலை நோக்கி விரைந்த சாருபாவின் புருவங்கள் லேசாக நெரிந்தன. வழக்கமாகச் சுற்று மதில் கேட்டருகே உட்கார்ந்திருக்கும் மூத்த வாயில்காவலரை இன்றும் காணவில்லை! ஏன்? எட்டு மணிக்கு வினாடி பிசகாமல் வந்து வேலையேற்றுக் கொள்கிறவர்!

ஒவ்வொரு ஃப்ளாட்காரருக்கும் எழுந்து எழுந்து உட்கார, வயதாகிவிட்ட உடல் நிலை இடம் கொடுக்கா

விட்டாலும், வாய் நிறையப் புன்னகை செய்து, ஒரு கையால் நெற்றியைத் தொட்டு வணக்கம் தெரிவிப்பார். பெரியசாமி. அவளும் பதிலுக்கு இன்முகமாகத் தலையசைத்துவிட்டுப் போவாள். சின்னப் பிள்ளைகள் கூட தாத்தா தாத்தா என்று. விளையாட்டுக்கு அவரைத் தான் 'ஐஸ்பாயா'க வைத்துக் கொள்ளுவார்கள்.

அவளும், ஒரே இடத்தில் புதிதாகப் பணிக்குச் சேர்ந்த மூன்று பேராக இங்கே வாடகைக்கு வீடெடுத்து வந்தவள். தனியாக வசிக்கும் இளம் பெண்கள் என்பதால், மூவருமே குடியிருக்கும் இடத்துக்கு யாரையும் கூப்பிட்டுப் பேசிப் பழக்கம் வைத்துக் கொண்டதில்லை.

அவர்களுள் ஒருத்தி காதல் மணம் செய்து கணவனோடு சென்றுவிட, அடுத்தவள் இப்போது பணி நிறுவனம் மாறி, பெங்களூருக்குப் பிரிந்து போய்விட்டாள். தனிமையை உணர்ந்தாலும், அறியாத யாரையும் கூட வைத்துக் கொள்ள சாரூபாவுக்கு மனமில்லை. நிறுவனத்தில் அவளது இப்போதைய நிலைக்கு, வாடகைக்கு அலவன்சும் ஓரளவு வரவே, பணத்துக்காக யாரையும் கூட வைத்துக் கொள்ளும் அவசியமும் நேராது, தனியாகவே இருந்தாள்.

பெரியசாமி ஒரு சீனியர் காவலாளி என்பதற்கு மேல், அவளுக்குத் தெரியாது. ஆயினும் தினம் பரிமாறிக் கொண்ட புன்முறுவல், அவளுக்கு வேண்டியவராக, அவரை மாற்றியிருந்தது.

இந்த நிலையில், ஐந்து நாட்களாக மனிதரைக் காணவில்லையே!

எங்கேயோ பெரிய அலுவலகத்தில் வேலை பார்த்து விட்டு, பணி ஓய்வு பெற்ற பிறகு, செக்யூரிட்டி

நிறுவனம் ஒன்றில் பெயர் கொடுத்து, அதன் மூலமாக இங்கே வந்தவர் என்கிற அளவுக்கு, சாரூபிக்குத் தெரியும். அங்கே குடியிருப்போர் சங்கக் கூட்டத்தில் சொல்லக் கேட்டிருக்கிறாள்.

இங்கே வேலைக்கு வந்ததிலிருந்து கடந்த நாலு ஆண்டுகளாக, ஒருநாள் கூடப் பெரியசாமி விடுமுறை எடுத்தது கிடையாது என்றார்கள். சாரூபாவே மூன்று ஆண்டுகளாகப் பார்க்கிறாளே!

இப்போது என்ன நேர்ந்திருக்கும்?

சும்மா விட முடியாமல், அலுவலகத்தை அடைந்ததும், சங்க செயலாளருக்கு போன் செய்து விவரம் கேட்டாள்.

பெரியசாமியால் வேலைக்கு வர முடியாததால், பதிலுக்கு வேறு ஆள் அனுப்புவதாக 'செக்யூரிட்டி' நிறுவனத்திலிருந்து இந்தப் புதுக் காவலாளை அனுப்பியதாகவும், அதற்கு மேல் அவரைப் பற்றிய விவரம் எதுவும் தெரியாது என்றும் செயலாளர் தெரிவித்தார்.

சங்கத்தின் ஒப்பந்தம் செக்யூரிட்டி நிறுவனத்துடன் தான். அவர்கள் தகுதியுள்ள யாரையேனும் அனுப்ப வேண்டுமே தவிர, அப்படி அனுப்பப் படுகிறவர்களின் தனிப்பட்ட விவரங்கள் சங்கத்துக்குத் தேவை கிடையாது!

அத்தோடும் விட மனமின்றி, மதிய இடைவேளையின்போது செக்யூரிட்டி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு, பெரியசாமி பற்றி சாரூபா விசாரித்தாள்.

வயதானவர் ஆயிற்றே என்று அவளுக்கு உள்ளூர இருந்த பயத்தைப் போக்கினாலும், செக்யூரிட்டி நிறு வனத்தின் பதில், அவளுக்குக் கவலை தருவதாகவே அமைந்தது.

சில தினங்களுக்கு முன்பாகப் பணி முடிந்து சென்ற பெரியசாமி திடீரென, மயங்கி விழுந்து விட்டார். மயக்கம் தெளிவித்து பக்கத்து மருத்துவரிடம் கூட்டிப் போனபோதுதான், அவருள் வளர்ந்து விட்டிருந்த சில நோய்கள் பற்றிய விவரம் தெரிய வந்தது. சிகிச்சை முடியும்வரை வேலை செய்ய முடியாத நிலை என்பதால், குடியிருப்புக் காவலுக்கு வேறு ஆள் அனுப்பினார்கள்.

சும்மா ஒருவர் மயங்கி விழமாட்டார். பாதிப்பு அதிகமாகவே இருக்க வேண்டும். செக்யூரிட்டி நிறுவனத்திடம் பெரியசாமியின் முகவரியை வாங்கி, அன்று மாலை அவரை வீட்டுக்கே போய்ப் பார்த்தாள்.

இந்த வயதில் காவலாள் வேலைக்கு வருகிறவர், சாரூபா ஊகித்தது போல, லைன் வீடுகளில் ஒன்றில் தான் பெரியவர் குடியிருந்தார்.

ஆனால், அவள் எதிர்பாராதது, வீதி வரை கேட்ட, ஒரு பெண்ணின் கூச்சல்.

''சும்மாவே, இங்கே கொட்டிக் கிடக்குது, இதிலே உங்கப்பனுக்கு வைத்தியம்... அதுவும் ராசாக் கணக்கா வைத்தியம் பார்க்கத் துட்டுக்கு எங்கிட்டுப் போகிறது? ஏதோ அஞ்சு ரூபாயைக் கொடுத்தமா, ஒரு ஊசியப் போட்டுக்கிட்டு வேலைக்குப் போனமான்னு இருக்

கணும். அத்த விட்டுப் போட்டு, ஆசுபத்திரியிலே படுத்துக் கிடக்கிற சோலியெல்லாம் வாணாம்னு, உன் அப்பன்கிட்டே சொல்லி வை! எதுனாலும், நம்ம நெலை மைக்கித் தாங்குமான்னு, அதையும் கொஞ்சம் ரோசித்துப் பார்க்கணும்...''

இந்தப் பாட்டு இன்னும் எவ்வளவு நேரம் தொடர்ந்திருக்குமோ?

நல்லவேளையாக, மலிவு விலை சல்வார் அணிந்த ஒரு பெண், வாயிலுக்கு வந்தவள் சாரூபாவைப் பார்த்துவிட்டு ''யாருங்க வேணும்?'' என்று கேட்டாள்.

பெரியசாமியின் பெயரைக் கேட்டதும், ''அம்மா தாத்தாவைப் பார்க்க யாரோ வந்திருக்காங்க'' என்று அறிவித்துவிட்டு வெளியே போனாள் அவள்.

சாரூபாவைப் பார்த்த பெரியசாமிக்கு, சந்தோஷத்தோடு குன்றலாகவும் இருந்தது.

மருமகள் அவரைத் திட்டிக் கொண்டிருந்த போதல்லவா, வந்திருக்கிறாள்.

''ஃப்ளாட் பிள்ளைகள் எல்லோரும் 'வாட்ச்மேன் தாத்தாவைக் காணோமே' என்று புலம்புகிறார்கள்'' என்று, அந்த மனநிலையை மாற்றினாள் சாரூபா.

கையோடு வாங்கிப் போயிருந்த பழங்களை வீட்டு மருமகள் கையில் கொடுத்ததும், உட்காருவதற்கு, சற்றுத் துருப்பிடித்த இரும்பு நாற்காலி ஒன்று வந்து சேர்ந்தது.

உடம்புக்கு என்ன என்று சாரூபா கேட்டபோது, பெரியசாமியின் 'மெடிக்கல் ஃபைல்' அவளிடம் தரப்பட்டது.

நோய்களைப் பற்றி அவளுக்கு ஆழ்ந்த அறிவு கிடையாது. ஒரு தலைவலி, அஜீரணம் என்றால், அந்த நேரத்துக்கு ஆபத்தில்லாத மருந்துகளை அறிந்து வைத்திருந்தாளே தவிர, அதற்கு மேல் சொந்த வைத் தியம் செய்து கொள்ள விரும்பியதில்லை. மேற் கொண்டு, இதுவா, அதுவா என்று ஆராயாமல், அதற் கெனப் படித்த மருத்துவர்களிடம் சென்று விடுவாள். அவளுக்குமே, இந்த மாதிரிப் பாதிப்பு இவருக்கு நேர்ந்திருக்க வேண்டாமே என்று தோன்றியது. முக்கிய காரணம், சிகிச்சைக்காகத் தேவைப்படும் பணம். சில லட்சங்கள்! அந்தச் சிகிச்சையைச் செய்தே ஆக வேண்டிய அவரது நிலைமை.

கண்ணில் பட்ட அளவில் வீட்டின் நிலைமை புரிபட, கத்திக் கொண்டிருந்த மருமகளையும் குற்றம் சொல்வ தற்கு இல்லை. இவ்வளவு பணத்துக்கு இவர்கள் எங்கே போவார்கள்?

''அம்மா, என்கிட்டே வஞ்சனை இல்லை. வச்சுக் கிட்டு, இல்லேங்கலை. இவரு புள்ளைக்கு ஒளுங்கான வேலை கெடையாது. வேலை கிடைக்கிற அன்னைக் குப் பாதிய குடிச்சுத் தீர்த்திடுவாரு. மிச்சம் மீதியோட, இந்தப் பெரியவரு கொண்டாரப் பணத்திலே, புள்ளைங் களைப் படிக்க வச்சு, துணிமணி சாப்பாட்டையும் பார்க்கணும். இதுவே பெரும்பாடா இருக்கையிலே, இந்த வைத்தியமெல்லாம், நம்மாலே எப்படிம்மா முடியும்? இப்ப மாமனாரு வேலைக்குப் போகாத, அந்த சம்பளமும் முளுசா வராதே, மாசச் செலவை எப்படிச் சரிக்கட்டப் போறேன்னு, அதுவே திகிலாருக்கு,

தாயி!'' என்று புலம்பினாள்,-பெரியசாமியுடைய மருமகள்.

அவள் கவலை, அவளுக்கு.

ஆனால் சுவரில் சாய்ந்து, தரையில் அமர்ந்திருந்த பெரியவரின் முகத்தைப் பார்க்கையில், சாருபாவுக்கு வேதனையாக இருந்தது.

என்ன செய்யப் போகிறார்? நோயிலே நொந்து வேதனைப்பட்டு மடிவதுதான் விதியா?

ஐயாயிரம், பத்தாயிரம் என்றால் கூட, அவளே கொடுக்கலாம். ஓரளவு பரிச்சயம் ஆன ஒருவருக்கு, அவளது பொருளாதார நிலையில், அவள் செய்யக்கூடிய உதவி. சில தரும நிறுவனங்களைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறாள். ஆனால், அவற்றிலும், இவ்வளவு பெரிய தொகை கிடைப்பது கடினம். உடனே கிடைப்பது, அதை விடவும் அரிது.

அவள் யோசிப்பதைப் பார்த்துவிட்டு ''மாமனார் மின்னாடி வேலை செய்த இடத்திலே நல்ல பேரு. கேட்டால் கொடுப்பாங்கன்னு சொன்னாரு. ஆனால், இப்ப போனாக்க, உள்ளாரவே விடலையாம். அடிச்சுப் பத்தி விட்டாங்களாம்'' என்றாள் மருமகள். ''உடம்பிலே சத்து இருக்கப்போ, அவங்களுக்காக உழைச்சுக் கொட்டி னாரு. இன்னும் நல்லாச் செய்யட்டுமின்னு சும்மா னாச்சும் ரெண்டு நல்ல வார்த்தை சொன்னா, அத்த நம்பிக்கிட்டு போய் அசிங்கப்பட்டு வந்தாரு'' என்று வெந்த புண்ணில் மேலும் வேல் பாய்ச்சினாள் மருமகள்.

தலை குனிந்து அமர்ந்திருந்தார் பெரியசாமி. ஆயினும் ''சின்னய்யா கட்டாயம் செய்வார். ஆனால் அவரைப்

பார்க்கவே விடமாட்டேன் என்கிறார்களே!'' என்று முணுமுணுத்தார் அவர்.

''ஆமாம் கிழிச்சார். உள்ளே இருந்துகினு, அந்தாளு தான் விரட்டச் சொல்லியிருப்பாரு. காசு கேட்டு வரவன் மூஞ்சி தெரியாதா? கெட்ட கேட்டுக்கு என் புருசன வேறக் கூட்டிப் போய் கேவலப்படுத்திட்டாரு!''

இவள் கணவன், இந்த மனிதருடைய பிள்ளைதான் என்பதே மறந்துவிட்டதா? ஏதோ அவனுக்காவது அறி விருந்து கூடப் போனானே!

''எந்த நிறுவனம், பெரியசாமி சார்?'' என்று வேண் டும் என்றே 'சாரை' அழுத்தமாகச் சொல்லிக் கேட்டாள் சாரூபா.

புரிந்துகொண்டு, கண்களை உருட்டி விழித்துவிட்டு, மருமகள் அகன்று போனாள்.

''அண்ணா சாலையில் 'தீனாஸ்' என்று இருக்கிறதே, அதுதானம்மா. முதல்லே அடையாறிலே, அவங்க வூட்லதான் எடுபிடியா இருந்தேன். ஆபீசு வேலை யின்னா, சம்பளம், மேலே வசதி எல்லாம் கிடைக்கு மின்னு, அங்கே போட்டாங்க. அல்லா வேலையும் செய்வேன். வூட்டிலேருந்து வந்ததாலே நின்னு என் கிட்ட ஒரு வார்த்தை பேசாத, சின்னய்யா, நவுர மாட் டாரும்மா. இப்படின்னு தெரிஞ்சாக்க, ஏதாச்சும் செய் வாரு. ஆனா, பார்க்கவே முடியலியே!'' என்றார் முதி யவர், அலுப்புடன்.

அவரது பேச்சில் ஒரு பொறி தட்ட ''அலுவலக வேலை என்றால், ஓய்வு பெறும்போது மொத்தமாக ஒரு

தொகை வந்திருக்குமே...'' என்று அவள் கேட்கும் போதே, பெரியவரின் விழிகள் தன்னிச்சையாய் வீட்டைச் சுற்றிச் சுழன்றது. உடனேயே மிரட்சியுடன் மருமகள் சென்ற பக்கம் பார்த்தன.

ஓய்வு காலப் பணம் பெறும் எல்லா முதியவர்களும் செய்வதைத்தான் இவரும் செய்திருக்கிறார். இந்த வீட்டை மகனுக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறார்.

''ஆனால், உங்களுக்கென்று கொஞ்சமேனும் வைத் திருக்கலாமே!'' என்றாள் வருத்தத்தோடு.

''கொஞ்சம் வைத்திருந்தேன்... ஆனா, சிறுகச் சிறுக செலவாயிட்டுதும்மா. வூட்டைக் கேட்டு விடுவே னோன்னுதான் இந்தக் கத்துக் கத்துது. ஆனா, மருமகளும் நல்ல பொண்ணுதாம்மா. ஏதோ காலக்கோளாறு, கையிலே காசில்லாத நெலமை. என் புள்ளையும் சரி யில்லை. இருக்கிற ஒரு வீட்டையும் விட்டுவிட்டா வாடகை கொடுத்துக் கட்டுமா? பெத்த புள்ளைங்க படிப்புக் கெட்டுப் போவுமோ... அப்படீன்னு அதுக்கு பயம்! போகுது. நாம்பளும், காடு போய்ச் சேர வேண் டிய வயசுதானேம்மா?'' என்று முடித்தபோது சிகிச்சை பற்றிய நம்பிக்கையை, பெரியசாமி விட்டுவிட்டார் என்று சாருபாவுக்குப் புரிந்தது.

காடு போகிற வயசா? அதைப் பற்றி, யார் முடிவு செய்வது? இவருக்கென்ன மிஞ்சிப் போனால் அறுபத் தைந்து வயது இருக்குமா? இன்றைக்கு அதைக் காடு போகிற வயதாக எடுத்துக் கொள்ள முடியுமா? எழுந்து, எழுந்து சலாம் போடாவிட்டாலும், இவரது வேலையில் யாரும் குறை கண்டதில்லையே!

வீட்டினுள் ஒரு கண்ணை வைத்தபடி, வெளிப் புறமாக யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள் மருமகள்.

இந்த வீட்டைப் பற்றிப் பேச்செடுத்தாலே பெரியவரின் நிலைமை, மிகவும் மோசமாகிவிடும் என்று தெளிவாகத் தெரிந்தது.

இவருக்கு உதவியாக, அவளால் செய்யக்கூடியது...

சற்று யோசித்துவிட்டு, ''இந்த மெடிக்கல் ஃபைலை என்னிடம் கொடுங்கள், பெரியசாமி. ஜெராக்ஸ் எடுத்துக் கொண்டு, தந்துவிட்டுப் போகிறேன். உங்கள் பழைய முதலாளியை, நானும் போய்ப் பார்த்துப் பணத்துக்கு முயற்சிக்கிறேன். வேறே, வெளியேயும் பார்க்கலாம். எப்படியும் உங்கள் சிகிச்சைக்குத் தேவையான பணத் துக்கு விரைவிலேயே ஏற்பாடு பண்ணிவிடலாம். நம் பிக்கையோடு இருங்கள்'' என்று சொல்லிவிட்டுச் சாரூபா எழுந்தாள்.

மெய்யாகவே, அந்தத் தீனதயாளனைப் பார்த்துப் பேசிப் பெரியவருக்காகப் பணம் பெற்று வருவது, அப் படி ஒன்றும் கடினமாக இருக்காது என்றுதான் சாரூபா, அப்போது நினைத்தாள். ஏனெனில் பெரிய பெரிய தொழில்கள் பலவற்றிலும் 'தீனாஸ்' பங்கு வைத்திருந் தார்கள். அவர்களிடம் இருக்கும் பணத்துக்கு, இந்தத் தொகை, வெறும் தூசு!

ஆனால் பெரியசாமியைப் பார்த்துவிட்டு ஒருவாரம் சென்ற பிறகும், அந்தத் தீனதயாளனை, போனில் பிடிக்கக் கூட, அவளால் முடியவில்லை.

தீனதயாளனைப் பற்றி, அவனது அலுவலகத்தில் கேட்டால், சரியான பதிலே தருவது கிடையாது.

தீனதயாளன் அலுவலகத்தில் இருக்கிறாரா என்று கேட்டால், இருக்கிறார், இல்லை என்று தெளிவான பதில் வரவே வராது.

அதுபற்றி, நீ எதற்காக விசாரிக்கிறாய் என்று கூடக் கேட்கலாம், ஒரு நியாயம் இருக்கிறது.

அதைவிட்டு, அவர் அலுவலகத்தில் இருப்பது, இல்லாதது பற்றி உனக்கு என்ன அக்கறை என்றா கேட்பது? அத்தோடு மட்டுமின்றி, சேர்மன் அலுவலகத்தில் இருந்தால் என்ன செய்யப் போகிறாய்? இல்லா விட்டால், அப்போது என்ன செய்வதாக உத்தேசம் என்றெல்லாமா கேட்பது?

அவளது சொந்த விஷயமாக என்றால், இந்த தீனதயாளன் பெயரையே மறந்துவிட்டு, மாற்று வழி தேடத் தொடங்கியிருப்பாளே. ஆனால், பெரியசாமியின் நிராசை படிந்த கண்களும் குன்றலும் நினைவு வர, பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு, ''அவரை நேரில்... ஒரு பழைய பணியாளர் விஷயமாக, உங்கள் சேர்மனை நேரில் சந்தித்துப் பேச வேண்டியிருக்கிறது. கொஞ்சம் அவசரமாகப் பார்க்க வேண்டும்'' என்றாள் தணிவான குரலிலேயே.

''அவசரம்தானே? கட்டாயம் அவசரமாகத்தான் இருக்கும்'' என்ற குரலில் இளக்காரம் இருந்தது.

''ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?'' என்றாள் அவள் ஒரு மாதிரிக் குரலில்.

''பின்னே என்ன பொண்ணு? அரை மதிப்பெண் வித்தியாசத்தில் தர வரிசையில் எவ்வளவோ பின்தள்ளிப்

போய் விடுகிறார்கள். அரை வினாடி நேரத்தில், எத்தனை பெண்கள், உன்னை முந்திக்கொண்டு காரியம் சாதிப்பார்களோ, யார் கண்டது? என்ன காரியம் என்று கேட்க மாட்டாய் என்று நினைக்கிறேன். அனாவசியமாக இப்படி அலையாமல், உழைத்துச் சாப்பிட முயற்சி செய்'' என்றதோடு டெலிபோன் தொடர்பு அறுந்தது. அதாவது, தொடர்பு துண்டிக்கப்பட்டது!

ஆத்திரத்தோடு மறுபடியும் தொடர்பு கொண்டு ''ஒரு பழைய பணியாளர் விஷயமாக என்றது காதில் விழ வில்லையா?'' என்று கேட்டதற்கு ''ஏதாவது ஒரு கதையைச் சொல்லித்தானே, உள்ளே நுழைந்தாக வேண்டும்'' என்று இளக்காரமாகப் பதில் வந்தது.

என்ன திமிர் இவர்களுக்கு? அப்படி என்ன கலியுக மன்மதன் இவர்களுடைய முதலாளி?

ஒரு டெலிபோன் ஆபரேட்டருக்கு இவ்வளவு திமிரா?

அவளது அலுவலகத்தில், டெலிபோன் பொறுப்பில் இருப்பவர்களுக்கு முதல் உத்திரவே, வெளி ஆட் களுடன் பேசும்போது, குரலில் எதிர்மறை உணர்ச்சி களைக் காட்டவே கூடாது என்பதுதான். இல்லை என்பதைக்கூட இனிய குரலிலேயே சொல்லலாமே என்பார்கள்.

ஒருவேளை, அந்த ஆபரேட்டர் தன் சொந்த ஏமாற்றங்களை இப்படிக் காட்டிக் கொள்கிறானோ என்று எண்ணிய சாரூபா, வேறு வேறு சமயங்களில், அலுவல கத்தில் தொடர்பு கொண்டு பார்த்தாள். ஆனால் அத னால் அவள் புரிந்து கொண்ட விஷயம் ஒன்றே

ஒன்றுதான். வெளியில் இருந்து பேசும் பெண்கள் என்றால், அவர்களுடைய முதலாளியை தட்டிக்கொண்டு போக முயற்சிப்பவர்கள் என்பதே, அந்த அலுவலகத்தினரின் ஒட்டு மொத்த அபிப்பிராயம் என்பதுதான் அது!

ஆனாலும், முதலாளியின் ஆதரவு இல்லாமல், இதுபோல அந்த அபிப்பிராயத்தை வெளிக்காட்ட முடியுமா என்ற ஒரு சந்தேகமும், அவளுக்கு உண்டாயிற்று. பொதுவாக, வேலையாட்கள், முதலாளிகளின் கருத்துக்களை பிரதிபலிக்கிறவர்கள் என்பார்கள்.

அலுவலகத்தை விடுத்து, தீனதயாளனின் வீட்டுத் தொலைபேசி எண்ணைக் கண்டுபிடித்துப் பேசியவளுக்கு, உடனே ஐயம் தெளிந்து போயிற்று! அவனுடைய பணியாளர்களின் துடுக்குப் பேச்சுக்கு அவனது முழு ஆசியும் உண்டு!

தன்னைத்தானே பெரிய மதனகாமராஜனாக எண்ணிக் கொள்ளும் அளவுக்கு அவன், அப்படி என்ன பேரழகன்? அல்லது, பணத்திமிரா? புதுப்பணக்காரப் புத்தியாகவும் இருக்கலாம்!

ஆனால் இத்தனைக்கும் மேலேயும், போடா என்று அவனை அலட்சியப்படுத்த, சாரூபாவால் முடியவில்லை. பெரியசாமியை சிறு வயதில் இருந்து அறிந்தவன், அவன். பெரியசாமியின் சிகிச்சைக்குத் தேவை, லட்சங்கள்! அந்த லட்சங்கள், அவனிடம் ஏராளமாக இருந்தன!

ஆனால், இப்படித் தன்னைத்தானே மிகப் பெரிதாக நினைத்துக் கொள்ளும் கர்வக்காரன் எந்த அளவுக்கு

உதவக்கூடும் என்பதில் சந்தேகமும் வந்துவிட, அவள் அறிந்தவர்கள் தெரிந்தவர்களிடம் நிலைமையைச் சொல்லி, பணத்துக்காக எங்கெங்கோ முயற்சி செய்வது என்று விசாரிக்கலானாள்.

இதுபோன்ற உதவிகளுக்கு வரிச்சலுகை ஏதேனும் கிடைத்தால், அதைக்கொண்டு, இன்னும் பலரிடம் கேட்டுப் பார்க்கலாமே என்று தோன்ற, அதுபற்றி விசாரிப்பதற்காக பெரியசாமிக்குச் சிகிச்சை செய்யும் மருத்துவ மனைக்குச் சென்றவளுக்கு அங்கே ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. பெரியசாமியின் உடல்நிலைப்படி, சிகிச்சையைத் தொடங்காமல் கால தாமதம் செய்யும் ஒவ்வொரு நாளுமே, அவரது உயிருக்கு ஆபத்தை அதிகரிப்பதாகும் என்று அவளிடம் சொன்னார்கள்.

ஆகவே, பெரியசாமியைக் காப்பது என்றால், நாகரீகம் பார்த்து ஒதுங்குவது கூடாது! தீனதயாளனைச் சந்தித்தே ஆக வேண்டும்.

செல், டெலிபோன் எதையும், அவன் நேரில் எடுப்பது கிடையாது. ரொம்ப வேண்டியவர்களுக்காக அவன் ஏதும் தனி எண் வைத்திருக்கலாம். ஆனால், அதை அறிவது கடினம். அப்படியே கண்டு பிடித்துப் பேசினாலும், தொடர்பைத் துண்டிக்க, எத்தனை வினாடி ஆகும்? எனவே, சந்திப்பதற்காக முன் அனுமதி பெறுவது முடியாத காரியம்.

எனவே, அனுமதி கேளாமல் அதிரடியாக தீனதயாளனை நேரில் சந்திப்பது என்று, சாரூபா முடிவு செய்தாள். கோட்டை போலப் பல தடைகளைக் கடந்து, வீட்டிலோ,

அலுவலகத்திலோ அவனைச் சந்திப்பது கஷ்டம். எனவே, அவள் வேறு திட்டம் தீட்டினாள்.

அதன்படி, அவனது அலுவலகக் கட்டிடத்தின் வெளியே யாரோ போலக் காத்திருந்தாள். காரிலிருந்து இறங்கி அலுவலகத்துக்குள் செல்லும்போது, யாரும் எதிர்பாராத நிலையில் விரைந்து, சென்று அவனை வழிமறித்து நிறுத்தினாள்.

படங்களில் பார்த்து அறிந்ததை விடவும், அருகில் தீனதயாளனின் உயரமும், கம்பீரமும், நிமிர்ந்த தோற்ற மும் அவளை ஒரு கணம் திகைக்க வைத்தன.

ஆனால், அதற்குள், அவனது உதடுகளின் ஏளன வளைவு, அவளைச் சுய நினைவுக்குக் கொண்டு வந்து, சுதாரிக்கச் செய்ய ''உங்களுடன் பேச ஒரு வாரமாக முயற்சி செய்கிறேன்'' என்றாள் குற்றம் சாட்டும் குரலில்.

''இருக்கும்!'' என்று அலட்சியமாகத் தோளைக் குலுக் கியவனின் பார்வையில் ''ஏ...'' என்று அவளை நோக்கி விரைந்த, அவனது ஆட்கள் ஒதுங்கிப் போயினர்.

உதட்டோரம் அதே ஏளனத்துடன் ''ஒரு மாதத்துக்கு மேல் முயன்று தோற்றவர்களும் இருக்கிறார்கள். ஆனால், உன்னுடைய இந்த அடாவடியாலும் என்னை வளைத்துப் பிடிக்க முடியாது'' என்று திருப்பினான் தீனதயாளன்.

வளைத்துப் பிடிப்பதா? என்ன திமிர்!

''வளைப்பதற்கும், பிடிப்பதற்கும், நீங்கள் அப்படி என்ன தேவதா அம்சமா? ஏதோ அந்தப் பெரியசாமி உங்களைச் சின்ன வயதிலிருந்து தெரியும். விஷயம்

தெரிந்தால் கட்டாயம் உதவி செய்வீர்கள் என்று உங்களைப் பற்றி உயர்வாகச் சொல்லிக் கொண்டிருக்கிறாரே என்று, அதை நம்பி உங்களைத் தேடி வந்தேனே, என்னைச் சொல்ல வேண்டும். இதோ, உங்களிடம் பணி புரிந்து ஓய்வு பெற்ற பெரியவர் பெரியசாமியின் மெடிக்கல் ஃபைல்... இதைத் தருவதற்காகத்தான், நான் உங்களைச் சந்திக்க முயன்றதும், பெரியசாமிக்கு உதவி செய்வதும், செய்யாததும் இனி உங்கள் இஷ்டம்'' என்று படபடவென்று வேகமாகப் பொரிந்தவள், ஃபைலை அவன் கையில் திணித்துவிட்டு, வந்த வேகத்திலேயே விரைந்து திரும்பிப் போய் விட்டாள்.

உள்ளூர ஒரே கொதிப்பு!

அவன் பார்க்க சற்று நன்றாகத்தான் இருந்தான். ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். கூடவே பணமும் இருக்கிறது. சரி! அதற்காக, ஊரில் உள்ள பெண்கள் எல்லோருமா அவனுக்காக ஏங்கிக் கொண்டு கிடப்பார்கள்? மிதமிஞ்சிய கர்வம்! அசட்டுத்தனம்! திமிர்!

போகட்டும், அவள் ஒருத்தியேனும், அப்படிப்பட்டவள் அல்ல என்று, இப்போது புரிந்திருக்கும்!

ஆனால், பெயருக்குச் சற்றும் பொருத்தமில்லாத அந்தத் தீனதயாளனுக்கு அது புரிந்ததோ, புரியாமலோ இப்போது ஆகப் போகிற காரியம் எதுவும் இல்லை. முக்கியமாக, பெரியசாமிக்கு பணம் கொடுப்பான் என்கிற நம்பிக்கை அவளுக்குக் கொஞ்சமும் இல்லை!

அவளுடைய ஒரு தோழி லேகா. பத்திரிகை ஒன்றில் பணிபுரியும் அவளும் அப்படித்தான் சொன்னாள். தானம்

தருமம் என்று, தீனதயாளன் யாருக்கும், எதுவும் கொடுக்க மாட்டானாம். அவரவருக்கு வேண்டியதை, அவரவர் தான் செய்து கொள்ள வேண்டும். நான் எதற்காகக் கொடுப்பது என்பானாம்.

இரண்டு நாட்கள் விடுப்பு எடுத்துக் கொண்டு, லேகா வோடு பல இடங்களிலும் பணத்துக்காகச் சுற்றியலைந் தாள்.

சில தரும நிறுவனங்களில் கொஞ்சம் பணம் கிடைத்தது. அதை விடவும், பெயர் போட வேண்டாம் என்று சொல்லிச் சிலர் காசோலைகள் கொடுத்தார்கள்.

வியப்பை அடக்கிக் கொண்டு நன்றி சொல்ல முயன்றபோது ''எனக்கு எதற்கம்மா நன்றி? தேவைப் படுகிறவர்களுக்கு இந்த அளவிலேனும் உதவி செய்யும் நிலையில் என்னை வைத்திருக்கும் ஆண்டவனுக்கு நன்றி சொல்லு'' என்று பண்போடு ஒரு நடிகர் பதி லிறுத்த விதம், அவளுக்குப் பேராச்சரியத்தை ஏற்படுத் தியது.

இவரைப் போன்றவர்கள் இருக்கும் உலகத்தில்தான், அந்த தீனதயாளனும் இருக்கிறான்! ஆனால், இந்த நல்ல மனிதரோடு சேர்ந்து, அவனைச் சேர்த்து நினைப் பானேன்?

இரு பெண்களுமாகச் சேர்ந்து திரட்டிய தொகையைக் கூட்டிப் பார்த்த சாருபாவுக்கு மனம் சோர்ந்தது. ஐந்தும் பத்துமான ஆயிரங்களில் சேர்ந்திருந்த தொகை, மொத்தச் செலவில் நாலில் ஒரு பங்கைத்தான் எட்டி யிருந்தது. முக்கால் கிணறைத் தாண்டினாலே பலன்

கிடையாது. இந்தக் கால் கிணறு தாண்டும் சக்தியை வைத்து என்ன செய்வது?

சிகிச்சைக்குப் பணம் போதாது. ஆனால், இந்தப் பணத்தைக் கொண்டு பெரியவர் வலி, வேதனை இல்லாமல் கடைசி காலத்தை கழிப்பதற்கேனும் ஏற்பாடு செய்ய முடியுமா என்று விசாரிக்க எண்ணி மருத்துவ மனைக்குச் சென்றால் ''பெரியவர் சிகிச்சைக்காகப் பணம் கட்டி, மருத்துவமனையில் சேர்ந்துவிட்டாரே!'' என்றார்கள். ''தேவையான சோதனைகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. பரிசோதனை முடிவுகள் வந் ததும், சிகிச்சை தொடங்கிவிடும். அதன் பிறகு 'விசிட் டர்'க்கு அனுமதி இராது. இப்போது வேண்டுமானால் போய்ப் பாருங்கள்'' என்று கூறி, அவளை அனுப்பி னார்கள்.

உள்ளூர சாருபாவுக்கு ஒரே ஆச்சரியம். இந்த விசித் திரம் நடப்பதற்கான ஒரே வழி, அந்த தீனதயாளனா கத்தான் இருக்க முடியும்! அப்படியானால், அவன் அவ்வளவு கெட்டவன் அல்லவே? ஆனால் அவன் பேசிய, நடந்து கொண்ட விதம் அப்படிச் சொல்லவில் லையே!

வியப்புடனேயே வரவேற்பில் கூறிய அறைக்குப் போய்ப் பார்த்தாள்.

சாருபாவைக் கண்டதும், பெரியசாமியுடைய மரு மகள் உட்பட எல்லோருக்குமே சந்தோஷம்.

என்னவோ, அவள்தான் உரிய விதமாகத் தீனதயாள னிடம் நிலைமையை எடுத்துச் சொல்லி, இதைச்

சாதித்திருப்பதாக, எல்லோரும் எண்ணுவது, நன்றாகவே தெரிந்தது.

''எனக்கு என்னம்மா? மாமனாரு மேலே ரொம்பப் பிரியம்தான். புருஷன் அடிக்க வரப்போ, எத்தினியோ தபா, அவருதான் குறுக்கே நின்னு காப்பாத்துவாரு. ஆனாப் பணத்துக்கு எங்க போவறதுன்னுதான்... என்னமோ, புண்ணியவான், மாமா சுகமாவுறவரை, மற்ற செலவுக்கும் சேர்த்துத் தருவாராம்.''

எல்லாம் கேட்ட போது, சாரூபாவுக்குத் தலை சுற்றிப் போயிற்று!

ஒரு மனிதனைப் பற்றிய அவளது கணிப்பு, இவ்வளவு தவறாக இருக்கக்கூடுமா?

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, சாரூபா கிளம்பினாள். இனி, அவள் இங்கிருந்து ஆகப் போவது ஒன்றுமில்லை. சிகிச்சை தானாக நடக்கும். இனி அவள் சொந்த வேலையைப் பார்க்க வேண்டும்.

சில நாட்களாக விடுப்பு எடுத்ததற்குச் சேர்த்து வேலை செய்தாக வேண்டும். முதலில் கையில் சேர்ந்திருக்கும் காசோலைகளை எப்படித் திருப்புவது என்று, லேகாவிடம் கேட்க வேண்டும்...

வரவேற்புப் பகுதியைக் கடந்து செல்லும்போது, அவளுக்குப் பெரியசாமி பற்றிய விவரம் சொல்லி அனுப்பிய பெண், வேறு யாருடனோ பேசிக் கொண்டிருந்தவள், அவளைக் கூப்பிட்டாள். ''என்ன மேடம் பார்த்தீர்களா? பெரியவர் உற்சாகமாக இருக்கிறாரா?

அவருக்காக ரொம்பவும் பாடு பட்டீர்கள் போல?'' என்று பேச்சுக் கொடுத்தாள்.

பெரியசாமிக்காக இரண்டு மூன்று தரம் வந்து போனதைக் கவனித்திருப்பாள் போல என்று எண்ணிய படி ''ம்ம... தெரிந்த மனிதர். நல்லபடியாகப் பிழைக்க வேண்டும் என்று இருந்தது. இப்போது நிம்மதியாக இருக்கிறது'' என்று சாரூபாவும் தன் மகிழ்ச்சியை அவ ளோடு பகிர்ந்து கொண்டாள்.

வரவேற்புப் பெண்ணிடம் முதலில் பேசிக் கொண் டிருந்த மனிதர் செல்லில் பேசியவாறே கிளம்பிச் செல்ல, வரவேற்பில் இன்னும் யாரோ வந்து, ஏதோ கேட்க, சாரூபாவும் விடை பெற்றுக் கிளம்பினாள்.

வெளிப்புறம் செல்லும் அகன்ற வழியில் சென்று கொண்டிருந்தபோது, வாயிலில் ஒரு பெரிய கார் வந்து நிற்க, செல்லில் பேசியபடி முன்னே கிளம்பிச் சென்ற மனிதன் ஓடிப்போய் கார்க் கதவைத் திறந்து விட்டான்.

பொதுவாக பெரிய பந்தாக் கார்களில் வந்து இறங்கு கிறவர்களை, சாரூபா அவ்வளவாகக் கவனித்துப் பார்ப் பது கிடையாது. பெரும்பாலும் அவர்கள் பந்தாக் காட்டு கிறவர்களாக இருப்பார்கள் என்ற எண்ணத்தில் நிமிர்ந்து பாராமலே போய்விடுவாள்.

இன்றும் அதுபோலவே வேகமாக நடந்தவள், ''என்ன? ஒரு நன்றி கூடக் கிடையாதா?'' என்று அருகில் ஒலித்த குரலில் திகைத்து நின்றாள்.

வழியை மறிப்பவன் போல, நெருங்கி நின்று கேட்ட வன் தீனதயாளனேதான்!

கண்களில் பளபளப்பும், உதட்டோரம் குறுநகையு மாக, அவனைப் பார்க்கையில், அவளுக்கு மறுபடியும் மலைப்பாக இருந்தது.

திகைத்து நோக்கும்போதே, அவனது கேள்வி நினைவு வர, அவள் சட்டென சுதாரித்தாள். ''நான் ஏன் நன்றி சொல்ல வேண்டும்? அவர் உங்களிடம் பணியில் இருந்தவர், உதவி செய்வது, உங்களது கடமை. நினைவு படுத்தியதற்காக, நீங்கள்தான் நன்றி கூற வேண்டும்'' என்று மிடுக்குடன் பதில் கொடுத்தாள்.

''ஓகோ! இப்படி வேறு இருக்கிறதா?'' என்றான் அவன் புன்னகை விரிய ''ஆனால், என்னிடம் பணியில் இருந்த அவரைப் பற்றி, உனக்கென்னம்மா கவலை? எப்படியோ போகட்டும் என்று போய்க் கொண்டே இருக்க வேண்டியதுதானே?'' என்று கேட்டான் அவன்.

அவனது புன்னகையை விழி விரியப் பார்த்தபோதும், அவளது பதில் தங்கு தடையற்று வந்தது. ''அதெப்படி? நமக்குத் தெரிந்த ஒருவருக்குக் கஷ்டம் என்றால், உதவி செய்யாமல் சும்மா இருக்க முடியுமா? செய்துதானே ஆக வேண்டும்?'' என்று வினாடி கூடத் தயங்காமல் கேட்டாள் சாரூபி.

இப்போது திகைத்து நின்றவன் அவன்!



# 2

தீனதயாளன் திகைத்து நின்றது ஒரு கணமே. அதற் குள்ளாகவே இவன் நம்மைப் போல நினைக்கவில்லை

என்பது போன்ற எண்ணமே சாரூபிக்குத் தோன்றி விட்டது.

ஆனால் உடனேயே அந்த எண்ணத்தை மறுப் பவன்போல ''பெரியசாமி பற்றி விசாரிக்கத்தான் உள்ளே போய்க் கொண்டு இருக்கிறேன். உனக்கும் அக்கறை உள்ள பெரியவர், வாயேன், பேசிக் கொண்டே போக லாம்'' என்று அழைத்தான் அவன்.

தப்பாக நினைத்ததற்கு உள்ளூர குட்டிக் கொண்டாள், அவள் ''இல்லை சார். நான் ஏற்கனவே அவரைப் போய்ப் பார்த்து வந்துவிட்டேன். நீங்கள் போங்கள். நான் கிளம்புகிறேன்'' என்று வழியில் நின்றவனைச் சுற்றிக் கொண்டு வெளியே செல்லக் காலடி எடுத்து வைத் தாள்.

''காரில் கொண்டு விடுகிறேன்.''

கேள்வி கேட்டபடியே, தீனதயாளன் லேசாகத் திரும்பிய விதம், அவள் கூட வருவதை நிச்சயத்துடன் எதிர்பார்ப்பதைக் காட்டவும், உள்ளே சுளித்தது அவ ளுக்கு.

அதென்ன அவ்வளவு நிச்சயம்? அதுவும் அப்படி விரட்டியடித்துவிட்டு?

''இல்லை சார். என் ஸ்கூட்டி இருக்கிறது. வருகிறேன். நீங்கள் உள்ளே போய்ப் பாருங்கள்'' என்று விட்டு நில் லாமல் நடந்து விட்டாள்.

ஓட்டி ஓட்டி, உடம்பின் ஓர் அங்கம் போலப் பழகி விட்டதால், ஸ்கூட்டியை ஓட்டும்போது முழுக் கவனத் தையும் அதிலேயே வைத்திருக்கும் அவசியம் சாரூபிக்குக்

கிடையாது. சைக்கிள் ஓட்டுவது போலக் கை, கால்கள் தானாகச் செயல்படும். எனவே, செல்லும்போதே, அடுத்துச் செய்ய வேண்டிய வேலை பற்றித் திட்டமிடு வது, அவளது வழக்கம், ஆனால், இன்று அதில் மனம் ஓடவில்லை.

அவளது சிந்தனையில், தீனதயாளன் குறுக்கிட்டுக் கொண்டே இருந்தான்.

அவ்வளவு சாதாரணமாக காரில் கொண்டு விடுவ தாகக் கூறினானே! எப்படி? அன்னியனான அவன்கூட, அவள் வருவாள் என்று, அவனுக்கு என்ன நிச்சயம்? அவன், பெரியசாமி பற்றி விசாரிக்க வந்தது என்ன ஆயிற்று? அல்லது அவன் விசாரித்து முடிக்கும்வரை யும், அவனுக்காக அவள் காத்திருப்பாள் என்று எண்ணி னானா? அவளுக்கு என்று வேறு வேலை எதுவும் இருக்கலாம் என்கிற எண்ணமே இல்லையே!

காரில் கொண்டு விடட்டுமா? வருகிறாயா என்று அவளிடம் கேட்கக் கூட அவனுக்குத் தோன்றவில்லை!

எல்லாமே, சாரூபியை ஒரு மாதிரி உறுத்தின.

என்னவோ, தான், தன் விருப்பம் தவிர வேறு நினைவே இல்லாத... மற்றவர்களுக்கும் மறுப்பு... மாற்றுக் கருத்து இருக்கும் என்ற எண்ணமே இல்லாத அளவுக்கு அகம்பாவி அவன் என்று, சாரூபாவுக்குத் தோன்றியது.

அல்லது, நாம்தான், சின்ன விஷயத்தைப் பெரிதாக எடுத்து, மனதைக் குழப்பிக் கொள்கிறோமோ என்று ஒருதரம் அவள் யோசித்தாள். ஆனால் அறியாத ஒரு

மனிதரின் தன்மை வெளிப்படுவதும், அவரது சிறு சிறு செய்கைகளின் மூலமாகத்தானே?

அப்படிப் பார்க்கும்போது, தீனதயாளனைப் பற்றிய கணிப்பு, அவளுக்கு நன்றாகவே வரவில்லை.

ஆனால், எப்படியும் ஒரு பழைய பணியாளரின் சிகிச்சைக்காக பணம் உதவி செய்கிறவன், ஒரே கெட்டவனாக எப்படி இருக்க முடியும் என்று, அவளது மனமே எதிர்வாதமும் செய்தது!

அலுவலகம் வந்துவிடவே, தனக்குள்ளே நடந்த பிரதிவாதங்களை ஒதுக்கிவிட்டு, வேலையில் முனைந்தாள் அவள். நல்ல வேளையாக, முழுக் கவனத்துடன் வேலை செய்வதே பழக்கம் என்பதால், அவளுக்கு அது எளிதாகவும் இருந்தது.

அடுத்து ஒரு தரமும், பெரியசாமியைப் பார்த்துவர அவள் சென்ற அதே சமயத்திலேயே, தீனதயாளனும் மருத்துவமனைக்கு வந்தான்.

''பூரண குணமாகிவிடும் என்று, தலைமை டாக்டர் சொன்னார். அப்புறமாக மூன்று மாத ஓய்வுக்குப் பிறகு, முன்னைப் போலக் காவலுக்குக் கூடப் போகலாமாம்'' என்று தகவலும் தெரிவித்தான்.

''ஓ!'' என்று மலர்ந்த முகம் உடனேயே வாடவும், அவளிடம் காரணம் கேட்டான் ''என்னவோ பெரியசாமிக்குக் குணமாவதுதான் உலகத்திலேயே மகா முக்கியம், அதற்கு உதவாதவர்கள், எதற்குமே உதவாதவர்கள் என்பது போலப் பேசினாய். இப்போது குண

மாகிறது என்றால், அதற்கான சந்தோஷத்தை முகத்தில் காணோமே?'' என்று கேட்டான் தீனதயாளன்.

''அதில்லை தீனதயாளன் சார், பெரியவர் ஓய்வெடுக்க வேண்டும் என்றீர்களே...'' என்று தொடங்கி முதியவரின் குடும்ப நிலைமை பற்றி அவனிடம் எடுத்துச் சொன்னாள். ''பணத்துக்கு மிகுந்த தேவை இருந்ததால்தான், இந்த வயதிலும் அவர் செக்யூரிட்டி வேலைக்குச் சென்றதே. இனி என்ன செய்யப் போகிறாரோ என்று, யோசித்தேன். ஆனால் இதற்கு யார் என்ன செய்ய முடியும்? பெரியசாமியுடைய மகனாகப் பார்த்துத் திருந்தினால்தான் உண்டு...'' என்றாள் அவள், சிறு வருத்தத்துடன்.

''தானாகத் திருந்தாவிட்டால், திருந்த வைப்போம்!'' என்றான் தீனதயாளன் அலட்சியமாக.

''அப்படிப் புத்தி சொல்லி ஒருவரைத் திருத்துவது என்பது, லேசில் நடப்பது இல்லை, கட்டிக் கொடுத்த சோறும் சொல்லிக் கொடுத்த வார்த்தையும் என்று முன்பே சொல்லி வைத்திருக்கி...'' என்று தொடங்கிய சாரூபி இடையிலேயே பேச்சை நிறுத்தி விட்டாள்.

இவனிடம் சொல்லிப் பயனிராது. தன் விருப்பம் போல நடக்கிறவன் அடுத்தவர் சொல்லி, அதற்காக செய்வது, செய்யாதது என்று கிடையாது. பெரியசாமிக்கு அவன் உதவி புரிவதுகூட, அப்படித்தான். அவள்தான், என்ன வேண்டுமானாலும் பண்ணிக்கொள் என்று ஃபைலை அவன் கையில் திணித்துவிட்டுச் சென்றுவிட்டாளே!

இப்போதும் அவனது விருப்பம்போல முயற்சிக் கட்டும். பலன் கிடைத்தால் நல்லதுதானே?

அவளே எதிர்பாராத விதமாக, அறுவடையே கிடைத் திருந்தது.

அதிலும், மனிதன் எதையும் அரை குறையாகச் செய்வது இல்லை என்பதும் அவளுக்குப் புரிந்தது.

உடம்பு குணமாகிச் சென்ற பிறகு, பெரியசாமி நல்லபடியாக வாழ்வதற்காக, அவருடைய மகனுக்கு ஒரு வேலை போட்டுக் கொடுத்ததோடு, அவன் நிறுத்திக் கொள்ளவில்லை. அவனிடம் வேலைக்கு வந்த பிறகு குடிகிடி என்று போவதாகத் தெரிந்தால், ஆள் வைத்து அடி பின்னி விடப் போவதாக அவனை மிரட்டியும் வைக்கவே, பெரியசாமி மருமகளுக்கு மகிழ்ச்சி தாங்க வில்லை.

''இதுபோல நல்லவரு என்பதாலேதான், அந்தய் யாவைப் பார்க்கணுமின்னு மாமா திரும்பத் திரும்பச் சொன்னாரு போல! மதி புடிச்ச முட்டாச் சிறுக்கி, நாந் தான் அப்பப் புரியாம, ரொம்பப் படபடப்பாப் பேசிப்புட் டேம்மா!'' என்று வருத்தப்பட்டாள்.

சாரூபாவுக்கும் உள்ளூரக் குன்றல்தான். இப்படிப் பட்டவனைப் போய்த் தப்பாகவே நினைத்தாளே!

ஆனால், அவள் மனதார நன்றி தெரிவிக்க முயன்ற போது, தீனதயாளன் அதை ஏற்கவில்லை.

புருவம் உயர்த்தி ''என்னிடம் வேலை பார்த்துப் பணி ஒய்வு பெற்றவர் பெரியசாமி. அவருக்கு நான் உதவி

செய்ததற்கு, நீ என்ன நன்றி சொல்வது? அப்படி ஒரு வாய்ப்பைத் தந்ததற்காக, நான் தானே, உனக்கு நன்றி சொல்ல வேண்டும்?'' என்று கேட்டான் அவன்.

அவளது வார்த்தைகளைக் கொண்டே, அவளை மடக்குகிறானாம்! ஆனால், அவளுக்குக் கோபம் வர வில்லை. மாறாக, இந்த வார்த்தையாடல் அவளுக்கு உற்சாகத்தையே அளித்தது.

எனவே பதிலுக்கு ''பெரியசாமி உங்களுடைய மாஜி பணியாள்தான், தீனதயாளன் சார். ஆனால், அவர் எங்களுடைய இப்போதைய காவலாளும் கூட, அத னால் அவருடைய குடும்பத்துக்கு உதவியதற்காக நன்றி செலுத்த, எனக்கு நிச்சயமாக உரிமை உண்டு, சார். அதனால் நியாயமான என் மனமார்ந்த நன்றியை நல்லபடியாக ஏற்றுக் கொள்ளுங்கள்!'' என்று முடித் தாள்.

சட்டெனச் சிரித்தான் அவன்.

செதுக்கியது போன்ற உதடுகள் பிரிந்து, தெரிந்த வரிசையான வெண்ணிறப் பற்களைச் சிறு திகைப்புடன் அவள் பார்க்கும்போதே ''ஒரு வழியாகத் தலையைச் சுற்றி, மூக்கைத் தொட்டு விட்டாயாக்கும்? போகட்டும். ஒரே ஒரு நிபந்தனையோடு, உன் மனமார்ந்த நன்றியை நான் ஏற்றுக் கொள்கிறேன்'' என்றான் தீனதயாளன் மர்மப் புன்னகையோடு.

''எ... என்ன நிபந்தனை?''

''ரொம்ப பெரிய வில்லத்தனமான நிபந்தனை! என்னோடு காபி ஷாப்புக்கு வந்து காபி குடிக்க வேண்

டும்'' என்று அவன் இலகுவாகக் கூறும்போதே, சாரூபி யின் முகம் மாறியது.

ஹோட்டலுக்குக் கூப்பிடுவது வில்லத்தனம் இல் லையா? எளிதாகக் கூறுகிறானே!

''சாரி சார். தப்பாக எண்ண வேண்டாம். ஹோட்டலுக் கெல்லாம் நான் வருவதற்கில்லை'' என்றாள் அவள் கறார் குரலில்.

''தப்பாக 'நான்' நினைக்கவில்லை. ஆனால், என் னவோ ஹோட்டலில் ரூம் போட்டு, இராத் தங்கலுக்கு அழைப்பது போல, நீயல்லவா தப்பாக எண்ணிப் பேசுகிறாய்! சொல்லு, நான் ஒரு காபி அருந்தத்தானே, கூப்பிட்டேன்?'' என்று விளக்கம் கேட்டான் அவன்.

ஹோட்டலில் ரூம் போடுவது, அங்கே இரவில் தங்குவது போன்ற பேச்செல்லாம், சாரூபாவுக்குப் பழக்கம் இல்லை. ஆனால் இவன் பேச்சில் சரளமாக அடிபடுகிறது!

அந்தப் பேச்சை அப்படியே ஒதுக்கி ''அப்படியல்ல, தீனதயாளன் சார், வெறும் காபி குடிக்கக்கூட அன்னியர் களோடு, நான் எங்கும் போவது கிடையாது'' என்றாள் சாதாரணமாகவே.

''அன்னியரா?'' என்று வியந்தவன் அவன் ''இத்தனை முறை பார்த்துப் பழகிவிட்டோம்! சண்டைக் காட்சியைத் தவிர்த்தே மூன்று முறை! என்னை அதட்டிப் பேசுகிற அளவு உரிமை எடுத்திருக்கிறாய்! இன்னமும், நான் உனக்கு அன்னியனா? ஒருவேளை... எவனாவது பொறா

மைக்காரக் காதலன், என்னை வெட்டி, உப்புக்கண்டம் போடக் காத்திருக்கிறானா? ஐய்யோ, பயத்தில் எனக்குக் கைகால் நடுங்குகிறதே!'' என்று அவன் நடுங்கிக் காட்டிய விதத்தில், சாரூபாவுக்குச் சிரிப்பு வந்தது.

கூடவே இந்தக் 'காதலன்' கூட, இவனுக்கு சாதா ரணம்தான் போலும். தாமிரபரணித் தண்ணீர் குடித்து வளர்ந்த சிந்துப் பூந்துறைக்காரிக்கு தான், இந்தச் சென்னை நாகரீகம் இன்னமும் உடம்பில் மனதில் ஏறவில்லை.

அவளது புன்னகையைக் கவனித்து, கவனித்து ''சிரிப்பு! அப்படியானால் உப்புக் கண்டப் பயம் தேவை யில்லை! ஒருவேளை முறைப்படி யாரும் நம்மை அறிமுகப்படுத்தி வைக்கவில்லையே என்று, தயக்கமா? வாயேன், உள்ளே போய் நம் வாட்ச்மேனையே நமக்குள் அறிமுகம் செய்து வைக்கச் சொல்லலாம்'' என்று அவன் உற்சாகத்துடன் சொல்லும்போது, தன்னை மீறி, அவளது மனம் சற்று தழைந்து கொடுத்தது.

தோழிகளாக அவளோடு பழகுகிறவர்கள்கூடச் செல்லுவதுதான் ''இப்படி ஒதுங்கி ஒதுங்கிப் போய், ஊர்ப்பக்கம் என்று காட்டிக் கொள்ளாதேப்பா. பெண் களைப் போல, ஆண்களிடமும் சாதாரணமாகப் பேசிப் பழகினாலே, அனாவசியப் பிரச்சினை இராது'' என் பார்கள்.

அவளும் நிறைய மாறியிருக்கிறாள்தான். வழிந்து கொண்டு நிற்க மாட்டாளே தவிர, பின்னடித்துப்

போவது கிடையாது. ஆனால் இது போன்ற சீண்டல் களில், அவளுக்கு ஏனோ ரசனை தோன்றவில்லை.

எனவே லேசாக முறுவலித்து "அவசியமில்லை, தீனதயாளன் சார். இப்போது காபி குடிக்க வேண்டும் போலத் தோன்றவில்லை. எந்த நேரம் வேண்டு மானாலும் தண்ணீரைப் போலக் காபி குடிக்க எனக்குப் பிடிக்காது என்பதால்... போகட்டும். பெயருக்கேற்றபடி செயல்படுகிறவர் என்பதால் போகலாம், வாருங்கள்" என்றாள் அவள்.

"பெயருக்கேற்றபடி...யா? ஓகோ, தீனதயாளனா கவா? தீனர்களைக் காக்கும் தயாளன்? ஊகூம்! அது ஒன்றும் என் காரணப் பெயர் அல்ல, சாரூபா. தாத்தா பெயர் பேரனுக்கு என்று வந்தது. அவ்வளவே. உன் னைப் போலக் கடவுள் மாதிரி எல்லோர் கவலைகளை யும் ஏற்றுத் தீர்ப்பதற்கான நோக்கத்தில் வைத்ததில்லை" என்று அவன் கூறவும், அவளுக்கு ஆச்சரியமாகிப் போயிற்று.

அவளது பெயர்ப் பொருள் பற்றி, யாரும் அதிகமாக யோசித்ததோ, விசாரித்ததோ, இதுவரை கிடையாது. உறவுக்கும் பழக்கத்துக்கும் ஏற்றபடி, சும்மாச் சாரு, சாரும்மா என்று அழைப்பதோடு முடிந்துவிடும்.

பள்ளியில் சேர்க்கும்போது, சாருபாலாவில் 'லா' விட்டுப் போயிற்றா என்று, தோழிகளில் சிலர், கேட் டிருக்கிறார்கள். பெயரே அப்படித்தான் என்றபோது, அதற்கு மேல் விளக்கம் கேட்க, அவர்களுக்குமே அக்கறை இருக்கவில்லை.

ஆனால், இதை இவன் எப்படிக் கண்டுபிடித்தான்?

'சாரூபா' என்றால் கடவுளைப் போல ஆகுதல் என்று பொருள். அந்தத் தகைமையோடு நீ இருக்க வேண்டும் என்று இந்தப் பெயர் வைத்தோம் என்று, அவளுடைய தாய் ஒருதரம் சொல்லியிருக்கிறாள்.

அன்னை, தந்தை இருவருமே தொண்டு மனப் பான்மை உடையவர்கள். பிள்ளைகளையும் விட்டு விடவில்லை, சாரூபாவையும் அவளுடைய அண்ணனை யும் நன்கு படிக்க வைத்தனர். அவர்களது எதிர்காலத் துக்காக ஓரளவு சொத்து, பணமும் சேர்த்து வைத்தனர். சுகந்தன் மேல் படிப்புக்காக வெளிநாடு சென்றவன், அங்கேயே வேலையிலும் அமர்ந்து விட்டான். முக்கிய மான ஆராய்ச்சி சம்பந்தமான வேலை. அதிலும் அவ னுக்கு வேலை கிடைத்ததே பெரிய விஷயம்! சாரூபா வுக்கும் படிக்கும்போதே சென்னையில் வேலை கிடைத்தது. அவளோடு கூடவே சென்னைக்கு வந்து, பணியிடம், தங்குமிடம் எல்லாம் திருப்திகரமாக அமையக் கண்டபிறகே, அதுவும் அப்போதைக்குத் திருமணத்தில் நாட்டமில்லை என்று அவள் உறுதியாகச் சொன்ன பிறகே, பெற்றவர்கள் திரும்பிச் சென்றார்கள்.

சென்றதுமே, வேலையில் விருப்ப ஓய்வு பெற்று, அந்தப் பகுதியில் உள்ள ஒரு மாற்றுத்திறன் கொண்ட சிறுவர் பள்ளியில் பெயரளவு ஊதியம் பெற்றுக் கொண்டு பணி புரியத் தொடங்கி விட்டார்கள். இப்போதும் பெற்ற பிள்ளைகள் யார் சென்றாலும், பாசமிகு பெற்றோராய், வேண்டியது பார்த்துப் பார்த்துச் செய்வார்கள். ஆனால், அவர்களது நிறைவு, அந்தக் குறையுள்ள பிள்ளைகளின் தொண்டில்தான்.

இந்தப் பெற்றோருடைய மகளாகப் பிறந்ததாலோ என்னவோ, சாரூபாவுக்கும், யாரும் கஷ்டப்பட்டால் பிடிக்காது. தன்னால் இயன்ற உதவி செய்வாள்.

பெயருக்கேற்றபடி, விருப்பு வெறுப்பற்று, எல்லோருக்கும் செய்வதாகக் கூற முடியாது. ஆனால் பெரியசாமி போல, அறிந்தவர் தெரிந்தவர் கஷ்டப்பட்டால், கட்டாயமாக உதவிக்கு வருவாள்.

இப்போது அவளது பெயரின் பொருளை அறிந்து, அவளது குணத்தோடு இணைந்து தீனதயாளன் கூறியது, அவளுக்கு சந்தோஷமாகத்தான் இருந்தது. ஆனாலும், கடவுளைப் போல என்பது, தன் இயல்புக்கு ரொம்பவும் அதிகப்படி என்று உணர்ந்திருந்ததால் ''அப்படியெல்லாம் என்னைப் பற்றிய நினைவே இல்லாமல், நான் கொடுப்பதில்லை தீனதயாளன். அதற்கும் அளவு வைத்திருக்கிறேன்!'' என்றாள்.

''கேட்க சந்தோஷமாக இருக்கிறது!'' என்று குரலிலும் மகிழ்ச்சியைக் காட்டினான், தீனதயாளன். ''எவ்வளவோ நிம்மதியாகவும் இருக்கிறது!'' என்று அவன் சேர்த்துச் சொல்லவும், புரியாமல் திகைத்தாள் சாரூபா.

''எ... எதற்கு நிம்மதி?'' என்ற விவரம் கேட்டாள்.

''ஓ! அதுவா?'' என்று வினவியவன், ஒரு மர்மப் புன்னகையோடு ''இன்னும் கொஞ்சம் நாள் கழித்துச் சொல்லுகிறேன்'' என்று முடித்து விட்டான்.

ஆர்வமாகக் காட்டிக் கொள்ள விருப்பம் இல்லாமல், சாரூபாவும், துருவிக் கேளாமல் விட்டு விட்டாள்.

ஆயினும், அவனைப் பற்றிய எண்ணங்கள், அவ்வப் போது, அவளுள் தோன்றுவதை அவளால் தவிர்க்க முடியவில்லை. தவிர்க்கத் தோன்றவுமில்லை.

அடுத்து தீனதயாளனை சாரூபா சந்தித்தது, ஓர் அழகிய கைவினைப் பொருள் கடையில்.

ஒரு தோழியின் திருமணத்துக்குக் கொடுப்பதற்காக ஒரு நல்ல பரிசுப் பொருளை வாங்குவதற்காக, அந்தக் குழுவில் சேர்ந்த இன்னொரு தோழி லேகாவுடன் அந்தக் கடைக்குச் சாரூபா சென்றிருந்தாள்.

மூங்கில், பனை ஓலை, தேங்காய்ச் சிரட்டை போன்ற வற்றைக் கொண்டு செய்யப்பட்ட உபயோகமான அழகிய பொருட்கள், நியாயமான வேலையில் அங்கே கிடைக்கும். சிறு நகைகளைப் பத்திரப்படுத்தி வைப்ப தற்கேற்ற அழகான நகைப் பெட்டி ஒன்றை, சாரூபா விரைவிலேயே தேர்ந்தெடுத்து விட்டாள்.

ஆனால், எடுப்பதும் கழிப்பதுமாக இருந்த லேகாவின் கவனம், முழுதாகப் பரிசுப் பொருள் தேர்வில் இல்லை என்பது நன்றாகவே புரிந்தது. காரணமும் அவள் அறிந் ததே. நாலு ஆண்டுகளுக்கு முன்பாக, மிக சந்தோஷமாக அவளுடைய அக்காவுக்குத் திருமணம் செய்தார்களாம். அது பற்றி ‘செலவும் செய்து நோவையும் இழுத்துக் கொண்டோம்’ என்பாள்.

மணமகன் கணவன் வீட்டு உறவு என்பதால், அவ ளுடைய தமக்கை மல்லிகா, கணவனோடு திருமணத் துக்கு வருவாளாம். கூடவே, அந்த வீட்டுப் பட்டாளம் முழுதுமே வரும் ‘அக்கா’ என்று அவளோடு நெருங்கி

இரண்டு வார்த்தை பேசக்கூட, லேகாவால் முடியாது "பத்திரிகைத் தொழிலில் எங்கெங்கோ புகுந்து பேட்டி வாங்கியிருக்கிறேன். என் சொந்த அக்கா வீடு. எனக்கு இரும்புக் கோட்டைதான். அவளோடு சற்று நேரம் சுதந்திரமாப் பேச முடியாது" என்று வேதனைப்படுவாள். ஒளிவு மறைவாக, வீட்டில் யாரும் இல்லாதபோது, மல்லிகா போன் செய்யும்போது பேசிக் கொள்வது தான்.

திருமண விழாவிலும், சேர்ந்து உட்கார்வதுகூட, அரிதுதான்! சற்று நேரம் முயன்றுவிட்டு "எனக்கும் ஒன்றை நீயே வாங்கி வந்துவிடு, சாரு. எனக்கு மனம், இதில் நிற்கவே மாட்டேன் என்கிறது. பத்திரிகை ஆபீசுக்கு போனாலாவது, ஏதாவது வேலையில், மனம் சற்று மாறும்" என்று பணத்தை எடுத்துத் தோழியிடம் கொடுத்துவிட்டுக் கிளம்பிப் போனாள், அவள்.

அவளுக்காக, நாலு டஜன் வளையல்களை வைக்கிற மாதிரி அழகான வளையல் பெட்டி ஒன்றைத் தேர்ந்தெடுத்து, இரண்டு பொருட்களையும் தனித்தனியே 'கிஃப்ட்ராப்' செய்யச் சொன்னாள் சாருபா.

ஏற்கனவே, நாலைந்து பொருட்களை அங்கே வண்ணத் தாளில் கட்டப் படுவதற்காக, வரிசையில் காத்திருந்தன.

எனவே, தன் பரிசுப் பொருள்கள் தயாராகும்வரை, ஓரமாகக் கிடந்த நாற்காலிகளில் ஒன்றில் அமர்ந்து, சாருபா காத்திருந்தாள்.

ஒரு சில வினாடிகளிலேயே, அருகில் கிடந்த நாற்காலியில் யாரோ உட்கார்ந்தார்கள் ''என்ன, தாமரை முகம். இப்படி வாடியிருக்கிறது?'' என்று விசாரித்த படி.

பொதுவாக இப்படி யாரும் கேட்டால், ஆமாம், உன்னிடம் சொல்லத்தான் காத்துக் கிடக்கிறேனாக்கும், என்று உள்ளூர எரிச்சல்படுவாள். ஆனால் இன்று அது போல எதுவும் தோன்றாமல், மனதில் இருந்ததை, தீன தயாளனிடம் அப்படியே கொட்டித் தீர்த்தாள்.

''பாவம், தீனதயாளன், சார். ரொம்ப சந்தோஷமானது, அவர்களது குடும்பம். நாலு பேருமாகச் சேர்ந்தே வேலை செய்வார்கள், விளையாடுவார்கள். அப்படி வளர்ந்த மல்லிகா, இப்போது தன்னந்தனியே உழைத்துக் கொட்டுவதைப் பார்த்து, இங்கே மூன்று பேருமே தவித்துப் போகிறார்கள்'' என்று வருத்தப்பட்டாள்.

''மல்லிகா... உன் தோழியுடைய அக்கா பெயர் மல்லி காவா?'' என்று தீனதயாளன் கேட்கும்போதே, ''உங்கள் பொருட்கள் தயார், சார். காரில் கொண்டு வைக்கச் சொல்லவா?'' என்று கடை அலுவலர் ஒருவர் வந்து நின்றார்.

''டிக்கியில் வையுங்கள்'' என்று கார்ச் சாவியை அவரிடம் கொடுத்துவிட்டு, சாரூபாவிடம் திரும்பினான் அவன் ''நீ... ஸ்கூட்டிதானா?'' என்று வினவினான்.

''இல்லை. லேகாவோடு அவள் வண்டியில் வந்தேன். ஆனால், நீங்கள் போங்கள். யாரோ, நிறைய வாங்கி யிருக்கிறார்கள். என்னதைப் 'பாக்' பண்ண நேரமாகும்'' என்றாள் அவள்.

''நிறைய வாங்கியது, நான்தான். வரிசையாக நாலைந்து திருமணங்கள் 'உள்ளேன் அய்யா' சொல்ல வேண்டியதை இருக்கின்றன. தரமான பொருட்கள் என்பதோடு, இங்குள்ள வேலைப்பாடுகளைப் பார்க்கவும் பிடிக்கும் என்பதால், நானே வந்து வாங்குவேன். வா, உன் பொருட்கள் தயாராகி விட்டால், வாங்கிக் கொண்டு போகலாம்.''

அவளும் மறுக்கவில்லை. இதுபோன்ற மற்ற கடைகள், பொருட்கள், பெரியசாமியுடைய மகன் வேலை செய்வது என்று பேசியவாறே சென்றதில், இறங்க வேண்டிய இடம் வந்தபோது 'அதற்குள்ளாகவா' என்று அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. சற்று வருத்தமும் தான்.

''சீக்கிரமே சந்திப்போம்'' என்று தீனதயாளன் விடை பெற்றபோதும் பதிலாகத் தலையாட்டினாளே தவிர, எங்கே என்று உள்ளூர ஏக்கம்தான்.

இதுபோலத் திடீர் சந்திப்புகள் அடிக்கடி நடக்குமா, என்ன?

ஆனால், ஞாயிற்றுக்கிழமையன்று சிவானியின் திருமணத்திற்குச் சென்றால் அங்கே வாயிலை நோக்கிய வண்ணம், யாருடனோ பேசிக் கொண்டிருந்தவன் தீனதயாளனேதான்.

அவளைக் கண்டதுமே புன்னகை விரிய அவன் தலையசைத்தான்.

பதிலுக்கு முறுவலித்துவிட்டு ''வருகிறாயா? தீனதயாளனிடம் போய் ஒரு 'ஹாய்' சொல்லிவிட்டு

வருவோம்'' என்று கூட வந்த லேகாவை அழைத்தாள்.

''வேண்டாம் சாரு'' என்று மறுத்தாள் தோழி ''தீனதயாளனோடு பேசிக் கொண்டிருப்பவர், என் அக்கா கணவர். அங்கே வந்தால், அவரிடமும் இரண்டு வார்த்தை பேச வேண்டியிருக்கும். அதை மட்டும் எங்கிருந்தாவது, யாராவது பார்த்துக் கொண்டிருப்பார்கள். அப்புறம் ஆண்களைப் பார்த்தால் ஓடிச் சென்று வழிகிற என் தரக் குறைவான தன்மை பற்றி அந்த வீட்டில் பட்டி மன்றம் நடக்கும். அக்காவுக்கு அனாவசியமான வேதனை! சற்றுத் தள்ளி, தலையைக் குனிந்து கொண்டு அக்கா நிற்பதைப் பார்! சே! நல்லவேளையாக, அக்கா கணவர் அந்தப் பக்கம் பார்த்து நிற்கிறார். நான் இப்படியே நழுவி, மற்ற தோழிகளோடு போய்ச் சேர்ந்து கொள்கிறேன். நீ மட்டும் சென்று, தீனதயாளன் சாரிடம் ஹலோ சொல்லி விட்டு வா. பெரியசாமிக்கு அவ்வளவு செய்திருக்கிறாரே!'' என்று விலகிப் போனாள் அவள்.

கூடப் பிறந்த ஒரே சகோதரியுடைய கணவர். எப்படிப்பட்ட கலகலப்போடு பழக வேண்டிய உறவு! ஆனால், எப்படி விலகிப் போகும்படி இருக்கிறது என்று உள்ளூர வருந்தியவாறே சென்ற சாருபாவுக்கு, அந்த மல்லிகாவுடைய கணவனோடு தீனதயாளன் பேசியது கூடப் பிடிக்கவில்லை.

ஆனால் சற்று நேரத்தில் மனம் அடியோடு மாறி விட்டது. தீனதயாளனிடம் மதிப்பும், கூடவே ஒரு பிரியமும் உண்டாயிற்று.

# 3

தீனதயாளன் சற்றுப் பெரிய இடம். பல தொழில் களை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருப்பவன். எனவே அவ்வப்போது யாராவது முகமன் தெரிவிப் பதும், இவன் தலையசைத்து அதை ஏற்பதும் நடந்து கொண்டே இருந்ததால், கூட நின்று பேசிக் கொண் டிருந்தவன், தீனதயாளனின் தலையசைப்பைப் பெரிதாக எண்ணவில்லை போலும்.

அதனாலேயே, அவன் மனைவியுடைய தங்கை, சத்தமின்றி, நழுவிச் செல்லவும் முடிந்தது. பின்புறமாக அவர்களை அணுகிய சாரூபா அந்த இருவரின் உரை யாடல்களைக் கேட்கவும் முடிந்தது.

மல்லிகாவுடைய கணவன், தன் மனைவியைப் பற்றித் தீனதயாளனிடம் குறை சொல்லிக் கொண்டிருந் தான்.

சட்டென நின்றுவிட்டாள், சாரூபா, யார் யாரைப் பற்றிக் குறை கூறுவது?

இன்னொருவர் கேட்கக் கூடும் என்கிற எண்ணமே இல்லாமல், உரக்கவே தன் போக்கில் தொடர்ந்து பேசினான் அவன் ''பார் தீனா, முகத்தை எப்படி வைத்துக் கொண்டிருக்கிறாள்! சந்தோஷமாக ஒரு திருமணத்துக்கு

அழைத்து வந்திருக்கிறேன். முகம் அழுது வடிவதைப் பார். எல்லோரும் என்ன நினைப்பார்கள்? உன்கூட வரப் பிடிக்கவில்லையா, அல்லது கல்யாணம் முடிந்து, உன்னோடு நானும், நம் வீட்டுக்கு வருவதுதான் பிடிக்கவில்லையா என்று அக்கா கேட்கிறாள். இதற்கு, நான் என்ன பதில் சொல்வது? சே! ரொம்ப அவமானமாகிப் போயிற்று!'' என்று குற்றப் பத்திரிகை படித்தான் அவன்.

தீனதயாளனின் ஓரப்பார்வை, சாருபாவின் மேல் பட்டு விலகியது.

''பார் பூபால், உன்னிடம் வருவதா, வேறு எங்கேனும் போவதா என்று புரியாமல், உன் மனைவி நிற்பதைப் பார். அவளை இங்கே வரச் சொல்லேன்'' என்றான் நண்பனிடம்.

''வரச் சொல்லுகிறேன். நீ அவளுக்குக் கொஞ்சம் புத்தி சொல்லுப்பா'' என்ற பூபால் ''மல்லி!'' என்று உரக்க அழைக்க, அருகே வருமாறு கையால் சைகை செய்தான்.

மல்லிகா அருகில் வந்ததும் ''என்னம்மா, எப்படி இருக்கிறாய்? சுகமா?'' என்று குசலம் விசாரித்தான்.

''உம். நன்றாக இருக்கிறேன் அண்ணா'' என்று மெல்லிய குரலில் பதிலளித்தாள் மல்லிகா.

''இன்று மதியதுக்கு என்னம்மா உணவு?'' என்று தீனதயாளன் தொடர்ந்து கேட்கவும், சாருபிக்கு லேசாகத் தூக்கி வாரிப் போட்டது.

கல்யாண வீட்டுக்கு வந்துவிட்டு, மதிய உணவு மெனுவை, சக விருந்தாளியிடம் எப்படிக் கேட்கிறாய்?

அந்தப் பக்கமாகக் கிடந்த நாற்காலிகளுள் ஒன்றில் அமர்ந்து நடப்பதை கவனித்தாள். அதாவது ஒட்டுக் கேட்டாள்.

அவளைப் போலவே எண்ணியவனாய், ''இங்கே திருமண விருந்து அயிட்டங்களைப் பற்றிச் சாப்பிடும் போது, தெரிந்து விடாதா? இவளிடம் போய் கேட்கி றாயே!'' என்றான் பூபாலன்.

''டேய், உன்னிடமா கேட்டேன்? வாயை மூடிக் கொண்டு சும்மா இரு. தங்கச்சி, நீ சொல்லும்மா, என்ன சாப்பாடு?'' என்று விடாமல் அவளை வினவினான் தீனதயாளன்.

அவனுக்கு பதில் சொல்பவளாய், ''சாதம், வெங்காய சாம்பார், கத்தரிக்காய் வதக்கல், பீன்ஸ் பொரியல், எலு மிச்சை ரசம், மாங்காய் இனிப்புப் பச்சடி'' என்று மல்லிகா வரிசையாக அடுக்கவும், சாரூபிக்கு மறுபடியும் தூக்கி வாரிப் போட்டது.

அக்கா கணவனுக்கு உறவு என்பதலால், குடும்பமே வரும் என்று லேகா சொன்னது, அவளுக்கு நினைவு வந்தது. குடும்பமாக திருமணத்துக்கு வந்துவிட்டு, வீட்டில் என்ன சமையல்?

அதையே தீனதயாளனும் கேட்டான் ''உறவுக்காரர் வீட்டுக் கல்யாணம். குடும்பத்தோடு இங்கேதானே, சாப்பிடுவீர்கள்? அப்புறம், வீட்டில் என்ன சமையல்?'' என்று மேலும் விசாரித்தான்.

''ஆமாம், அதானே? அசட்டுத்தனமாக வீட்டிலே வேறு சமைத்துவிட்டு, இங்கே அழுது வடிகிறாயா?'' என்று எரிச்சல் காட்டினான் பூபாலன்.

மின் வெட்டாய் உயர்ந்த பார்வை, உடனேயே மறுபடியும் தரையில் படிய, ''அப்படியே அண்ணி வீட்டுக்கு வருவார்கள் என்று அவர்களுக்குப் பிடித்ததாக அத்தை செய்யச் சொன்னார்கள்'' என்றாள் மல்லிகா, உணர்ச்சி துடைத்த குரலில்.

பூபாலன் நின்ற இடத்திலேயே இருந்து, பிரமாதமாய் 'அந்தர்பல்டி' அடித்தான்.

''ஆமாம். அக்கா, வீட்டுக்கு விருந்தாளி அல்லவா? விருந்தாளிக்கு, நன்றாகச் செய்ய வேண்டாமா?'' என்று சற்று உயர்த்திய அதிகாரக் குரலில் கூறினான்.

''செய்யலாம் செய்யலாம். ஆனால் வீட்டிலும் இவ்வளவு வேலையும் செய்துவிட்டு வந்ததால்தான், சற்றுக் களைத்துத் தெரிகிறாய் போல! அதோ, யாரோ கூப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன், போய் உட்கார்ந்து கொள்ளம்மா'' என்று மல்லிகாவை அனுப்பி வைத்தான்.

அவள் சென்றதும், நண்பனிடம் பேசினான் ''என்ன பூபால் காலையில் எழுந்து, இவ்வளவு வேலை செய்துவிட்டு, பட்டுச் சேலை வேறு கட்டி, இங்கே கிளம்பி வருவது என்றால், உன் மனைவிக்கு அசதியாகத்தானே இருக்கும். யோசித்துப் பாராமல் குறை கூறுகிறாயே! இதற்கு மேல், வீட்டிற்குப் போய், உன் அக்காவுக்கு விருந்து உபசாரம் வேறு செய்யச் சொல்வாய். பாவம் சாதுப் பெண். மறுக்காமல் செய்கிறாளே என்று பாராட்டாமல்?''

''பாராட்டுவதா?'' என்று குறுக்கிட்டான் பூபாலன் ''திருமணம் உனக்கு இன்னும் ஆகவில்லை அல்லவா?

உனக்கு இந்தப் பெண்களைப் பற்றி ஒன்றுமே தெரிய வில்லை! ஒரு நல்ல வார்த்தை சொல்லிப் பாரேன். அப்புறம் எகிறிவிடுவாள்ப்பா. தலை மேலேயே ஏறி உட்கார்ந்து விடுவார்கள்! இவள்களை எல்லாம், அவ்வப் போது மண்டையில் தட்டி வைத்தால்தான், நமக்கு உதவும். தெரிந்து கொள்'' என்று அவன் வீரம் பேசவும், சாருபாவுக்கு நெஞ்சு கொதித்தது!

'இவள்களாம்!' 'மண்டையில் தட்டி வைப்பதாமே!' செலவும் செய்து நோவையும் இழுத்துக் கொண்டோம் என்று லேசாக சொன்னதன் முழு அர்த்தமும், இப்போது அவளுக்கு நன்றாகப் புரிந்தது.

தட்டப்பட வேண்டியது, இவனது மண்டை அல் லவா?

நல்லவேளையாகத் தீனதயாளனும் கோபப்பட்டான்.

''என்னடா உதவும்? தங்கச்சி உன் மனைவியா? அல்லது உன் வீட்டு வேலைக்காரியா? உன் அக்காதான் என்ன, உள்ளூரில் இருந்து கொண்டு தினமும் வரு கிறவள்தானே? அப்புறம் என்ன, விருந்தாளி? அத் தோடு, இங்கே திருமணத்திலும் சாப்பிடுவாள்தானே? அதற்கு மேல் வீட்டில் எதற்கு இன்னொரு விருந்து?'' என்று எரிச்சல் பட்டான்.

பணக்கார நண்பனின் கோபம், பூபாலனுக்கும் பிடிக்கவில்லை. எனவே தன்னிலை விளக்கமாக ''இப் படி ஏதாவது காரணம் காட்டி, ஒருநாள் விட்டு விட்டால், பிறகு அதையே இந்தப் பெண்கள் வழக்கமாக்கி விடு வார்கள், தீனா. பிறகு அதையே எப்போதும் கொண்டு

வந்து, யாருக்கும் சாப்பாடு கொடுக்காமல், சும்மா உட்கார்ந்து விடுவார்கள். அம்மாவும், அக்காவும் எத்தனை பார்த்திருக்கிறார்கள்! பெரியவர்கள், அவர் களுக்குத் தெரியாததா? வேண்டுமானால், அவர்களிடம் நீயே கேட்டுப்பார்!'' என்று தீனதயாளனுக்குத் தெளிவு படுத்த முயன்றான் அவன்.

மறுப்பாகத் தலையசைத்துவிட்டு ''விட்டுவிடு, பூபால். இனிமேல், உனக்காகப் புத்தி வந்தால்தான் உண்டு. ஆனால், ஒன்று மட்டும் யோசி. யாரோ பெற்று வளர்த்து, உன் வீட்டுக்கு வேலைக்கு அனுப்பியதாக நினைப்பது, சுத்தப் பட்டிக்காட்டுத் தனமில்லையா? எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது. நீயும் தனியாக அமர்ந்து இது பற்றி சிந்தித்துப் பார்... வேண்டாம். இப்போது, இது பற்றி இனிப்பேச்சு வேண்டாம். அதோ உன் அக்கா உன்னைத் தேடி வருவது போலத் தெரி கிறது. நானும், மணமகன் தந்தையோடு இரண்டு வார்த்தை பேசிப் பரிசைக் கொடுத்துவிட்டுக் கிளம்ப வேண்டும்'' என்று தீர்மானமான குரலில் கூறித் திரும் பவே, வேறு வழியின்றி, பூபாலன் தன் குடும்பத்தாரை நோக்கிச் சென்றான்.

மணமேடையைப் பார்க்கிறவள் போல அமர்ந்து, அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த சாரூபியின் மனம், அப்படியே தீனதயாளனை சிம்மாசனத்தில் ஏற்றி வைத்துவிட்டது.

ஆனால், அங்கே உட்கார்ந்திருந்த அவ்வளவு நேரத் தில், எத்தனை பேரிடம் அவரவருக்கு ஏற்றபடி தலை யசைத்தான், முறுவல் பூத்தான் என்பதையும் கவனித்துக்

கொண்டே இருந்ததால், அந்த இடத்தில் அவனிடம் போய்த் தனித்துப் பேச, அவளுக்குத் தயக்கமாக இருந்தது.

எனவே, மனநிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டுவது போன்ற ஒரு பார்வையுடன் எழுந்தவள், மிகச் சிறிய ஒரு லேசான தலையசைப்பின் மூலம் விடை பெற்றுக் கொண்டு, லேகா உள்ளிட்ட தோழிகள் இருந்த இடம் நோக்கிச் சென்றாள்.

வரிசையாகக் கிடந்த நாற்காலிகளை அவரவர் வசதிக்கேற்ப இழுத்துப் போட்டு அமர்ந்திருந்த ஆட்களைச் சுற்றிக் கொண்டு செல்லும்போது, ஓரக்கண் பார்வையில் அவன், அவளையே பார்த்தபடி நிற்பது தெரிய, நெஞ்சுக்குள் ஏதோ சிறகடித்தது, அவளுக்கு.

பின்னர் இதுபற்றிப் பேசும்போது, அன்று முழுவதும் லேகா அழுதது பற்றி, தீனதயாளனிடம் சாரூபா தெரிவித்தாள். ''ரொம்ப உற்சாகமான பெண்ணாம், மல்லிகா. ஆனால் இப்போதெல்லாம் அவள் கண்களில் அவ்வப்போது நிராசை தெரிகிறதாம். ஏதேனும் தப்பான முடிவை எடுத்துவிடக் கூடாதே என்று, லேகா பயப்படுகிறாள். துணிந்து ஏதாவது செய்யவும், பெற்றோர் பயப்படுகிறார்களாம். மகளின் வாழ்க்கை அழிந்து போகுமோ என்று அச்சமாம். என்ன பெரிய வாழ்க்கை!'' என்று கோபமும் வருத்தமுமாகக் கூறினாள்.

''ம்ம்ம்...'' என்று அவளை நேராகப் பார்த்து, தீனதயாளன் ஒரு கேள்வி கேட்டான். ''மல்லிகாவுக்கு ஏதாவது என்றால், நீயும் வருத்தப்படுவாயா?'' என்று வினவினான்.

''கட்டாயம்!'' என்றாள் சாரூபி கணமும் தாமதியாமல் ''அவள் லேகாவுடைய அக்கா ஆயிற்றே! சும்மாவே, நமக்குத் தெரிய ஒருவர் கஷ்டப்பட்டால் வருத்தமாக இராதா?''

''ஆமாமாம். அப்படி ஒன்று இருக்கிறதல்லவா? விட்டுவிட முடியாதே!'' என்றான் அவன் கேலியாக...

கேலிதானா?

ஒரு வாரம் கழித்து ''உன் தோழி லேகாவுடைய வீட்டுக்குப் போகிறேன். என்னோடு வருகிறாயா?'' என்று தீனதயாளன் அழைத்தான்.

அவ்வப்போது அவனோடு வெளியே செல்வது பழகிவிட்டபோதும், இங்கே எதற்காக என்று ஒரு கணம் சாரூபி பதறிவிட்டாள் ''அங்கே எதற்காக, தீனதயாளன் சார்? லேகா அக்காவுக்கு ஒன்றுமில்லையே?'' என்று பயந்த குரலில் கேட்டாள்.

''அவளுக்கென்ன... சட்! என்ன அசட்டுக் கேள்வி? அப்படி ஏதேனும் என்றால், லேகாவை அல்லவா அழைத்துப் போக வேண்டும்?'' என்று சிறு சினம் காட்டிக் கேட்டான் அவன்.

உண்மைதானே என்று ஆறுதல் அடைந்தபோதும், அவனது கேள்வி அவளை உறுத்தியது. நீ நினைப்பது போல எதுவும் நடக்கவில்லை என்று மட்டும் சொல்லியிருக்கலாமே என்று நினைத்தாள். ஆயினும் பயப்படத் தேவையில்லை என்கிற நிம்மதியில், சந்தோஷமாகக் காரில் ஏறி உட்கார்ந்து விட்டாள்.

அவனும், இதுபற்றி மேலே பேசாமல், வேறு எதையோ பற்றிச் சொல்லலானான். பல்வேறு இடங்களுக்குச் சென்று வந்தவன். அங்கே அவன் கண்ட சிறு சிறு விஷயங்களைப் பற்றிச் சுவைப்படச் சொல்வது கேட்க நன்றாக இருக்கும். பேச்சு சுவாரசியத்தில், மந்தை வெளிக்கு, அடுத்த தெருபோல விரைவில் சென்று விட்ட மாதிரி இருந்தது அவளுக்கு.

தீனதயாளனோடு சென்றதாலோ என்னவோ, சாருபிக்கும் உபசாரம் பலமாக இருந்தது.

லேகா சொல்வதுபோல, பூபாலனுடைய தமக்கை வைரமணி அப்போதும் அங்கேதான் இருந்தாள்.

வரவேற்றதோடு மல்லிகா உள்ளே சென்றுவிட, மற்றவர்கள் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

சற்று நேரம் கழித்து, வைரமணி எழுந்து உள்ளே சென்றாள். அழகான கண்ணாடி டம்ளர்களில் பழச்சாறு எடுத்து வந்து, எல்லோருக்கும் வழங்கினாள்.

''தீனாத்தம்பி, சுவை சரியாக இருக்கிறதா என்று பாருங்கள். இந்த எலுமிச்சைச் சாறிலே, இனிப்பைக் குறைவாகக் கலந்து, ஒரு சிட்டிகை உப்புப் போட்டால்தானே, உங்களுக்குப் பிடிக்கும்?'' என்று வழிந்தாள்.

''பரவாயில்லையே! ஒரு வருஷம் இருக்குமா, தீனாவை நீ பார்த்து? அப்படியே நினைவு வைத்திருக்கிறாயே!'' என்றாள் பூபாலனுடைய தாயார்.

''நமக்கு ஒருவரைப் பிடித்துப் போனால், அவரைப் பற்றிய சின்ன விவரம்கூட, மறக்கவே மறக்காதும்மா'' என்றாள் வைரம்.

தீனதயாளனிடம் இவ்வளவு பணம் இல்லாவிட்டால், அவனது பெயராவது, இந்தம்மாவுக்கு நினைவிருக்குமா? என்று சாரூபி யோசித்தாள்.

அதற்குள்ளாக, மனைவியைக் கூப்பிடும்படி, தீனதயாளன் நண்பனிடம் கூறினான்.

''அவள் எதற்கு? குளிக்கப் போக வேண்டும் என்றாளே! உனக்கு என்ன வேண்டும் என்றாலும், என்னிடம் சொல்லுப்பா?'' என்றாள் வைரம், கரிசனமாய்.

ஆனால், அதற்குள் பூபாலன் உள்ளே சென்று மனைவியை அழைத்துக் கொண்டு வந்துவிட, வேறு வழியின்றி, பேச்சை நிறுத்தினாள்.

''உட்காரம்மா. முக்கியமான விஷயம் பேச வேண்டும். ஆனால் அதற்கு முன் உன் எலுமிச்சைச் சாறுக்கு மிக்க நன்றி. உப்பு, இனிப்பு இரண்டுமே சரியான அளவில் கலந்திருந்தாய்.''

அவளுக்கும் உள்ளூர ஆச்சரியமே என்றாலும், தீனதயாளனின் நன்றி அறிவிப்பைச் சாரூபி, சந்தோஷத்துடன் ரசித்தாள்.

திகைப்பும் கோபமுமாகப் பாம்பாய்த் தலையை நிமிர்த்திய வைரமணி, வேறு வழியின்றிப் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

மாமியாரின் முக பாவமும், கிட்டத்தட்ட அதேதான். ஆண்கள் முகத்தில் குழப்பம்.

மல்லிகா முகத்திலும் முதலில் தோன்றியது, ஆச்சரியக் குறியே.

பிறகே, தீனதயாளனின் பேச்சு முழுதாகப் புரிந்தது போல, பளீரென்று முகத்தை மாற்றி அமைத்தது போன்ற ஒரு புன்னகை செய்தாள். ''தாங்க்ஸ், அண்ணா. இன்னும் கொஞ்சம் குடிக்கிறீர்களா?'' என்று மெல்ல கேட்டபடி எழலானாள்.

''குடிக்கிறேன். ஆனால் இப்போதல்ல. உங்கள் எல்லோரிடமும் ஒரு விஷயம் பேச வேண்டும். பேசி முடித்த பிறகு, அடுத்த டம்ளர் ஜூஸ், நீ தரவேண்டும்'' என்று விட்டு, தீனதயாளன் தன் திட்டத்தை விவரித்தான்.

தீனதயாளனுக்கு சலவைக்கல் தொழில் ஒன்று தொடங்க ஆசை. ராஜஸ்தானில்தான் நல்ல உயர் ரகச் சிவப்புக் கற்கள் கிடைக்கின்றன. அவற்றை பாளம் பாளமாக இங்கே கொணர்ந்து, தேவைப்படும் அளவில் வெட்டி, பாலிஸ் செய்யும்போது, நிறைய வீணாகும். அப்படி வீணாகும் பொருளுக்கும் சேர்த்துச் செலவு செய்து இங்கே கொண்டு வருவானேன்? அதைவிட, அங்கேயே ஒரு தொழிற்சாலையைத் தொடங்கி, வேண்டிய அளவுகளில் கற்களை அறுத்து, பாலீஷ் பண்ணி, தரையில் பதிப்பதற்கு தயார் நிலையில் இங்கே கொண்டு வருவது மேல் அல்லவா?

பூபாலன் பெரிய கட்டிடங்களுக்குச் சலவைக்கல் பதித்துக் கொடுக்கும் நிறுவனத்தில் முக்கிய வேலை பார்ப்பவன். எனவே, கற்களின் தரம், மற்றும் விவரங்கள் அறிந்தவன்.

எனவே, இந்தத் தொழிற்சாலைப் பொறுப்பை அவன் ஏற்றுக் கொண்டால், எவன் எப்படி ஏமாற்றுகிறானோ

என்கிற கவலையில்லாமல், தீனதயாளன் நிம்மதியாக இருப்பான்.

பூபாலனின் பணிக்கான ஊதியம், இங்கு அவன் வாங்குவதற்கு இரு மடங்கு. தொடக்கத்திலிருந்து எல்லாமே பூபாலனே பார்க்கப் போவதால், தீனதயாள னுக்கு அடுத்த அதிகாரம் அவனுடையதாக இருக்கும். குடும்பத்தோடு போகலாம். வீடு, கார் எல்லா வசதிகளும் கொடுக்கப்படும்.

இந்த யோசனைக்கு பூபாலனின் பதில் என்ன?

இரண்டு மடங்கு சம்பளம்? என்று பெரியவர்கள் வாயைப் பிளந்தனர்.

கண்கள் பளிச்சிட நிமிர்ந்து பார்த்த மல்லிகா, உட னேயே இமைகளைத் தாழ்த்திப் பார்வையை மறைத்துக் கொண்டாள்.

''பிரமாதம்!'' என்றாள் சாரூபா தன்னை மீறி.

யோசனையோடு பார்த்துக் கொண்டிருந்த வைரமணி ''என்ன பிரமாதம்? எதற்கு அப்படிச் சொல்லுகிறாய்?'' என்று அவளிடம் பாய்ந்தாள்.

சாரூபாவும் அதற்குள் பதில் சொல்லத் தயாராகி விட்டாள் ''என்ன... பிரமாதமா? முதலில் இன்றைய வரு மானத்தை விட இரு மடங்கு கிடைக்கப் போகிறது. அடுத்து, வெறும் பணியாளராக ஒட்டு உறவற்ற முத லாளி முதல், மேல் அதிகாரி வரை யார் யாரோ ஏவிய தற்கு ஓடிக் கொண்டிருந்தவர், இப்போது முழு அதி காரத்துடன் தன் பொறுப்பாய் தொழிலை நடத்தப்

போகிறார். பதில் சொல்ல வேண்டியது, உற்ற நண்பர் ஒருவருக்கு மட்டுமே, இதைவிட உயர்வாக என்ன கிடைக்கும்?'' என்று கேட்டாள்.

''அது, இங்கேயே கிடைத்தால் உயர்வுதான். எவ்வளவு தூரம் போக வேண்டும்?'' என்று, தன் முதல் எதிர்ப்பைத் தெரிவித்தாள் வைரமணி.

''என்ன பேச்சு இது? அந்தக் காலத்தில் 'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்பார்கள். கடல் தாண்டிப் போகிறவர்கள், திரும்பி வருவது நிச்சயமில்லாத காலம் அது. இந்த நாட்டுக்குள்ளேயே இருக்கும் ராஜஸ்தானைப் போய் தூரம் என்கிறீர்களே?'' என்றாள் சாரூபா. கூடவே திரும்பி ''என்ன அண்ணா, ராஜஸ்தான் தூரமா?'' என்று பூபாலனிடமே வினவினாள்.

அவன் பதில் சொல்லு முன்பாகக் குறுக்கிட்டு ''இது என் அப்பா கட்டிய வீடு. நினைத்தால், அப்பாவும் அம்மாவுமாகக் கோயிலுக்குப் போய் வருவார்கள். இதை விட்டு, வெளியிடத்துக்கெல்லாம் எப்படிப் போவார்கள்? மாட்டவே மாட்டார்கள்!'' என்று வெற்றிக் குரலில் முடித்தாள் மல்லிகாவுடைய நாத்தனார்.

மல்லிகா சட்டெனத் தொய்வது போலத் தோன்றியது சாரூபாவுக்கு.

கூடவே, வைரமணியின் குரலும் சீண்ட ''சேச்சே, என்ன அக்கா நீங்கள்? இவ்வளவு பெரியவர்களை அப்படி வேறோடு கிளப்பி, இழுத்துக் கொண்டு போவார்களா என்ன? அவர்கள் எப்போதும் போல, இங்கேயே இருந்து, கோயிலுக்கெல்லாம் போய் வரட்டும்.

நீங்கள்தான் தினமும் வந்து பார்த்துக் கொள்வீர்களே! பூபால் அண்ணாவும், அவர் மனைவியும் மட்டும் போய், நிறைய சம்பாதித்து எடுத்துக் கொண்டு வரட்டும். குடும்பத்தில் பணம், சொத்து கூடுமில்லையா?'' என்று அவள் சொன்னது, மூத்த தலைமுறைக்கு உவப்பாக இருந்தது.

எனவே ''ஆமாம் வைரம். சின்னவளாக இருந்தாலும், அவள்.. பெயரென்ன சாரூபா... நீ சொல்வது சரியாகத் தான் இருக்கிறது. பூபால் கிளம்பட்டும். அவனது சாப் பாடு விஷயம் பார்க்க மல்லிகாவும் கூடப் போகட்டும். நீ தினமும் வருகிறவள், கொஞ்சம் முன்னதாக வந்தால், எங்களுக்குச் சமைத்துக் கூட வைத்துவிடலாம்'' என்று பெரியவர் கூறவும், வைரமணியின் முகம் கன்றிக் கறுத்தது.

அவள் பெரிதாக ஏதோ பேசத் தொடங்குமுன் தீன தயாளன் அவசரமாகக் குறுக்கிட்டு ''என்ன சார் நீங்கள்? அக்கா வந்து, இங்கேயும் சமைப்பதா? தேவையே கிடையாது. அவரவர் கேட்கிற மாதிரி சமைத்து வைக்க இப்போது ஆட்கள் கிடைக்கிறார்கள். இன்னின்ன மாதிரி என்று சொல்லிவிட்டால், சமைத்தே கொண்டு வந்து கொடுக்கவும் செய்கிறார்கள். எது பிடிக்கிறதோ, அப்படி ஏற்பாடு செய்துவிடலாம். அதைவிட்டு, அக்காவைச் சிரமப்படுத்தலாமா? வேண்டாம் சார். தேவைப்பட்டால் அக்காவுக்கும் சேர்த்தே உணவு கொண்டு வரச் சொல்ல லாம்'' என்று கூற, ஒன்றுமில்லாததற்கு இது மேலோ என்று வைரமணி யோசிக்கலானாள்.

''அல்லது, இருப்பதைப் பகிர்ந்தும் சாப்பிடலாம். எப்படியும், எங்களுக்கு உணவுப் பிரச்சினை இல்லை பூபால்! நீ மல்லிகாவோடு கிளம்பு. தீனா ரொம்ப நன்றிப்பா. இந்தப் பையன் வாழ்க்கையில் முன்னேற இடமே இல்லையே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். இன்று அந்தக் கவலையைத் தீர்த்து வைத்திருக்கிறாய். ரொம்பத் தாங்க்ஸ்'' என்று தீனதயாளனுக்கு நன்றி சொன்னார் பெரியவர்.

வைரமணி மேலும் சில ஆட்சேபங்களைக் கிளப்பிய போதும், இரு மடங்கு வருமானம், அரு மருந்தாய் வேலை செய்ய, பூபாலன் ராஜஸ்தான் செல்வது உறுதியாயிற்று.

உறுதிப்படுத்திக்கொண்டு, இன்னும் ஒரு டம்ளர் எலுமிச்சைச் சாறையும் குடித்துவிட்டுத்தான், தீனதயாளன் அங்கிருந்து கிளம்பினான்.

மல்லிகா வாய் திறந்து எதையும் சொல்லாவிட்டாலும், பிறர் கவனியாதபோது, அவளது கண்கள், மனதைத் தெளிவாகப் பறைசாற்றின.

ஒருதரம், சாரூபாவின் கையைப் பற்றிக்கூட, அழுத்தி விட்டாளாம்.

திரும்பிச் செல்லும்போது, தீனதயாளனிடம் அது பற்றி சொன்னாள் சாரூபா ''ரொம்ப நம்பிக்கை இழந்து போயிருப்பார்கள் போல! ஜூஸ் டம்ளர்களை உள்ளே கொண்டு வைக்கப் போனேனா? பாவம் தன்னையே கிள்ளிப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். இது நிஜம் தானா என்று, அவ்வளவு சந்தேகம்!''

''ஓ!'' என்று ஒருகணம் அமைதி காத்துவிட்டு ''என்னவோ, இதற்கு மேல் புருஷனைப் பிடித்துக் கொள்வது, உன்னுடைய சினேகிதியுடைய அக்கா பொறுப்பும்மா. இந்த விஷயம் பற்றி, இனிமேல் என்னிடம் ஒன்றும் சொல்லக்கூடாது'' என்றான் அவன் கண்டிப்பான குரலில்.

''ஐயோ, மாட்டேன் சார். அப்பப்பா! அதற்குத் தேவையே இருக்காது. ஆனால் எவ்வளவு நிம்மதியாக இருக்கிறது, தெரியுமா சார்? ரொம்ப நன்றி சார்!'' என்று உளமாரக் கூறினாள்.

ஆனால், அவளது பேச்சு அவனுக்குப் பிடிக்கவில்லை ''இது பற்றிப் பேச வேண்டாம் என்று சொன்னதாக ஞாபகம்!'' என்று சற்று அழுத்தமான குரலில் நினைவுறுத்தினான்.

என்ன மாதிரி மனிதன் இவன்! ஒரு திருமணத்தைக் காப்பாற்றி இருக்கிறான்! அதன் மூலம், கிட்டத்தட்ட ஒரு பெண்ணின் உயிரையே காத்ததாகக் கூடக் கூறலாம். அவளுடைய தோழியுடைய குடும்பத்தையே, ஆண்டுக்கணக்கில் அரித்துத் தின்று கொண்டிருந்த வேதனையில் இருந்து மீட்டிருக்கிறான். இவ்வளவும் செய்துவிட்டு, அதற்காக நன்றி செலுத்தக்கூட வேண்டாம் என்கிறானே!

ஆனால், அவளுக்கோ தன் மனதை அப்படியே அவனிடம் கொட்டி விட வேண்டும் போல ஆசை!

எனவே ''அதற்கில்லை சார், லேகா குடும்பமே எவ்வளவு கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். உங்களுக்

குத் தெரிந்தால்...'' என்றவளை இடையிட்டு ''தெரிய வேண்டாம்'' என்றான் சற்று அலுத்த குரலில்.

''இந்தப் பேச்சு எனக்குப் போரடிக்கிறது, சாரூபி. அத்தோடு அதென்ன சார், மோர் என்று யாரோ மாதிரி அழைக்கிறாய்? என் பெயர் தீனதயாளன். என் நண்பர் களைப் போல தீனா என்று அழைக்கிற அளவுக்கு நாம் பழகி விட்டதாக எண்ணினேனே!'' என்று குறைப்பட் டான் அவன்.

''தீனாவா? ஊகூம் நீங்கள் தீனனில்லை, சார், தயாளன்!'' என்றவள் அவனது முகம் சற்று கடுக்கவும், ''தயா, சார்!'' என்றாள் அவசரமாக.

''தயா, 'சாரா?''

''ஊகூகூம், வெறும் தயாதான்'' என்று அவள் சமா தானமாகக் கூறிய பிறகே, அவன் முகம் மலர்ந்தது.

இன்னொருதரம் இதுபற்றிப் பேச்சு, அவர்களிடையே வந்தது. லேகா அவனிடம் தன் நன்றியைத் தெரிவிக்கச் சொன்னாள், என்றாள் சாரூபி.

''நேரில் வந்து சொல்லத்தான் அவளுக்கு ஆசை, தயா. ஆனால் வாய்ப்புக் கிடைத்தது என்று வந்து நிற்பதாக எண்ணி விடக் கூடாதே! அப்படி ஓர் எண்ணம் பொதுவாக உங்களுக்கு உண்டுதானே? அதனால்தான், அவளுக்காக என்னைச் சொல்லச் சொன்னாள்'' என்றாள் சிறு முறுவலோடு.

லேசாகத் தோளைக் குலுக்கிவிட்டு ''ஆனால், உன் லேகாவுக்காக நான் எதையும் செய்யவில்லை'' என்றான்

அவன். ''இந்தத் தொழிற்சாலை பற்றி, ஏற்கனவே யோசித்துக் கொண்டுதான் இருந்தேன். அது பற்றிய வேலையில் பூபால் இருந்தது வசதியாயிற்று. அவ் வளவே!'' என்றான் தீனதயாளன்.

விசித்திரமான வகையில், சாரூபிக்கு அவன் பேச்சு உண்மையாகவும் தோன்றியது.

ஆனால்...

கண்களில் ஒரு 'பளிச்'சுடன் ஏறிட்டு ''என்ன தயா, கதை? பூபாலன் சாரை வேலைக்கு அழைத்த வரையும் கூட, நீங்கள் சொல்வது உண்மையாகவே இருக்கலாம். ஆனால், அங்கே வீடு, இருவருமாகப் போகச் சொன் னது? உங்கள் தொழிற்சாலை யோசனையில், அதுவும் சேர்த்தியே என்று சொல்லப் போகிறீர்களா... சா... த... தயா?'' என்று கேட்டாள் அவள்.

ஒரு வினாடி பேசாதிருந்துவிட்டு ''முதலில் கிடை யாதுதான். ஆனால் நீ அதை, என்னிடம் எதிர்பார்த்த தாகத் தோன்றியது. சொல்லு, எதிர்பார்த்தாய்தானே?'' என்று கேட்டான் அவன்.

இல்லை என்று சொன்னால், அது பொய்!

ராஜஸ்தான் மார்பிள் நிறுவனம், அதன் பொறுப்பு என்று தீனதயாளன் தொடங்கியதுமே, மல்லிகாவின் விடுதலைக்கான ஏற்பாடு என்று அவள் நம்பத்தான் செய்தாள்.

அதில் தப்பென்ன? இப்போதுகூட சாரூபா சத்தியமே செய்வாளே! மனதில் அவ்வளவு நிச்சயம்தான.

ஆனால், அவள் எதிர்பார்த்தாள் என்றால், அவன் செய்வானாமா? இது கதை! கொஞ்சமும் ஒத்துக் கொள் ளவே முடியாத கதை!

மல்லிகா உயிர் வாழும் ஆசையையே விட்டு விட்டாளே என்ற பயம் வந்த பிறகுதான், தீனதயாளன், அவளையும் அவளுடைய கணவனையும் தனியே பிரித்து அனுப்பத் திட்டமிட்டிருக்க வேண்டும். ஆனால், அதை ஒத்துக் கொள்ளாமல், கல் நெஞ்சனாகக் காட்டிக் கொள்கிறான்.

ஏன்? இன்னும் இப்படி எத்தனை பேரைக் கூட்டி வருவாளோ என்று பயந்து விட்டானா?

வேண்டாம்ப்பா, வேண்டாம் இனி, எந்தக் கஷ்டத் தையும் உன் காதுக்குக் கொண்டு வரவே மாட்டேன்! சந்தோஷமாகப் பேச, உலகில் விஷயங்களா இல்லை?

மனதுள் உறுதி எடுத்தபடி, சாரூபி வேறு பேச, பொழுது இனிமையாகக் கழிந்தது.

அடுத்து ஓரிரு முறை சந்தித்த போதும், சாரூபா இந்தக் கொள்கையையே கடைப்பிடிக்கவும் ''என்ன... இந்த உலகம் திடீரென்று குளிர் நிலவில் மானும் மயிலும் ஆடிடும் சோலையாகி விட்டது? சிங்கம் புலி... ஏன், ஒரு நரி கூடக் காணப்படவில்லையாமே!'' என்று அதிசயப்பட்டான்.

கூடச் சேர்ந்து சிரித்த சாரூபிக்கும் ஆச்சரியம்தான். கூடவே சந்தோஷமாகவும் இருந்தது.

இந்த நிலையில் ஒரு மாற்றம் வந்தது.

# 4

ஒருநாள் தீனதயாளன் செல்லில் சாரூபாவைத் தொடர்பு கொண்டு ''உன்னோடு சற்று நேரம் பேச வேண்டும் போல இருக்கிறது. உடனே வா'' என்று கூப்பிட்டான்.

''வேலை நேரம், தயா. மாலையில் சந்திப்போமே'' என்று தயங்கினாள் சாரூபி.

''எனக்காக ஒரு நாள் உன் வேலையை ஒதுக்கி வைத்துவிட்டு வர முடியாதா?'' என்று எரிச்சல்பட்ட அவனது குரலில் அவள் முடிவு செய்தாள்.

ஒருவேளை அவளைப் போன்ற மனநிலையில்தான் அவனும் இருக்கிறானோ என்னவோ?

ஏனெனில், அவளுக்குமே, அவனைப் பார்த்தால் நன்றாக இருக்கும் போலத்தான் இருந்தது.

ஏதேதோ காரணங்கள் கூறி, அவ்வப்போது தன் வேலையை அவளைக் கொண்டு செய்துகொள்ளும் ஒரு சக அலுவலர் அப்போதும் அருகில் நின்று 'ஞைஞை' என்று ஏதோ கரைந்து கொண்டுதான் இருந்தாள். அவளது வேண்டுகோளை அலட்சியம் செய்தது மட்டுமின்றி, வாழ்விலேயே முதல் முறையாக, கையிலிருந்த வேலையையும் முடிக்காமலே நிர்வாகியிடம் விடுப்பு கேட்டுக் கொண்டு கிளம்பிப் போய்விட்டாள்.

காரில் செல்லும்போதே, ''நல்ல நேரத்தில் கூப் பிட்டீர்கள், தயா. ஒரு கொலை செய்யக்கூடிய அளவு கோபமான மனநிலையில், அப்போது நான் இருந்தேன்'' என்றாள் அவள். தொடர்ந்த ஒரு பெருமூச்சு அவளது இறுக்கம் தளர்வதை, வெளிக்காட்டியது.

ஓரக்கண்ணால் ஆச்சரியமாக அவளைப் பார்த்து விட்டு ''என்னது? நீயுமா?'' என்று வினவினான் தீன தயாளன்.

''ம், பின்னே என்ன தயா? உண்மையான தேவை என்றால், உதவி செய்ய நான் தயங்கியது இல்லை. ஓரளவு சிரமப்பட்டு கூடச் செய்வதுதான். ஆனால், ஒருத்தி செய்கிறேன் என்றால், அவ்வளவு வேலை களையும் என் தலையிலேயே ஏற்றப் பார்க்கிறார்களே! அலுவலகத்தில் ஒரு பெண். அவளுக்கு முதல் குழந்தை. தலை சுற்று, வாந்தி என்று கஷ்டப்படுகிறாள் என்று அவ்வப்போது உதவி செய்வதாகச் சொன்னே னில்லையா? இப்போது அந்தப் பிரச்சினையெல்லாம் தீர்ந்து நன்றாக இருக்கிறாள். அவள், கணவனோடு சினிமாவுக்குப் போகிறாளாம். என் வேலையை முடித்து விட்டுப் போ என்று நீட்டுகிறாள். என்னவோ, என் உதவி, அவளது பிறப்புரிமை மாதிரி! இந்த அழகில் காலையிலிருந்து செல்லில் அடித்துக் கொண்டிருந்த அரட்டையில், அவள் வேலையைத் தொடங்கக்கூட இல்லை. என்னால் முடியாது என்று பிடிவாதமாக மறுத்துக் கொண்டிருந்தபோதுதான், நீங்கள் கூப்பிட் டீர்கள். சரிதான் என்று நிர்வாகியிடம் சொல்லிவிட்டுக் கிளம்பி வந்து விட்டேன். பொதுவாக, நான் வேலைக்கு

நளுக்குகிறவள் இல்லை என்பதால், ஏன் என்றே கேளாமல், அவரும் விடுப்பு கொடுத்து விட்டார். பார்த் தால், நான்தான் அவளுக்கு அநியாயம் செய்துவிட்ட மாதிரி, அந்த கல்பனா முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே! எள்ளும் கொள்ளும் வெடித்து என்பார் களே! அதுபோலக் கோபம்! அவள் முகத்தைப் பார்த் ததும் எனக்குக் கொஞ்சம் சிரிப்புகூட வந்துவிட்டது!'' என்றவள் அப்போதும் சிரிக்க, அவனும் சேர்ந்து நகைத் தான்.

சற்று நேரம் இருவருமாகச் சிரித்து முடிக்கவும், ''எனக்கிருந்த எரிச்சலில் என் விஷயத்தையே சொல்லிக் கொண்டிருக்கிறேன் பாருங்கள் 'நீயுமா' என்றீர்களே! அப்படியானால், உங்களுக்கும் கொலை பண்ணும் அதே கோபம்தானா? அடடா! சொல்லுங்கள், தயா. அங்கே என்னப்பா ஆயிற்று!'' என்று குரலில் பரிவுடன் கேட் டாள்.

அந்தக் குரலில் தீனதயாளனின் முகம் கனிந்தது 'ஸ்டியரிங் வீலில்' இருந்து கையை எடுத்து அவளது கையைப் பற்றி அழுத்திவிட்டு ''நான் எவ்வளவு பணக் காரன் என்று, உனக்குத் தெரியுமா, சாரூபி?'' என்று கேட்டான் அவன்.

''இம். ஓரளவு தெரியும். லாபம் தரும் தொழில்கள் நிறைய வைத்திருக்கிறீர்கள் என்று, லேகா சொன்னாள்'' என்றாள் அவள் ''அதனாலேயே, லேகாவுக்கு உங்களிடம் வந்து பேச, ஒரு விதப் பயம், தயா. தப்பாக நினைப்பீர் களோ என்று. எனவே அவள் அக்காவுக்காக நன்றி

செலுத்துவதைக்கூட நீயே சொல்லி விடுப்பா என்றாள்'' என்று தெரிவித்தாள்.

''பத்திரிகையில் வேலை பார்க்கிறவள் அவளுக்கு பயம்! ஆனால், உனக்கு இல்லையே! முதல் சந்திப்பி லேயே, சண்டைக்கல்லவா வந்தாய்?'' என்றான் அவன் சீண்டலாக.

இருவருக்குமே அந்த முதல் சந்திப்பின் நினைவில், முகத்தில் புன்சிரிப்பு படர்ந்தது.

''உங்களிடம் பணம் இருந்தால், அது உங்களோடு, எனக்கு என்னவாம்?'' என்றாள் அவள் மிடுக்காக.

''அதானே! பெரியசாமிக்கு கொடுப்பதும், பூபாலன் மல்லிகாவுக்கு உதவி செய்வதும், யாரோ ஓர் இளிச்ச வாயன் தீனதயாளன் பாடு! உனக்கென்னம்மா வந்தது?'' என்று அவன் நினைவூட்ட, அவள் கிண்கிணியாய்ச் சிரித்தாள்.

சிரித்து முடித்துவிட்டு ''நீங்கள் இன்னமும் என்ன நடந்தது என்று சொல்லவே இல்லையே!'' என்று கேட்டாள்.

''புதிதாக நடப்பதற்கு என்ன இருக்கிறது? எப்போதும் உண்டானதுதான். சொல்லப் போனால், என் முதல் தொழிலை நான் வெற்றிகரமாக நடத்தத் தொடங்கியதில் இருந்து நடப்பதுதான். ஆனால் இன்று ஏனோ ரொம்ப எரிச்சல் வந்துவிட்டது!'' என்றான் தீனதயாளன் வெறுப் புடன்.

''இருக்கும், இருக்கும். நிச்சயமாய் எரிச்சல் வரத்தான் செய்யும்!' என்றாள் அவள் ஒப்புதலாக. ''ஆனால்

பாருங்கள், அப்படி எரிச்சல் வரும்படியாக என்ன நடந்தது என்று, இன்னமும் எனக்குத் தெரியவே மாட்டேன் என்கிறது. ஏன் தயா, அப்படி? ஒருவேளை என் மூளை இன்று மந்தமாகி விட்டதோ?'' என்று அவள் உரக்க யோசிக்கவும், அவன் மறுபடியும் நகைத்தான்.

சிரித்துவிட்டுச் சொன்னான் ''உன்னோடு பேசிக் கொண்டிருக்கும்போது இப்படி எல்லாமே வேடிக்கையாகவே தோன்றுகிறது. ஆனால், அங்கே பொறுப்பில் அமர்ந்திருந்து வேலையைப் பார்க்கும்போது, ஒழுங்காக நடந்தாலே லாபம்தானே? ஏன் இண்டு இடுக்கில் புகுந்தேனும் சுருட்டவே முயற்சிக்கிறார்கள் என்று ஆத்திரமாக வருகிறது. சாரூபி. பின்னே ஏமு சைபர்களுடன் என் முதல் கோடியைச் சம்பாதித்தபோது, எனக்கு எவ்வளவு பெருமிதம் இருந்தது தெரியுமா? இப்போது என் கணக்குகளில் எத்தனை கோடிகள் இருக்கின்றன என்று எனக்கே தெரியாது. ஆனால், பழைய மகிழ்ச்சி கொஞ்சம் கூட இல்லை! மகிழ்ச்சியை விடு. பெரும்பாலும் கோபம் தான். ஏன் தெரியுமா? என் பக்கத்தில் வருகிற எல்லோருக்கும், என்னிடமிருந்து ஒரு கோடியையாவது ஓசியில் அடித்துவிடத்தான் ஆசை! அப்படி விட்டுவிட நான் என்ன முட்டாளா என்று கொஞ்சமும் யோசிக்காமல், அவரவர் பாணியில் எப்படி அறுக்கிறார்கள், தெரியுமா?'' என்றபோது மறுபடியும் அவன் முகம் சினந்திருந்தது.

ஓரக்கண்ணால் அவனைப் பார்த்துவிட்டு ''அச்சச்சோ! இருந்திருந்து வெறும் ஒரு கோடிக்கா இந்தப் பாடு?

அடடா, நான் வேறு நினைத்தேனே!'' என்று போலி யாக வருத்தம் காட்டினாள் சாரூபி.

முகம் மாற ''என்ன? என்ன நினைத்தாய்?'' என்று அவசரமாகக் கேட்டான் அவன்.

''என்னத்தைச் சொல்வது, போங்கள்! நான் ஒரு பத்து கோடியாவது உங்களிடம் இருந்து இலகுவாகப் பிடுங்கி விடலாம் என்று நினைத்தால், நீங்கள் இந்த ஒரு கோடிக்கே இவ்வளவு கஞ்சத்தனம் கணக்குப் பார்க்கிறீர் களே! இப்போது நான் நினைப்பது எப்படி நடக்கும்?'' என்றாள் அவள் சோகச் சித்திரமாகி.

வேடிக்கை புரிந்து சிரிப்பான் என்பது, அவளது எதிர் பார்ப்பு. ஆனால், காரை ஓரமாகக் கொண்டு நிறுத்தி னான் தீனதயாளன்.

நிறுத்தி அருகில் இருந்த கைப்பையில் இருந்து செக் புத்தகத்தை எடுத்து, செக்கில் ஏதோ எழுதி அவளிடம் கொடுத்தான்.

கையில் வாங்காமலே ''என்ன இது?'' என்று கேட் டாள் அவள்.

''பத்துகோடிக்கு செக். பத்துகோடி என்ன? உனக்காக எவ்வளவு வேண்டுமானாலும் கொடுப்பேனே!'' என் றான் அவன் உல்லாசக் குரலில்.

தலையை வெளிப்புறம் திருப்பிக் கொண்டு, கார்க் கதவைத் திறக்க முயன்றாள் சாரூபா.

ஆனால், அது விலை உயர்ந்த கார். காரின் அத் தனை கட்டுப்பாடுகளும், ஓட்டுகிறவன் கையிலேயே இருந்தன.

கதவைத் திறக்க முடியாமல் போகவே ''கார்க் கதவைத் திறந்து விடுங்கள்'' என்றாள் கடித்த பற்களுக் கிடையே.

''ஏன்? என் பேச்சில் சந்தேகமா? நிஜமாகவே உனக்கு என்ன தொகை வேண்டுமானாலும் நான் தருவேன் சாரூபி'' என்றான் அவன் சத்திய வாக்குப்போல!

''அப்படி வாங்குகிறவளைப் பார்த்து அவளுக்குக் கொடுங்கள்'' என்று சுளீரெனப் பதில் கொடுத்துவிட்டு ''முதலில் கார்க் கதவைத் திறந்து விடுகிறீர்களா? நான்... நான் போக வேண்டும்!'' என்றாள் அவள் சீற்றத்துட னேயே.

''திறக்க முடியாது!'' என்று அறிவித்தான் தீன தயாளன்.

அவள் ஆத்திரமாக முறைக்கவும், அவள் புறமாகத் திரும்பி அமர்ந்து ''சரியான பதில் கிடைக்காமல் காரைத் திறக்கவோ, எடுக்கவோ முடியாது... சொல்லு, எவ ளுக்கோ கொடு என்று நீ எப்படிச் சொல்லலாம்? நீ எப்படி அப்படி... நீ ஏன் அது போலச் சொன்னாய்? யாருக்கோ கொடுப்பதற்காகவா, நான் பணம் சம்பாதிக் கிறேன்? முதலில், உனக்கு, என் மேல் என்ன கோபம்?'' என்று கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டுக் கொண்டே போனான் தீனதயாளன்.

அவனது அத்தனை கேள்விகளுக்கும் அவளது பதில் ஒன்றேதானே. சொன்னாள் ''நான் ஒரு வேடிக்கை மனோபாவத்தைக் கொண்டு வருவதற்காக உங்களிடம் பத்து கோடி என்றேன். உடனே செக் எழுதித் தருவது

என்றால், என்னைப் பற்றி, நீங்கள் என்னதான் நினைத்தீர்கள்? நான் ஒன்றும் அடுத்தவர் பணத்துக்காகப் பறக்கிறவள் இல்லை. தெரிந்து கொள்ளுங்கள்'' என்றாள் கோபமாகவே.

''அது தெரிந்ததால்தானே, செக் எழுதியதே!'' என்று அவன் மர்மப் புன்னகை புரிந்தான்.

சற்றுத் திகைத்தவளிடம் முகம் உடனேயே தெளிந்தது ''ஓகோ! நான் மறுத்துவிடுவேன் என்று தெரிந்து தான், செக்கை எழுதித் தந்தீர்களா? சே, நான்தான் உங்களைப் புரிந்து கொள்ளாமல் கோபப்பட்டு விட்டேன், சாரிப்பா!'' என்று தயக்கமின்றி மன்னிப்புக் கேட்டாள் சாரூபா.

தீனதயாளனின் முறுவல் மேலும் விரிந்தது. கண்ணில் சிரிப்புடனேயே ''இல்லையே! நீ பணத்தை வாங்கிக் கொள்வாய் என்று நம்பித்தான் செக்கை எழுதிக் கையெழுத்திட்டேன். நிஜம், சாரூபா. சத்த்.. தியம்! நம்பு!'' என்று அப்பாவியாய்த் தலையை ஆட்டிப் பேசினான் அவன்.

கண்களில் கனலுடன் நிமிர்ந்த சாரூபாவின் முகம் மறுபடியும் மாறியது.

அவனை யோசனையாகப் பார்த்து ''நீங்கள் ஏன் இப்படிப் பேசுகிறீர்கள் என்று, எனக்குப் புரியவில்லை. தயாளன். உரிமையற்ற பணத்தை நான் தொட மாட்டேன் என்று, இதற்குள் உங்களுக்குப் புரிந்திருக்க வேண்டும். ஏன், பெரியசாமிக்காக முதலில் வசூல் பண்ணிய தொகையைக் கூடப் பைசா குறையாமல்

நான் திருப்பிக் கொடுத்தது உங்களுக்கும் தெரியும். பிறகும் என் குணம் புரியவில்லை என்றால், நாம் இவ்வளவு சகஜமாகப் பழகியதற்கு, அர்த்தமே கிடை யாதே'' என்றாள் லேசாக வருத்தம் தோய்ந்த குரலில்.

''ரொம்பவும் சீரியஸ் ஆகிவிட்டாய்! எனவே, இனியும் கிண்டலடிக்கக் கூடாது. உண்மையே பேச லாம். பார் சாரூபி. லட்சங்களோ, கோடிகளோ, தொகை எவ்வளவு ஆனாலும், ஒருவன் தான் மணக்கப் போகும் பெண்ணுக்குப் பணம் கொடுப்பதில், என்ன தப்பு இருக்கிறது? நீயே சொல்லு?'' என்று அவளது பெரிய விழிகளை நேராகப் பார்த்து வினவினான் தீனதயாளன்.

திகைப்பூண்டை மிதித்ததுபோல, பிரமித்துப் போய் என்பதெல்லாம் ஒன்றுமில்லை என்பது போலச் சற்று நேரம், சாரூபா அப்படியே சிலை போல உட்கார்ந்திருந் தாள்.

அது எவ்வளவோ நேரமோ? முகத்துக்கு நேரே தயாளன் பலமாகச் சொடக்குப் போட்டுத்தான், அவளை இன்றைய நடப்புக்குக் கொண்டு வர வேண்டியிருந்தது.

அப்போதும் பலவீனமான குரலில் ''நீ.. நீங்கள் எ... என்ன சொன்னீர்கள்?'' என்றுதான் சாரூபா கேட்டாள்.

மறுபடியும் தீனதயாளனின் கண்கள் சிரித்தன. ''ஹூம், பெற்றவர்கள் பேராசைப்பட்டுச் சாரூபா என்று பெயர் வைத்து என்ன பயன்? கடவுளைப் போல எல்...லாம் அறிந்திருக்க வேண்டாம்பா, குறைந்த பட்சமாகப் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவனின் மனதில் இருப்பதாவது தெரிந்திருக்க வேண்டாமா? போகட்டும்,

நானே சொல்லுகிறேன். கேட்டுக்கொள். நீயும் நானும் மணந்து கொள்ளப் போகிறோம். என் மனைவியாகப் போகிற உனக்கு, நான் எவ்வளவு பணம் கொடுத்தாலும், அதில் என்ன தப்பு என்று கேட்டேன். நீதான் சொல்லேன், ஏதாவது தப்பு இருக்கிறதா என்று?''

கேலியும் சிரிப்புமாக, அவன் விளக்கி முடித்த பிறகும் அவளுக்குத் திகைப்புத்தான்.

அடிக்கடி பார்த்தார்கள், பேசினார்கள், சிரித்தார்கள், பார்த்துப் பேசிச் சிரிப்பது மகிழ்ச்சியாக இருந்தது, உண்மைதான். இரவில் கூட, அவன் சொன்ன ஜோக்கை நினைத்துச் சிரித்தபடியே தூங்கியிருக்கிறாள், ஆனால், திருமணம்?

மணந்துகொள்ளப் போவதாக எவ்வளவு நிச்சயமாகச் சொல்லுகிறான்! அந்த அளவுக்கு அவள் யோசித்துப் பார்த்ததில்லையே!

ஒருவேளை, அவர்கள் இருவருக்கும் இடையே உள்ள பொருளாதார வேறுபாடு, அப்படி யோசிக்கக்கூட விடாமல், அவளைத் தடுத்திருந்ததா?

அவள் வீட்டில், அவளது திருமணம் பற்றிய பேச்சே எழவில்லை என்று சொல்ல முடியாது. அவள் வேலையில் சேரும்போதே, அவளுடைய பெற்றோர் அது பற்றி அவளிடம் பேசியிருக்கிறார்கள். தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்றைப் பொறுப்பேற்று நடத்தி வரும் ஓர் இளைஞனைப் பற்றி, சென்ற மாதம்கூட எழுதியிருந்தார்கள். அந்தக் குணாளன் மருமகன் ஆனால், அவர்களுக்கு நிம்மதியாக இருக்குமாம்.

கடிதத்தைப் படித்து முடித்த பிறகு, அவனைப் பற்றிய நினைவே வரவில்லை. அம்மா, அப்பா நலமாக இருக்கிறார்கள் என்ற சந்தோஷத்தோடு, லைப்ரரி புத்தகத்தில் ஆழ்ந்து விட்டாள்!

ஒருவேளை, அதுகூட....

முகத்தின் முன்னே யாரோ கை தட்டும் ஒலி!

அவன்தான் ''ஹலோ மேடம், என்ன, கண்களைத் திறந்து வைத்துக் கொண்டே தூக்கமா? என் பேச்சு என்ன தாலாட்டு மாதிரியா இருந்தது?'' என்று கேட்டுக் கொண்டிருந்தான். ''ரொம்ப ஆபத்து! கல்யாணம் ஆவதற்குள், இந்தப் பழக்கத்தை விட்டு விடம்மா!''

கல்யாணமாமே! அதற்குள் எங்கே போய் விட்டான்!

கன்னம் சிவக்க, ''நான்... நான்தான்...'' என்று தடுமாறினாள் அவள்.

''என்ன 'நான்?' என்னைப் பிடிக்கவில்லையா?''

''அ.. அப்படியில்லை. ஆனால் இது பற்றி நினைத்துப் பார்த்ததில்லை'' என்று ஒரு வழியாகப் பேச்சு ஒழுங்காக வந்தது அவளுக்கு.

''நினைத்துப் பார் பிடிக்கும்!'' என்றான் அவன் இலகுவாக.

''அதென்ன அவ்வளவு நிச்சயம்?''

''நிச்சயம்தான்! 'பாடி லாங்க்வேஜ்' பூபால் வீட்டில் அவன் அருகில் அவ்வளவு இடம் இருந்தபோதும், எவ்வளவு இயல்பாக என் பக்கத்தில் உட்கார்ந்தாய், தெரியுமா?''

''அது ஒன்றும்...''

''இந்தக் காலத்தில், ஆண்கள் பக்கத்தில் பெண்கள் அமருவதும் ஒன்றும் பெரிய விஷயம் அல்லதான். ஆனால், பூபாலை அடுத்து இடம் இருந்தும், அவனைத் தாண்டிக் கொண்டு, என்னிடம் வந்து உட்கார்ந்தாய். அதுவும், சிறு தயக்கம் கூட இல்லாமல், இதுபோல, இன்னும் எத்தனையோ சொல்லலாம்! அமைதியாக இருந்து யோசித்துப் பார்த்தால், உனக்கே தெரியும்.''

''தயா, ஒரு திருமணத்துக்கு இது மட்டும் போதுமா?'' என்று சற்று அஞ்சிய குரலில் கேட்டாள் சாரூபி. ''நல்ல நண்பராக உணரும்போது கூட, மற்றவரை ஒதுக்கி, அவர் அருகே அமர்வது இயல்புதானே?''

''அப்படியானால், குறைந்த பட்சமாக என்னிடம் நல்ல நட்பு இருப்பதை ஒத்துக் கொள்கிறாய். அப்படித் தானே? நீ ஒத்துக் கொள்ளுகிற நல்ல நட்பை, காதல் தான் என்கிறேன் நான். இல்லாவிட்டாலும் விரைவிலே, அது காதலாக மாறிவிடும். மாற்றி விடுவேன்!'' என்றான் அவன் சர்வ நிச்சயமாக.

''நம்மிடையே நிறைய வேறுபாடுகள், தயா. உங் களுடைய செல்வநிலை... நம் வாழ்க்கை முறையே வேறு... எண்ணிப் பார்க்கவே எனக்கு ஒரு மாதிரி பயமாக இருக்கிறதே!'' என்றாள் அவள் கலக்கத்துடன்.

''என்ன பயம்? கஷ்டப்பட்டு வேலை செய்து சேமிக் கிறாயே, எதற்காக? செல்வநிலையை உயர்த்திக்

கொள்ளத்தானே? தானாக உயரப் போகிறது. அவ் வளவுதான் விஷயம்'' என்றான் அவன் மிக எளிதாக.

இதை அவள் ஒப்பவில்லை என்று உணர்ந்து ''சொல்லு சாரூபி. நாளையிலிருந்து நாம் சந்திக்கவே முடியாது என்றால், உனக்குக் கஷ்டமா இராதா?'' என்று கேட்டான் தீனதயாளன்.

தாங்கவே முடியாது என்று சொல்லப் போனவள், ஒரு கணம் தயங்கி ''ரொம்ப...'' என்று பதிலிறுத்தாள்.

''இது நடப்பதற்கான சாத்திக்கூறு மிகவும் கொஞ் சம்தான். அப்படி நேருவதற்கு, நான் விடவும் மாட்டேன். ஆனால் இன்று என்னென்னவோ நடக்கிறது. ஏதாவது விபத்தில், எனக்கு ஏதேனும் ஆகிவிட்டால்...'' என்று அவன் முடிக்குமுன்னே ''ஐயோ, வேண்டாம். இந்தப் பேச்சே வேண்டாமே ப்ளீஸ்...'' என்றாள் அவள் வேதனைக் குரலில்.

அவளது முகத்தையே பார்த்து ''நெருப்பு என்றால் வாய் வெந்துவிடாது. இந்தக் காலத்தில் விபத்துக்களும், வாழ்விலே ஓர் அங்கமே. அப்படி ஏதாவது நேர்ந்தால், உன்னால் தாங்க முடியுமா?'' என்று வினவினான் அவன்.

அவனது கரத்தைப் பிடித்து, அதிலே முகத்தைப் புதைத்து ''முடியவே முடியாது, தயா!'' என்றாள் அவள் கண்ணீருடன்.

''அதுதான் காதல், என் கண்மணி!'' என்று அவளது உச்சியில் முத்தமிட்டான் தீனதயாளன்!

தீனதயாளனுடைய குடும்பம் அவளை ஏற்காது என்று, சாரூபா ரொம்ப நிச்சயமாக இருந்தாள்.

தயாளனும், பிடிவாதக்காரன். அவனுடைய பெற்றோரும் அப்படித்தான் இருப்பார்கள். தன்னால், அந்தக் குடும்பத்தில் என்னென்ன பிரச்சினைகள் வரப் போகின்றனவோ என்று அவளுக்கு உள்ளூர அச்சம் தான்.

ஆனால், பெற்றோரும் மகனுமாய் மூவரேயான, அவர்களுடைய சின்னக் குடும்பத்தில், யாரும் மற்றவர் வாழ்வில் தலையிடுவது கிடையாது என்றான் தீன தயாளன். ''அப்பா பெரும்பாலும் வெளியிலேயே சுற்றிக் கொண்டிருப்பவர். அம்மா சமூக சேவகி. அதற்காகப் பட்டமெல்லாம்கூட வாங்கியிருக்கிறார்கள். மகன் திரு மணம் செய்யப் போவது குறித்து, பொதுவாக மகிழ்ச்சி அடையக்கூடுமே தவிர, அதற்கு மேல் என்ன ஏது என்று, யாரும் நோண்டிக் கொண்டிருக்க மாட்டார்கள். அதற்கு அவர்களுக்கு நேரமும் கிடையாது'' என்றான் அவன் விட்டேற்றியாக.

அவளுடைய பெற்றோரும், சமூக பணி செய்கிற வர்கள். மாற்றுத் திறனாளிகளுக்காக வாழ்க்கையே அர்ப்பணித்தவர்கள். ஆனாலும், மக்களின் வாழ்வு பற்றிய, முழு அக்கறை காட்டுவார்கள். என்னதான் அவளது தேர்வு என்றாலும், அவனைப் பற்றி ஆரா யாமல் விட மாட்டார்கள். அபிப்பிராயம் சொல்லாமலும் இருக்க மாட்டார்கள். ஆனால், தீனதயாளனிடம் குறை காண எதுவும் இல்லை என்பதாலேயே, அவள் கவலை யற்று இருந்தாள்.

ஆனாலும் அவனுக்குப் பெற்றோரின் அபிப்பிராயம் பற்றிச் சிறு சலனம்கூட இல்லை! பெரியவர்கள்

மறுத்தாலும், பிடிவாதமாக நடத்திக் காட்டுவதாக இருக்கின்றானா?

கண்டுகொள்ள மாட்டார்கள் என்று தீனதயாளன் சொன்னதற்கு மாறாக, அவனுடைய தாயார் தேவி, சாரூபாவை, நேரிலே வந்து சந்தித்தாள்.

முகம் சற்று எலும்பெடுத்ததுபோலத் தோன்றி னாலும், மெல்லிய அழகான மேனி, திருமதி தேவி சுந் தரத்துக்கு. பெரிய கண்கள்! பெரிய நாசி! நீண்ட நகங்களுடன் கூடிய விரல்கள், திருத்தப்பட்ட புருவம், எல்லாவற்றிலும் பார்லர் பராமரிப்பு தெரிந்தது. எந்தப் பக்கம் இருந்து பார்த்தாலும், பளிச்சென்ற தோற்றம். அதேபோலக் குரலிலும் தெளிவு! உடையிலும்.. நூல் சேலையே என்றாலும், மிகப் பொருத்தமான அணிமணி களும், அதிநாகரீகமாக அணிந்திருந்த விதமும், பெரிய இடம் என்பதைச் சொல்லாமல் சொல்லின.

அவளது வீட்டுக்கே வந்து சந்திப்பதன் காரணம், மறுப்பைப் பதிவு செய்வதாகத்தான் இருக்கும் என்று சாரூபா நிச்சயமாக நினைத்தாள். அப்படி ஏதாவது சொன் னால், உங்கள் மகனிடம் முதலில் பேசுங்கள் என்பதா? அல்லது, தாயிடம் கலந்து பேசி பதில் சொல்கிறேன் என்பதா என்று உள்ளூர யோசித்துக் கொண்டே இருந் தாள்.

இன்முகம் காட்டி வரவேற்று விருந்தோம்பும் வித மாகப் பழச்சாறு கொண்டுவரப் போனவளைப் பெரி யவள் தடுத்து நிறுத்தினாள். ''வேண்டாம்மா. போகிற இடத்திலெல்லாம் இப்படி எதையாவது வயிற்றில்

கொட்டிக் கொண்டால், அப்புறம் உடம்பு பெருத்து, அழகிழந்து போய்விடும்'' என்று பானத்தை மறுத்துக் கூறியபோது, சின்னவளின் ஐயம் உறுதியும் ஆயிற்று.

ஆனால் ''நீயும் உட்காரம்மா. ஒரு வழியாக, என் மகன் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்தது பற்றி, எனக்கு மிக்க மகிழ்ச்சி. நீயும் அவனுமாக பல்லாண்டு காலம் சந்தோஷமாக வாழ வேண்டும்'' என்று திருமதி தேவி தொடர்ந்து கூறவே, சாரூபாவுக்கு திகைப்பாக இருந்தது.

விட்டுவிடு என்று சொல்வாள் என்று பார்த்தால் வாழ்த்துகிறாளே!

சமாளித்து ''வாழ்த்துக்கு நன்றி, அம்மா'' என்றாள் அவள்.

தாமரை மொட்டுப் போலக் குவிந்திருந்த, தன் அழகாகப் பராமரிக்கப்பட்ட விரல்களை சில வினாடி நோக்கிவிட்டு, நிமிர்ந்து அவளைப் பார்த்த தேவி பேசத் தொடங்கினாள் ''பாரம்மா, உங்கள் திருமணத்தை ஒப்ப, நான் மறுக்கவில்லை. சிறிதளவும் எதிர்பார்க்கவும் இல்லை. என் பையன் யாரை மணந்தாலும், எனக்கு ஒன்றுதான். பணக்காரிதான் வேண்டும் என்று கிடை யாது. எனக்கு வேண்டிய பணம் என் பெயரிலேயே இருப்பதால், உனக்கு எவ்வளவு கொடுத்தாலும், அது பற்றி எனக்குப் பிரச்சினையும் இல்லை. ஆனால் நான் வந்தது, வெறுமனே உன்னை ஆசீர்வதிப்பதற்காக மட்டுமாக இல்லை. மாறாக, உனக்கு சில ஆலோசனை கள் கூற வந்தேன்'' என்றுரைத்துவிட்டு, ஒரு சிறு மௌனத்தின் பின் பேசத் தொடங்கினாள்.

''முதலில், ஒரு பிள்ளையைப் பெற்றுவிட வேண்டும். இப்போதைக்கு, உன் மனதில் என்ன நினைத்திருக்கிறாயோ எனக்குத் தெரியவில்லை. ஆனால் நான் பட்டபாடு நீ பட வேண்டாம் என்றால், உன் இடம் நல்லபடியாக நிலைக்க வேண்டும் என்றால், வாரிசாக ஒரு பிள்ளையை, உடனே பெற்றுக் கொடுத்துவிடு'' என்று தேவி கூறியபோதும், சாரூபிக்குப் பெரிதாக எதுவும் தெரியவில்லை எனலாம்.

என்னதான் தீனதயாளனுக்கு அக்கா மாதிரித் தோற்றத்தைக் காப்பாற்றி வைத்துக் கொண்டாலும், இந்த அநாகரீக உயர் மட்டத்துக்குப் பெண்மணியின் மனமும், முந்திய தலைமுறையாக எல்லோரையும் போலப் பேரக் குழந்தையை நாடுகிறது என்றுதான் எண்ணினாள்.

தேவி தொடர்ந்து பேசினாள். ''உடனே பிள்ளையைப் பெற்றுக் கொண்டால் மட்டும் போதாது, சாரூபா. உடம்பை மட்டும் என்றும் பதினாறாய் இப்படியே வைத்துக் கொள்ள வேண்டும். இப்போது சும்மாவே அழகாக இருந்தாலும், சில ஆண்டுகளில் பெண்களின் உடலில் மாற்றம் தெரியும். அப்போது அவர்களுக்கு நம் பக்கத்தில் நிற்பதே அவமானம் ஆகிவிடும். அவர்களுக்குத் தொப்பை வழிந்தாலும், அது ஒன்றுமில்லை. நாம் கொடி மாதிரி அழகாக அருகில் நிற்க வேண்டும். அதனால் ஒழுங்காக ஜிம்முக்குப் போ, டயட்டீஷியன் ஆலோசனைப்படி, உணவில் கட்டுப்பாட்டோடு இரு. அப்புறம், அழகுப் பராமரிப்புக்கு பார்லர். இவை எல்லா

வற்றுக்கும் எங்கெங்கே போக வேண்டும் என்று தெரியாவிட்டால் என்னிடம் கேள் சொல்லுகிறேன்.

''ஆனால், இதெல்லாம் கூடப் பெரிய காரியமில்லை. அதற்கு மேலும், இவன்கள் எங்கேயாவது மேய்ந்து விட்டு வரும்போது, கண்டுகொள்ளாமல் இளித்துப் பழக வேண்டும்... என்னடா, பயந்து விட்டாயா? உன்னை பயமுறுத்தி விரட்ட நினைப்பதாக எண்ணு கிறாயா? சத்தியமாக அப்படியில்லை. எங்கள் குடும் பத்தின் மூன்று அங்கத்தினரும் மூன்று தீவுகள் போல வாழும்போது, அது சாத்தியமுமில்லை. உன்னைப் பார்த்தால், முப்பது வருஷங்களுக்கு முன் என்னைப் பார்த்ததுபோல, அவ்வளவு பாவமாகத்தான் இருக்கிறது. நான் பட்டபாடு, நீயும் பட வேண்டாம் என்று எண்ணம் ஓடுகிறது...

''ஆனால் ஒன்று! இவன் அப்பன் அளவுக்கு, தீனா சுற்றியதாக கேள்வியில்லை. ஆனால் பணம் பணம் என்று, நம் இனமேதான் போய் விழுகிறதே!'' கசப்புடன் கூறி முடித்தாள், தீனதயாளனுடைய தாய்.

ஒரு பெருமூச்சுடன் எழுந்து, கையை நீட்டி, சாரூபா வின் கையை பற்றிக் குலுக்கினாள்.

''எப்படியும், மனமார்ந்த வாழ்த்துக்கள்!'' என்று வாழ்த் தினாள்.

கிளம்புமுன் ''திருமதி தீனதயாளனாக மட்டும் வாழாதே. ஓர் அடையாளம் எப்போதும் இருக்க வேண் டும். உனக்குப் பிடித்த எதையும், தியாகம் செய்வதாக எண்ணி, விட்டுவிடாதே. அனுசரித்து வாழலாம்.

ஆனால் அடியோடு உன்னை மறந்துவிடாதே. நாய்க் குட்டி மாதிரி அவர்கள் காலையே சுற்றிச் சுற்றி வந்தால் ரொம்பப் பிடிக்கும்தான். ஆனால் ஒருநாள், அவர் களுக்கு நாம் தேவையில்லை என்று ஆகும்போது, நம் வாழ்க்கை நரகமாகிவிடும். என் பெண் கல்வி இயக்கம் இல்லாவிட்டால், நான் என்றோ செத்திருப்பேன்! எச் சரிக்கையோடு இரு. வரட்டுமா?'' என்றுரைத்து விடை பெற்றுச் சென்றாள்.

காதல் கொண்டு, கருத்து ஒருமித்து, ஒருவருக்கொரு வர் என்று ஆன பிறகு, தேவை இல்லை என்று தோன் றுமா? எப்படித் தோன்றும்?

இல்லை. தீனதயாளனுடைய தந்தை எப்படிப்பட்ட வராக இருந்த போதும், அவளுடைய தயா அப்படிப் பட்ட ஆள் இல்லை என்று தனக்குள்ளே சாரூபா பல முறை சொல்லிக் கொண்டாள். ஆனால், வருங்கால மாமியாரின் பேச்சு, மனதை விட்டு மறைய மறுத்தது.

அதன் காரணமாகவோ என்னவோ ''இன்னும் எதற் காக, யார் யாரோ ஏவுவதை எல்லாம் செய்து கொண் டிருக்கிறாய்? விட்டுத் தொலைத்துவிட்டு, விருப்பப்பட் டதை செய்து சந்தோஷமாக இரேன்'' என்று தீனதயாளன் கூறியபோது, ''முடியாதுப்பா'' என்று மறுத்தாள்.

மேலே வற்புறுத்திப் பேசவும் வழியின்றித் தொடர்ந்து ''மனதுக்குப் பிடித்துச் செய்கிற வேலை. இதைத் தொடர்ந்து செய்வதுதான் எனக்கு சந்தோஷமாக இருக் கும்'' என்று சற்று பிடிவாதக் குரலிலேயே கூறி முடித்தும் விட்டாள்.

''ஹூம்! உல்லாசமாகப் பொழுது போக்க ஆயிரம் வழிகள்! ஆனால் வேலை செய்வதுதான் சந்தோஷம் என்கிற முதல் ஆள் நீயாகத்தான் இருப்பாய்!'' என்று கேலி பேசினாலும், அவளது பிடிவாதம் உணர்ந்தவன் போல, அவனும் தன் யோசனையை வற்புறுத்தவில்லை.

சாரூபாவுக்கு உள்ளூர உற்சாகம் கரை புரண்டது. அவனுடைய தாயார் சொன்னது போல, அவனது காலைத் தான் அவள் சுற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்று, தயா பிடிவாதம் பிடிக்கவில்லை! அவளது அபிப்பிராயத் துக்கு மதிப்புக் கொடுக்கிறான்!

இந்த சந்தோஷத்துக்கு நடுவே, வருங்கால மாமி யாருக்காக வருத்தப்படவும் செய்தாள்.

வேலையைச் சரிவரச் செய்துகொண்டே அவளால் உல்லாசமாக அவனோடு சுற்றவும் முடிந்தது.

காபி ஷாப், ஐஸ்க்ரீம் பார்லர், சும்மா ஒரு டிரைவ் என்று தினமும் கட்டாயமாகச் சந்தித்தார்கள். அன்பை யாருக்கும் மறைக்க நினைக்காமல், இருவரும் வெளிப் படையாகவே பழகினார்கள்.

''உன்னைப் பார்க்காவிட்டால், நிம்மதியாக தூங்க முடியவில்லை. என்ன சாதித்தாலும், அன்றைய நாளே கெட்டு விடுகிறது'' என்று அவன் கூறும்போது, அவ ளுக்கு உச்சி குளிர்ந்து போகும்.

''தேனிலவுக்காக, நாட்களை ஒதுக்கிக் கொண்டு இருக்கிறேன் நாம் மட்டுமாக இருப்பதற்கு ஒரு மாதம் கிடைத்துவிட்டால், திருமணத் தேதியைக் குறித்துவிட

லாம்'' எனும்போது, எப்போது அந்த நாள் வரும் என்று அவளுக்குமே ஏக்கமாக இருந்தது.

''புளியங்கொம்பாகப் பிடித்து விட்டாயே!'' என்று சிலர் சொல்லும்போது, அந்தப் பொறாமை கூட, ஆனந்தமாகவே இருந்தது.

தமக்கையின் வாழ்க்கையைச் சீர்செய்தவன் தீன தயாளன் என்பதால், லேகா மிகவும் சந்தோஷப்பட்டாள். ''அக்கா வாழ்க்கைக்காக தீனதயாளன் சார், அவ்வளவு செய்தாரே, எப்படி என்று சில நேரம் யோசிப்பேன். எல்லாம் உனக்காக என்று, இப்போதுதான் தெரிகிறது.'' இவ்வளவு அன்புள்ளவர் உனக்குக் கிடைத்ததில் ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறதுப்பா. இருவருமாக ரொம்ப காலம் சிறப்பாக வாழ வேண்டும்'' என்று வாழ்த்தினாள்.

தன் அன்புக்கு இவ்வளவு சக்தியா என்று அதிசயமாக இருந்தது சாருபாவுக்கு.

இடையே ஓர் ஆசை வந்தது. தன் பெற்றோரை தீனதயாளன் சந்திக்க வேண்டும் என்று, விரும்பினாள். அவர்களை இங்கே வரச் சொல்லலாம் என்றால், தேர்வு நெருங்கிக் கொண்டு இருந்தது.

குறைகள் உள்ள அந்தக் குழந்தைகளை, இரு மடங்கு கவனத்துடன் தேர்வுக்குத் தயார்படுத்திக் கொண்டு இருந்தவர்களை, அப்படிக் கூப்பிடுவதே தப்பாகப் பட்டது, அவளுக்கு.

எனவே ''ஊருக்குப் போய் பெற்றோரைப் பார்த்து வரலாமா?'' என்று அவனிடம் கேட்டாள்.

வியந்து நோக்கி ''எதற்கு?'' என்று கேட்டான் அவன்.

''இது என்ன கேள்வி? நம் தேர்வு சரிதான் என்று ஓர் ஒப்புதலுக்காகத்தான். உங்கள் அம்மா வந்து பார்க்கவில் லையா?''

''உன்னைப் பார்க்க அம்மா ஆசைப்பட்டார்கள். வந்து பார்த்தார்கள். மற்றபடி, ஒப்புதலுக்கும், அவர்களுக்கும் என்ன சம்பந்தம்? மற்றபடி அவர்கள் வேண்டாம் என்றால், நான் உன்னை விட்டுவிடுவேனா?'' என்று மகிழ வைத்தவன், உடனேயே ''சொல்லு, உன் பெற் றோர் மறுத்தால், என்னை விட்டு விலகிவிடுவாயா?'' என்று கேட்டு, தான் நினைத்த பதிலை, அவள் வாயால் சொல்ல வைத்தான்.

''மாட்டேன்'' என்றவள், தொடர்ந்து ''உங்களைப் பற்றி எடுத்துச் சொல்லி, அவர்களை ஒத்துக் கொள்ளச் செய்வேன்'' என்றாள்.

''ஆக கடைசி முடிவு. உன்னதுதானே? இதற்கு, இடையில் ஒருதரம் எதற்கு, ஒப்புதலுக்காக அவர்களைப் போய்ப் பார்ப்பது?'' என்று தீனதயாளன் கேட்டபோது, அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

ஆனால், அவனது பேச்சை ஒப்பவும் முடியவில்லை ''பெற்று வளர்த்தவர்களுக்கு மரியாதை காட்ட வேண் டாமா?'' என்று உரக்க முணுமுணுத்தாள்.

யோசனையாகப் பார்த்தவனின் முகம் உடனே மாறியது. ''என்னடா நீ? நான் அதிக வேலை செய்து, நம் தேனிலவுக்காக நாட்களை சேர்த்துக் கொண்டிருப் பதை, நீ கூட மறக்கலாமா? அதில், இடையிலே இரண்டு நாட்கள் விட்டுப் போனால், திருமணம் ஒரு

மாதம் தள்ளிப்போகும். அதற்கு நான் தயாரில்லை!'' என்று அவன் முடித்தபோது, அவளால் ஒன்றும் பேச முடியவில்லை.

இந்த நிலையில், தீனதயாளனின் பிறந்த நாள் வந்தது!

சாருபாவின் வாழ்வில் அடுத்த திருப்புமுனை, அன்று நேர்ந்தது!

# 5

பிறந்த நாளைக்காக என்ன பரிசு கொடுக்கலாம் என்று தீவிரமாக யோசித்துவிட்டு, அவனையே கேட்டாள் அவள். எல்லாமே வைத்திருந்தவனுக்கு எதை வாங்கிப் பரிசளிப்பது?

சந்தோஷமாகச் சிரித்தான் தீனதயாளன் ''நானே சொல்வதாக இருந்ததை, நீயே கேட்டுவிட்டாயே! ஒத்த மனம் என்பது, இதுதான்!'' என்று மகிழ்ச்சியோடு, தன் தேவையைத் தெரிவித்தான்.

அன்றைய தினம் முழுவதும், அவள் தன்னோடு இருக்க வேண்டும் என்று தீனதயாளன் கேட்டபோது, சாருபா சந்தோஷமாகவே ஒப்புக் கொண்டாள். இது, அவளுக்குமே இனிய விருந்துதானே? நாள் முழுவதும் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டு, சிரிக்கப் பேசும்

அவன் குரலைக் கேட்டபடி, உற்சாகத்துடன் தலை யாட்டினாள் அவள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால், விடுப்புகூட எடுக்கத் தேவையில்லை!

காலையில், தீனதயாளன் அவளது ஃப்ளாட்டுக்கே வந்து, அவளை அழைத்துப் போனான்.

கிளம்பும்போது மட்டும் முந்திய நாள் லேகா சொன்ன சேதியை, அதுவும் நல்ல சேதிதான்... மல்லிகா தாயாகப் போவதாக சந்தோஷமாகச் சொன்னதை, சாரூபாவும் மகிழ்ச்சியுடனேயே தீனதயாளனிடம் தெரிவித்தாள். அவனது உதவியால் நேர்ந்த நன்மை அல்லவா?

விஷயத்தைக் கூறும்போது ''டாக்டர் பாசிட்டிவ் என்றதும், மல்லிகா மருத்துவமனையில் இருந்தே வீட்டுக்குச் சொன்னாளாம். அவ்வளவு ஆனந்தம்! மண மாகி நாலு ஆண்டுகள் ஆயிற்று என்று லேகா சொன்ன தால், மருத்துவ ரீதியாக ஏதோ பிரச்சினையோ என்று நினைத்தேன்பா. ஆனால் அதுவும் வைரமணியம்மாவின் ஆலோசனையால்தானாம். ராட்சசி. எதிலெல்லாம் தலையிட்டிருக்கிறாள் பாருங்கள்!'' என்றாள் சாரூபா ஆத்திரத்துடன்.

''அவள் சொன்னால், கேட்கிறவனுக்கு மூளை இருக்க வேண்டும் அல்லவா? தன் குடும்பம் எது, தனக்கு வேண்டியது என்று யோசித்து, அதைச் சாதிக்கத் தெரியா மடைய...'' என்று சொல்லிக் கொண்டே போனவன், ஒரு குறுஞ்சிரிப்புடன் அவளை நோக்கி ''அவனைப் பற்றியெல்லாம் பேசி, என் இனிய பிறந்த நாளின்

பொன்னான நேரத்தை வீணாக்கியே தீரவேண்டுமா, சாரூபா? இன்று மட்டும் சாரூபத்தை மறந்துவிட்டு, என் காதல் தேவதையாக இரேன், கண்மணி!'' என்று சரசமாகக் கேட்ட பிறகு, அவர்களிடையே அது போன்ற பேச்சே எழவில்லை!

நாள் முழுதும் இருவரும் ஒன்றாகவே சுற்றினார்கள். நகரத்திலிருந்து சற்று தூரத்தில் குன்றும் அடிவாரமுமாக இருந்த ரிசார்ட் ஒன்றில் போய் சுற்றி அலைந்துவிட்டு, காலை, மதிய உணவுகளைச் சேர்ந்து வயிறு முட்ட 'பிரஞ்ச்' சாப்பிட்டார்கள். அப்புறமாக, நல்ல ஏசி தியேட்டரில் திரைப்படம் ஒன்றை, அவன் தோளில் சாய்ந்தபடியே பார்த்தாள். அதன் பிறகு, புதிதாகத் தொடங்கப்பட்டிருந்த ஒரு 'மாலில்' சுற்றினார்கள். கால் அலுத்ததும், இரவுக்கான உணவை வாங்கிக்கொண்டு, அவனது 'கெஸ்ட் ஹவுசு'க்குப் போனார்கள். சிரித்துப் பேசியபடியே இரவு டின்னர் சாப்பிட்டார்கள்.

அவ்வளவு நேர உரையாடலில் முழுக்க முழுக்கச் சிரிப்பும் வேடிக்கையும்தான்.

ஒரே தரம் 'சிக்னலி'ல் கார் நின்றபோது, பக்கத்தில் வந்து நின்ற பைக்கில் மூவராக வந்திருந்த இளைஞர்கள், காரினுள் அநாகரீகமாக எட்டிப் பார்த்து, எகத்தாளமாக ஏதோ சொல்லி, பகபகவென்று சிரிப்பது தெரிந்தது.

முகம் திருப்பி, நேரே சாலையைப் பார்க்கையில், ''அயிட்டங்கள் எல்லாம் இவன்களுக்கு எப்படித்தான் கிடைக்கிறதுகளோ...'' என்ற குரல் காதில் விழவும், தீனதயாளன் கார் கண்ணாடிகளை இறக்கியிருப்பது புரிந்தது. திகைப்புடன் அவனைப் பார்த்தாள் சாரூபா.

பேச்சு மேலும் தொடர்ந்தது ''விஷயம் அப்படியில் லைப்பா, இது போலக் காரைக் கண்டதும், அயிட்டங்கள் தானாகக் காரில் ஏறி விடுதுகள்!'' என்று ஒருவன் பதில் சொல்ல பகபகச் சிரிப்பு தொடர்ந்தது.

தீனதயாளன் காரிலிருந்து இறங்கப் போகிறானோ என்று சாரூபா கலக்கத்துடன் பார்க்கும்போதே, 'சிக்னல்' விழுந்து வாகனங்கள் பறக்கலாயின.

அந்த பைக்கும்.

ஒரு ரசாபாசம் தவிர்க்கப்பட்டிருக்கிறது என்று எண்ணினாலும், அவளுக்குமே மூடு கலைந்து போயிற்று. காரை வேகமாக ஓட்டிய தீனதயாளனின் முகமும் இறுகியிருந்ததும் எதிர்பார்க்கப்பட வேண்டிய விஷயம் தான். தன்னைச் சமனப்படுத்திக் கொண்டு, அவனிடம் பேச எண்ணி, சாரூபா வாயைத் திறந்தபோது, ஒரு பீட்சா ஹட்டின் முன் கார் நின்றது.

உரக்கப் பேசியபடி உள்ளே அமர்ந்திருந்த மூவரும், இவர்களைக் கண்டு திகைத்தனர்.

அவர்கள் அமர்ந்திருந்த மேஜைக்கே சாரூபாவை அழைத்துச் சென்று ''உங்கள் மொபைல் எண், முகவரி ஏதாவது தருகிறீர்களா?'' என்று தீனதயாளன் கேட்டான்.

''எ.. எதற்கு... ஏன் கேட்கிறீர்கள்? அதெல்லாம் தர முடியாது...'' என்று திகைப்பும், கலவரமும், அசட்டு வீராப்புமாக அவர்கள் மறுத்தார்கள்.

''பெரிதாக ஒன்றுமில்லைப்பா. இவள், மிஸ் சாரூபா. என் வருங்கால மனைவி... அடுத்த மாதம் எங்களுக்குத் திருமணம்... அழைப்பு அனுப்பலாம் என்று கேட்டேன்.

சந்தேகம் தெளிந்து விடும் அல்லவா?'' என்றான் தயாளன் இயல்பாகவே.

பையன்களின் முகம் செத்துவிட்டது. ''சா... சாரி சார் எங்களுக்குத் தெரியாது...'' என்று இறங்கிய குரலில் முணுமுணுத்தனர்.

தெரியாத விஷயத்தை, அப்படிப் பொது இடத்தில் பேசக்கூடாது, தம்பிங்களா. அத்தோடு சாரி சொல்ல வேண்டியதும், என்னிடமில்லை'' என்று சாரூபாவிடம் அவர்களை மன்னிப்புக் கேட்க வைத்தான்.

திரும்பி வந்து காரில் ஏறியபோது, சாரூபாவின் மனம் லேசாகியிருந்தது. தீனதயாளனின் புறம் திரும்பி ''அந்தப் பையன்களைத் துரத்துகிறீர்கள் என்று நான் நினைக்கவே இல்லை. தெரு நாய்க் குலைப்பு என்று மனதை அமைதிப்படுத்தியிருந்தேன்'' என்றாள் நன்றியோடு.

''நானும் அப்படியே விட்டிருப்பேன். ஆனால் அவன்கள் உன்னையல்லவா, சொன்னார்கள்!'' என்று அவன் கூறவும், அவளது உள்ளம் நெகிழ்ந்து போயிற்று.

இந்த நெகிழ்ச்சி அவளது பார்வையில் தெரிந்ததோ, என்னவோ, கண்கள் பளபளக்க ''ஊகூம் கண்மணி. இந்த இடத்தில் வைத்து இப்படிப் பார்க்கக்கூடாது. அப்புறம், பகலுக்கான திட்டங்கள் எல்லாம் மறந்து போய்விடும்'' என்று அவன் எச்சரிக்க, முகம் சிவக்க, அவனது தோளிலேயே சாய்ந்து கொண்டாள் சாரூபா.

இருவரின் வளர்ப்பு, படிப்பு, வாழ்க்கையில் நிகழ்ந்த ரசித்து மகிழத்தக்க பல்வேறு சம்பவங்கள்! ஒட்டி உரசி

அமர்ந்து, நடந்து பேசப் பேச நேரம் போனதே தெரிய வில்லை.

தற்செயலாகக் கடிகாரத்தைப் பார்த்த சாரூபாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. சின்ன முள் ஒன்பதைத் தாண்டிக் கொண்டு இருந்தது! காலையில் எட்டு மணியிலிருந்து, ஒன்பது மணி வரை, பன்னிரண்டு மணிக்கு மேலாக, இருவருமாக... இருவர் மட்டுமாக பொழுது போக்கியிருக் கிறார்கள்! ஒரு வினாடி கூடச் சலிக்கவில்லையே! இப்போது கூட, இவனை விட்டுக் கிளம்ப வேண்டுமே என்றுதான் இருந்தது!

ஒரு சன்னப்பெருமூச்சுடன் ''நான் கிளம்புகிறேன், தயா'' என்று சாரூபா எழுந்தாள்.

சோபாவில் இலகுவாய்ச் சாயந்தபடி ''எங்கேயாம்?'' என்று உல்லாச முறுவலுடன் விசாரித்தான் அவன்.

முறுவல் மிக அழகாகத்தான் இருக்கிறது என்று உள்ளூர ரசித்தபடி ''என் வீட்டுக்குத்தான், ரொம்ப தாமதமாகப் போனால், நன்றாக இராது'' என்றாள் அவள் புன்னகையுடனேயே.

''பின்னே போகாதே'' என்றான் அவன் இன்னமும் வசதியாகச் சாய்ந்தபடி.

அவளுக்குமே, அவனைப் பிரிந்து செல்ல மன மில்லைதானே? ஆனால்... ''அது இன்னமும் கேவல மாகி விடும். எழுந்திருங்கள் தயா!'' என்று அவனது கையைப பற்றி எழுப்ப முயன்றாள் சாரூபா.

''ஊகூம். நீ எனக்கு வாக்களித்த நேரத்தில், இன்ன மும் பதினோரு மணி நேரம் பாக்கி இருக்கிறதே!

நாளைக் காலையில் டாணென்று, உன்னைக் கூட்டிப் போய் விட்டு விடுகிறேன். அதுவரை நீ இங்கேதான் இருக்கப் போகிறாய். ஏனெனில், என் பிறந்த நாள் பரிசே நீதான்!'' என்று அவன் சொன்னதைக்கூட, அவள் விளையாட்டாகவே எடுத்திருப்பாள்.

ஆனால், அவளை எழுப்புவதற்காகப் பற்றிய அவளது கைகளையே பிடித்திழுத்து தன் மேல் விழ வைத்தவன் ''இன்று உன்னோடு காதல் செய்ய உத்தேசித்திருக் கிறேன், கண்மணி!'' என்று சல்லாபமாகக் கூறி உடல் அழுந்த அணைக்கவும், அவள் விதிர்விதிர்த்துப் போனாள்.

'உன்னோடு காதல் செய்ய உத்தேசித்திருக்கிறேன்!'

ஆமாம் அவளது காதுகளில் விழுந்தவை, இதே வார்த்தைகள்தான்!

பூட்டியிருந்த கதவைத் திறந்து, விளக்கையும், போட்டுக் காட்டியதைப் போல, ஏதோ துலாம்பரமாக விளங்கலாயிற்று அவளுக்கு.

அனிச்சைச் செயலாகத் திமிறி, அவனிடமிருந்து விலகி, எழுந்தவளுக்கு நெஞ்சு படீர் படீர் என்று வெடித்து விடும்போல அடித்துக் கொண்டது.

அவளோடு காதல் செய்ய உத்தேசித்திருக்கிறானாம். அவளிடம் இப்படிச் சொல்ல, அவனுக்கு எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்!

எப்படி வளர்ந்தவளிடம் என்ன வார்த்தை சொல்லி விட்டான்!

''அதற்கும் நீங்கள் வேறு ஆளைப் பார்த்திருக்க வேண்டும்!'' என்றாள் அவள் ஆத்திரத்துடன்.

நிமிர்ந்து அமர்ந்து ''வேறு ஆளா? நான் உன்னைத் தானே மணந்து கொள்ளப் போகிறேன்? வேறு ஆளை எப்படி... அநாகரீகமாகப் பேசுகிறாய், சாரூபா!'' என்று குரலில் ஒரு கண்டிப்புடன் கூறினான் அவன்.

அநாகரீகம்? நாகரீகம், அநாகரீகம் பற்றி இவனது அகராதியே வேறு போல! அல்லது...

துரும்பையும் பற்றுகிறவளாகி ''இது என்ன வேடிக்கை, தயா? வேடிக்கைதானே? ஆனால் நன்றாகவே இல்லை'' என்று குறைப்பட்டாள்.

''வேடிக்கையா? இல்லவே இல்லை. இன்று என் பிறந்தநாள், டார்லிங். இதை, இப்படித்தான் முடிப்பதாக நான் திட்டமிட்டிருந்தேன். ஏதாவது சொல்லி மூடைக் கெடுக்காமல், தயவு வை, கண்மணி'' என்றான் அவன் கெஞ்சலாக.

ஐயோ! தயா நிஜமாகத்தான். மனதில் இருப்பதைத் தான் சொல்லுகிறான்! இது தப்பு, இது போன்ற தப்பு களுக்கு, அவள் ஆளல்ல என்று, இவனுக்கு எப்படி புரிய வைப்பது?

தலையசைத்து ''தயா, இது சரியல்ல. என்னால் ஒத்துக்கொள்ள முடியாது. முறைப்படித் திருமணம் செய்து நல்லபடியாக நடக்க வேண்டியதை... ஊகூம் தப்பு தயா'' என்றவளுக்கு, அவனைப் போல வெளிப் படையாகப் பேசுவதே கடினமாக இருந்தது. உள்ளூர வேதனையாகவும் உணர்ந்தாள்.

தீனதயாளன் இவ்வளவு மட்டத்துக்கு இறங்குவான் என்று அவள் கனவில் கூடக் கருதவில்லையே!

ஆனால் அவனோ, தன் விருப்பத்தில் தப்பே இல்லை என்று சாதித்தான்.

''என்ன உளறுகிறாய், சாரூபி? திருமணத்தை எதிர் நோக்கி இருக்கிறவர்கள் சேர்ந்து வாழ்வது, நம் நாட்டிலும் பரவி வருகிற கலாச்சாரம். நாமும் விரைவில் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவர்கள்தானே? அத்தோடு, கூடவே இரு என்றா, சொல்லுகிறேன்? இன்று மட்டும்தானேடா? ப்ளீஸ்யா!'' என்று கொஞ்சலும், கெஞ்சலுமாக நைச்சியம் செய்தான்.

அவள் உறுதியாக மறுத்தாள். ''நீங்கள் சொல்வதைக் கலாச்சாரச் சீரழிவு என்றும் சொல்லுகிறார்கள். தயா. ஆனால் அது அவரவர் விருப்பம். என்னைப் பொறுத்த வரை. நான் அந்த மாதிரி வளரவில்லை. என்னால் அதை ஏற்கவும் முடியாது'' என்றாள் அழுத்தம் திருத்தமாக.

அப்போதும் ''பார்க்கத்தான் ஜீன்சும், டாப்புமாக நாகரீகமாக உடையணிவாய் போல! பட்டிக்காடு மாதிரி, இப்படி உளறுகிறாய்!'' என்று கேலி போல நயமாகப் பேசியே அவளை தன் வழிக்குக் கொண்டு வர முயன்றான், அவன்.

''வெளியே சென்று வேலை பார்க்கிறவள் நான். வசதியோடு பார்க்கக் கௌரவமாக உடையணிந்தால், என்னென்னவோ சொல்லுகிறீர்களே! அப்படியானால் சேலையைச் சுற்றிக் கொண்டு வந்தால், இந்த மாதிரி

நினைப்பை அடியோடு விட்டுவிடுவீர்களா?'' என்று அவனது பேச்சைக் கொண்டே அவள் மடக்கவும், அவன் முகம் கடுத்தது.

''இப்போது உனக்கு என்ன பிரச்சினை? நாளை மணக்க மாட்டேன். கைவிட்டு விடுவேன் என்று நினைத் தாயா? அப்படிப்பட்ட பொறுக்கியா நான்?'' என்று ஆத் திரப்பட்டான்.

சின்ன வயதிலிருந்து, பணக்கார வீட்டுச் செல்லப் பிள்ளையாக வளர்ந்தவன்! அவன் நினைத்தது நடக்காது என்றதும் சீறுகிறான்.

ஒருவர் அவனது விருப்பத்தை மறுப்பது, அவனுக்கு முதல் தடவையாகக் கூட இருக்கலாம். ஆனால் அது அவனது பிரச்சினை! அதற்காக அவள் வளைந்து கொடுப்பது, ஒருபோதும் நடக்காது! அவள் அந்த மாதிரி வளர்ந்தவளில்லை.

உன் சங்காத்தமே வேண்டாம் என்று முகத்தைத் திருப்பிக் கொண்டு, அங்கிருந்து வெளியேறிச் சென்று விட வேண்டும் என்று எண்ணியவளுக்கு, வேரோடியது போலக் கால்கள் அசைய மறுத்தன.

இவனை அடியோடு எப்படி இழப்பது?

தயாளனின் எண்ணம் நிச்சயம் நடக்காது! அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை!

ஆனால்... ஏதோ அங்கங்கே நடப்பதைப் பார்த்து, அவன் அசட்டுத்தனமாக ஆசைப்பட்டிருக்கலாம். ஒரு வேளை, அவளது உணர்வுகளை, அவளது கோட்பாடு

களைப் பற்றி அமைதியாக எடுத்துச் சொன்னால், தயா புரிந்து கொள்ள மாட்டானா?

அவனது மனதில் அன்பு இருந்தால், புரிந்து கொண்டு தான், ஆக வேண்டும். அவளது கருத்தை மதிக்கவும் தெரிய வேண்டும்!

அப்படி இல்லையென்றால்... கொள்கையளவில் இரு வேறு துருவங்களாக இருப்பவர்கள் ஒன்று சேர்வது ஒருபோதும் நடவாது!

ஆனால், தனது மனநிலை பற்றித் தீனதயாளனுக்குப் புரிய வைக்கச் சாரூபா முயன்றதெல்லாம் ஒரு பயனு மில்லாமல், அடியோடு வீணாயிற்று.

ஆசையை நிறைவேற்றிக் கொண்டு ஓடிவிடுவான், மணக்க மாட்டான் என்று எண்ணி, அதனாலேயே மறுக் கிறாள் என்று கருதி, மேலே மேலே அவனது சீற்றம்தான் மிகுதியாயிற்று.

''அவ்வளவு நம்பிக்கை இல்லாமலா, என்னை மணக்கத் தயாரானாய்? மணமாகிவிட்டால், அப்புறம் தூக்கி எறிய முடியாதா? அப்போது என்ன செய்ய... ஓ! மணந்து விவாகரத்து செய்தால் பணம் நிறையக் கிடைக் கும் என்பதற்காகவா? இருக்கும். அன்று கூடப் பத்துக் கோடி கேட்டாயே!'' என்று அவன் கூறவும், சாரூபாவும் கொதித்துப் போனாள்.

''அது வேடிக்கைப் பேச்சு என்று உங்களுக்கு நன்றாகவே தெரியும். ஆனால், ரொம்ப நல்லவர் மாதிரி நடித்து, பெரியசாமிக் கிழவருக்கும், மல்லிகா அக்காவுக் கும் உதவிகள் செய்தீர்களே. அதையெல்லாம் நம்பி,

உங்களை உத்தமராக எண்ணி, ஏமாந்தேனே, அதுதான் என் மடத்தனம்!'' என்றாள் அவள் பதிலுக்கு.

''நடிப்பென்ன? நான் அப்படிப்பட்டவன் இல்லை என்று சொன்னேனே. அதைச் செய்தது, உன் மகிழ்ச் சிக்காக.''

''அதாவது, இப்படி எல்லாம் செய்து காட்டிவிட்டால், சொடக்குப் போட்டுக் கூப்பிட்டாலே, படுக்கையில் வந்து விழுவாள் என்று நினைத்திருக்கிறீர்கள்!'' என்று சாரூபா சொன்னதை, ஆத்திரத்துடன் இடைமறித்தான் தீனதயாளன்.

''முட்டாள். அப்படிப் படுக்கைதான் முக்கியம் என்றால், உன் இனத்தில் அதற்குப் பஞ்சம் என்ன? என் மனதில் இருப்பது காதல் என்பதால்...''

''நல்ல வார்த்தையை கொச்சைப் படுத்தாதீர்கள்!'' என்று இப்போது குறுக்கிட்டது சாரூபா.

''கொச்சைப்படுத்துவது நீதான். லைசன்ஸ் தகடைக் கழுத்தில் மாட்டிவிட்டு நாய் போல இழுத்துப் போ என்கிறாய்.''

''இல்லை. கூப்பிட்டால் ஓடி வந்து, விரட்டினால், விலகிப் போய் விடுகிற நாயாக நீங்கள்தான் என்னை எடை போட்டிருக்கிறீர்கள்.''

ஏட்டிக்குப் போட்டியாகப் பேச்சு முற்றியது. திருமணப் பேச்சு, கல் தரையில் விழுந்த கண்ணாடிப் பாத்திர மாயிற்று.

ஒரு கட்டத்தில், ''நான் நினைத்ததை நடத்து கிறவன். ஒருநாள் உன்னை ஜெயிப்பேன். அதன் பிறகே,

உன்னை மணப்பேன்'' என்றான் அவன் சூளுரைப்பது போல.

''உடல் பலத்தை நம்புகிறீர்கள் போல?'' என்றாள் அவள் எகத்தாளமாக ''மற்றபடி வாய்ப்பே கிடையாது'' என்றாள் அலட்சியமாக.

''என்னைக் கேவலப்படுத்துகிறாய். ஆனால், அதற்குத் தேவையிராது. நீயாகவே வருவாய். நடக்கும்.''

''சர்வ நிச்சயமாக நடக்கும். உங்கள் கனவில் மட்டும்.''

''நான் வெற்றுக் கனவு காண்கிறவன் இல்லை. சாதிக்கிறவன். காலில் வந்துவிழ வைப்பேன்.''

எப்படித்தான் வீடு வந்து சேர்ந்தாளோ?

அவன் கொண்டு விட முன் வந்தபோதும், அவனது காரில் ஏற, அவளுக்கு மனமில்லை.

'மன்னவனும் நீயோ' என்பது போல, இவனது காரை விட்டால், போக்குவரத்துக்கு வழியா இல்லை?

அலுவலகத்தில் தாமதமாக வேலை முடித்துச் செல்லும்போது, நிர்வாகம் ஏற்பாடு செய்து தரும் வாடகைக் கார் நிறுவனத்திடம் செல்லில் சொல்லி, ஒரு டாக்சி வரவழைத்து, வீட்டுக்குப் போனாள்.

வீட்டின் அமைதியும், தனிமையும், ஒரு சில கணங்கள், மிகுந்த ஆறுதலைத் தந்தன.

எல்லாம், டி.வி. ஸ்டாண்ட் மீதிருந்த தீனதயாளனின் படத்தைப் பார்க்கும் வரைதான். அப்புறம், பேரருவி

யாய்ப் பெருகிய கணணீர் வெள்ளத்தில் கரைந்து போனாள்!

இன்று அங்கங்கே நடக்காதில்லை. மேலை நாடு களில் இருந்து இறக்குமதியான எத்தனையோ நல்லது கெட்டதுகளில், இதுவும் ஒன்று என்கிற அளவுக்குப் பரப்பிக் கொண்டு இருப்பதுதான். எனவே, அவனது விருப்பத்தை ரொம்பப் பெரிய குற்றமாகக் கருத முடியாது. ஆனால், அது அவள் விருப்பமாகவும் இருக்க வேண்டுமல்லவா?

அதில்லாதபோது, சட்டப்படி குற்றமாயிற்றே!

அதை விடவும், அவளுக்கும் விருப்பமா... ஏன், சம்மதமா என்று கேட்கக்கூட, அவனுக்குத் தோன்ற வில்லை. மணக்கப் போகிறவளிடம் அவ்..வளவு மரி யாதை!

இன்று மட்டுமல்ல, எப்போதுமே, அவன் அப்படித் தான். மணக்கப் போகிற பெண் என்றானே, அப்போதே, அவன் அப்படித்தான். மணந்து கொள்கிறாயா... மணந்து கொள்வோமா என்று, அவளிடம் சம்மதம் கேட்டானா, என்ன? அவனாக முடிவு பண்ணிச் சொன்னதுதானே?

அவளது அபிப்பிராயத்துக்கு, அப்போதே அவ்வளவு தான்! மதிப்பு!

மதிப்பாவது? மரியாதையாவது? அவளுக்கு அபிப்பி ராயம் என்று ஒன்று இருப்பதாகவே, அவனுக்கு எண் ணம் கிடையாது! இருக்கவும் கூடாது!

அவனுடைய தாயார் சொன்னதுபோல, அவனது காலைச் சுற்றும் நாய்க்குட்டிதான், அவனுக்கு வேண்டும்.

எப்போதுமே, அவளை மதித்து, கருத்துக் கேட்டு, எதையும் செய்யும் எண்ணமே அவனுக்குக் கிடையாது. எப்போதுமே சர்வாதிகாரம்தான்!

விசித்திரம் என்னவென்றால், அவனிடம் அவளுக்கு இருந்த மயக்கத்தில், அன்று வரை, அவளுமே, அவனது இந்தத் தன்மையை உணராமலே இருந்து விட்டாள். கடைசியாக இப்போது, அவளது மனம் அணுவளவும் ஒப்பாத ஒன்றை, அவன் நடத்த முயலும்போதுதான், உச்சந்தலையில் அறைந்தது போல, அவளுக்குப் புரிந்திருக்கிறது!

வருத்தம்தான். அவனைப் பிரிவது வேதனைதான். ஆனால், அவளது தன்மானத்துக்கு இழுக்கு நேர வில்லை. அந்த வகையில், அவள் தலை நிமிர்ந்து நிற்க லாம்!

ஆனால், பெருமையோடு நிமிர்வதற்குப் பதிலாக தலையணையில் முகம் புதைத்து, விம்மி விம்மி அழத் தான் சாருபாவால் முடிந்தது.

ஒருவாரம் சாதாரணமாகக் கழிந்தது.

நெஞ்சுக் கூட்டுக்குள் புழு அரிப்பது போல ஒரு வேதனை நிரந்தரமாக நிலைத்து விட்ட போதும், நல்லவேளையாக பெற்றோர் வரை இதைக் கொண்டு செல்லவில்லை என்று, ஒரு சிறு ஆறுதலும் சாருபா வுக்கு உண்டாயிற்று.

தெரிந்திருந்தால், இப்போது அவர்களும் சேர்ந்தல் லவா வருந்திக் கொண்டிருப்பார்கள்!

அதுவும், என்ன கேவலமான மிரட்டல் வேறு!

ஆனால், தொடர்ந்த ஒரு வாரத்தில், அதே ஊரில் தீனதயாளன் இருப்பதற்கான அறிகுறியே தென்படவில்லை.

ஒரு வாரம் முழுதாகச் சென்ற பிறகு, பழகிவிட்ட வேதனையோடு, பணக்கார வண்டு, விருப்பத்துக்கு ஆடும் வேறொரு புதுமலர் தேடிச் சென்றுவிட்டது போல என்று எண்ணி, அதற்கொரு முறை வருந்தி விட்டு, சாரூபா அலுவலகம் சென்றால், சற்று நேரத்தில் சேர்மன் அறையிலிருந்து அவளுக்கு அழைப்பு வந்தது.

வேலையைத் திறம்படச் செய்தால் தட்டிக் கொடுப்பதும், முக்கியமான வேலைகளை அவளிடம் கொடுப்பதும், அங்கே பழக்கம்தான். ஆனால், தந்தை போலப் பரிவுடன் பேசுகிற முதலாளியின் முகத்தில், வழக்கமான கனிவுதான் காணாமல் போயிருந்தது.

அவள் புரியாமல் பார்த்தபோது ''என்னம்மா, 'தீனா' சோடு உனக்கு ஏதோ பிரச்சினையாமே! பையன் சொன்னான். போய் அதை முதலில் முடித்துவிட்டு வரச் சொல்லுப்பா என்கிறான், மகன். அவ்வளவு சொல்லும்போது... போம்மா போய் அந்தப் பிரச்சினையைத் தீர்த்துமுடி. மற்ற எல்லாவற்றையும் விட அதுதான் முதல் என்கிறான்'' என்று விரட்டினார் பெரியவர்.

'தீனாஸ்' என்ற பெயரில் விழித்துக் கொண்டாலும், இன்னொரு தொழில் நிறுவனத்திற்குச் சென்று பேசக் கூடிய விஷயமா இது? அதெப்படி சொல்வான் என்று அவளுக்குக் குழப்பமாக இருந்தது.

அவளிடம் கேட்டதே, அசிங்கம். இதை அடுத்தவரிடம் போய் டமாரம் அடிப்பது என்றால், அந்தக் கேவலத்துக்குத் தீனதயாளன் இறங்கி விட்டானா?

யோசித்துவிட்டு "சார், இந்த நிறுவனத்துக்கு இறக்கம் தருவதாக நான் எதையும் செய்தது இல்லையே, சார் இப்படி என்னை எந்த நிறுவனத்துக்கோ போய், அங் குள்ள பிரச்சினையை முடித்துவிட்டு, வரச் சொல்லு கிறீர்கள்?" என்று கேட்டாள் சாரூபா.

சங்கடப்பட்டு லேசாக அசைந்தார் அவர் "என்னம்மா செய்வது? தீனதயாளன், நம் நந்துவுக்குத் தெரிந்தவர். இப்போது பெரிய ஒப்பந்தம் வேறு போட்டிருக்கிறார். இப்படிப்பட்ட ஒரு நண்பர் உதவி கேட்கும்போது, செய்து தானே ஆகவேண்டும் என்று, என்னையே கேட்கிறான் மகன். நான் என்ன செய்யட்டும் சொல்லு" என்றார் சேர்மன்.

பெரிய ஒப்பந்தமா? பணம் கொட்டிக் கிடக்கிற தல்லவா? என்ன வேண்டுமானாலும் செய்யலாம்!

உள்ளக் கொதிப்பை வெளியே காட்டாமல் "சார் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டு வருவதற்கு, எனக்கு ஓரிரு நாட்கள் அவகாசம் தேவைப்படலாம். அதற் கான விடுப்புக் கிடைக்குமா, சார்? அல்லது, இப்போதே நான் ராஜினாமா செய்துவிட வேண்டுமா?" என்று அமைதியாகவே கேட்டாள்.

"ஐயோ! தாராளமாக விடுப்பு எடுத்துக் கொள்ளம்மா. மனச் சாட்சியோடு வேலை செய்கிறவள் நீ. உன்னைப் போகச் சொல்ல, எனக்கு மனம் வருமா? போய்ப் பிரச் சினையைத் தீர்த்துவிட்டு, உடனேயே வந்துவிடு" என்றார் முதலாளி.

தீனதயாளனை, அவனது அலுவலகத்திற்கே சென்று சாரூபா சந்தித்தாள்.

கடந்த சில மாதங்களின விளைவாக, அவளை யாரும் தடுக்கவில்லை. சொல்லப் போனால், ரத்தினக் கம்பளம் விரிக்காத குறைதான்!

வெற்றிக் களிப்பை முகம் காட்ட, அவளைத் தீன தயாளன் உற்சாகமாக வரவேற்றான்.

''வாவாவா! உட்கார். சீக்கிரமே வருவாய் என்று எனக்குத் தெரியும். நந்தகுமாரனுக்குப் பயங்கரமாகச் சாவி கொடுத்திருந்தேனே! என்ன குடிக்கிறாய்? சூடாகக் காபியா? குளிர்ச்சியாகப் பழச்சாறா? நீதான், மூடுக்கு சரியாகப் பானம் குடிக்கிறவள் ஆயிற்றே!'' என்று விருந்தோம்பலில் இறங்கினான்.

''அப்படிக் குடிப்பது இப்போது ரொம்பக் கஷ்டம். பச்சை மிளகாய் சாறு, பாகற்காய் ஜூஸ் எல்லாம் எந்த நிலையிலும் இறங்காதுதானே?'' என்றாள் அவளும் சளைக்காமல்.

''ஓ! ரொம்பக் கோபமாக வந்திருக்கிறாய் போல!'' என்று புருவம் உயர்த்தினான் அவன்.

அவள் வந்திருப்பதே வெற்றிக்கு அறிகுறி என்று எண்ணினான் போலும்!

ஆனால், தலை சரித்து, அவனை ஏளனமாகப் பார்த்தாள் அவள் ''எனக்கு ஒரு பெரிய சந்தேகம் வந்தது. அதைத் தெளிந்து கொள்வதற்காக வந்தேன்'' என்றாள் நிதானமாக.

''ம்ம்?'' கேள்வியும் யோசனையுமாக நோக்கினான் தீனதயாளன்.

''ஆமாம்ப்பா. நீங்கள் புத்திசாலியாக என்று, இவ்வளவு நாள் எண்ணியிருந்தேன். ஆனால்...''

''ஆனால்...?''

''குருட்டுப் பூனை விட்டத்தில் பாய்ந்தது போல அதிருஷ்டத்தில் சம்பாதித்தீர்களோ என்று ரொம்பவும் தோன்றிவிட்டது.''

''நியாயமற்ற சந்தேகம் என்று உனக்கே தெரியும். சும்மா என்னை அவமதித்துப் பேசினால், ஆத்திரப்பட்டு, சீ போ என்று விலகி விடுவேன் என்று எண்ணினாயா?''

''ஐயோ, அப்படியெல்லாம் இல்லை சார்! ஆனால் சற்று யோசித்துப் பாருங்கள். என் படிப்புக்கு, நான் இன்னும் எத்தனையோ நிறுவனங்களிலே, இலகுவாகவே வேலை கிடைக்கும். நந்தகுமாரன் சாரைப்போல, எத்தனை நிறுவனங்களின் எம்டிகளுக்கு, உங்களால் சாவி கொடுக்க முடியும்? எந்த வேலையுமே கிடைக்காவிட்டாலும், நான் பட்டினி கிடக்க நேராது, தயாளன் சார். மக்களுக்காகக் கணிசமாகச் சேர்த்து வைத்து விட்டுத்தான், என் பெற்றோர் தொண்டு செய்யப் போனார்கள் என்று... உங்களிடம் கூடச் சொல்லியிருப்பதாக ஒரு ஞாபகம்! உங்களுக்கும் நினைவு இருக்கிறதுதானே? அப்படியிருக்க, இந்த முயற்சி...''

''சற்று அசட்டுத்தனமாகத்தான் தெரிகிறது'' என்று ஒத்துக் கொண்டான் தீனதயாளன் ''சற்று பிரமிப்பாயோ என்று ஓர் ஆசையும் இருந்தது. ஆனால் அதுவும் இருந்திருக்கக் கூடாதுதான்!''

தோல்வியை அவன் ஒத்துக்கொண்ட விதம், அவனை ஒரு மாதிரி பாதித்தது.

உள்ளம் இளக "இதுபோல முயற்சிகளை, இனிமேல் விட்டு விடுவீர்கள்தானே?" என்று மெல்லக் கேட்டாள், கேட்டிருக்கக் கூடாது.

"அதெப்படி?" என்று நிமிர்ந்தான் அவன் "ஒரு முயற்சி தோற்றால், உடனே குறிக்கோளை அப்படியே விட்டு விடுவதா? எடிசன் அப்படி விட்டிருந்தால், நமக்கு மின்சாரப் பல்பே கிடைத்திராது. வானத்தில் ஒரு விமானம் கூட ஓடியிராது. வெற்றிக்குரிய வேறு வழியை நாட வேண்டும் அவ்வளவுதான்" என்று அவன் சீரியசாகக் கூறவும் தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது சாருபாவுக்கு.

இருந்திருந்து, எதையும், எதையும் போய் ஒப்பிடுகிறான்.

கூடவே எண்ணம் வேறு விதமாகவும் ஓடிற்று. மின்சார பல்பைக் கண்டுபிடிக்குமுன், எடிசன் கிட்டத்தட்ட ஆயிரம் முறை முயற்சி செய்திருக்க வேண்டியிருந்ததாம். தீனதயாளனும் அப்படிப் பல நூறு முறை முயன்று பார்த்துக் கடைசியாகக் கம்பூன்றி வந்து கெஞ்சுவது போல ஒரு தோற்றம் எழ, உள்ளார்ந்த சிரிப்பில் அவளது கண்கள் பளிச்சிட்டன.

"என்ன சிரிப்பு?" என்று அதட்டிக் கேட்டவனிடம் அவள் மறைக்கவுமில்லை.

கூடச் சேர்ந்து சிரித்துவிட்டு "இந்த எதிர்பாராத பேச்சும் என்னமாய் மயங்குகின்றன, தெரியுமா?

சீக்கிரமே, இந்த பிரிவுக்கு முடிவு கட்டுகிறேன் பார்'' என்று அவன் ரசனையுடன் கூறவும், சாரூபாவின் முகம் மாறியது.

கொக்குக்கு ஒன்றே மதி என்று இருக்கும் இவனிடம் பேசிப் பயனில்லை என்று தோன்றவும், அவள் எழுந் தாள். ''என்னவோ உங்கள் பணம், உங்கள் காலம் வீண் முயற்சிகளில் அவைகளைச் செலவு செய்வது உங்கள் விருப்பம். இப்போது எங்கள் நிறுவனத்தில் நான் ராஜி னாமாக் கடிதம் கொடுத்து விடவா, தேவை இராதா?'' என்று தான் வந்த விவரம் மட்டும் கேட்டாள்.

தோளைக் குலுக்கினான் தீனதயாளன். ''உன்னை இன்னொரு வேலை தேட வைப்பதில் எனக்கென்ன லாபம், சொல்லு? பிரச்சினை சுமுகமாகத் தீர்ந்து விட்ட தாக நந்தகுமாரிடம் சொல்லி விடுகிறேன்... இப்போது கூட, ஒரு பானமும் குடிக்க மாட்டாயா?'' என்று ஒன் றுமே நடவாதது போல, அப்பாவி போல அவன் கேட்ட விதம் அவளுக்குச் சிரிப்பு மூட்டியது.

ஆனால், அதையே தனக்குச் சாதகமாக மாற்ற, அவன் முயற்சிப்பான் என்று உணர்ந்திருந்ததால் மனதை மறைத்து, ''யாராவது எதையாவது தருகிறார்கள் என்று, கண்ட கண்ட நேரத்தில் எதையாவது உண்டு, அருந்திக் கொண்டிருந்தால், ஆரோக்கியம் கெட்டுவிடும் என்று உங்கள் அம்மா சொன்னார்கள்'' என்று சாதுவாகச் சொன்னவள், அதற்குமேல் நில்லாமல் அங்கிருந்து கிளம்பி விட்டாள்.

ஆனால், அவன் இத்தோடு விடுகிறவன் அல்ல. அடுத்து என்ன?

# 6

ஓரிரு தினங்களிலேயே, தீனதயாளன் சாருபாவைத் தேடி அவளது அலுவலகத்துக்கே வந்தான்.

உள்ளே வரவில்லை. ஆனால், வேலை முடிந்து, ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு வந்தால் வெளி கேட்டின் அருகே காருடன் நின்று, அவளைக் கூப்பிட்டான். ''வா உன்னுடன் பேச வேணடும்'' என்று அழைத்தான்.

எல்லாம் வாயில் செக்யூரிட்டியும் பார்க்கத்தான். அவளது ஷிப்டில் பணிமுடிந்து வந்த சிலரின் கவனத்தையும் கவர்ந்திழுக்கக் கூடும்.

''எல்லோரும் பார்க்க இங்கே வந்து கூப்பிட வேண்டுமா? வீண் பேச்சுக்கு இடமளிப்பானேன்?'' என்று தணிந்த குரலில் கடுகடுத்தாள் அவள்.

ஆனால் ''ஆச்சரியமாக இருக்கிறது'' என்றான் அவன் ''என் அலுவலகத்துக்கே, அதுவும் வேலை நேரத்தில் என் அறைக்கே வந்து, என்னைச் சந்தித்தவள், மற்றவரின் பார்வை, பேச்சு பற்றிக் கவலைப்படுவது வேடிக்கையாக இல்லை?''

உண்மையே, பதில் சொல்ல முடியாத கேள்வியும் கூட.

ஒரு கணம் யோசித்துவிட்டு, செக்யூரிட்டியை அழைத்து, ஸ்கூட்டியின் சாவியைக் கொடுத்தாள் "உள்ளே கொண்டு நிறுத்திவிட்டு சாவியை வரவேற்பில் கொடுத்து விடுங்கள். நான் அவர்களிடம் வாங்கிக் கொள்கிறேன்" என்று பணிந்துவிட்டு காரில் ஏறினாள்.

"என்ன? சொல்லுங்கள்?" என்று கடுப்பு மறையாத குரலில் கேட்டாள்.

காரை ஓட்டியபடியே "அதுதான் சொன்னேனே, பேச வேண்டும் என்று, ஆனால் இப்படியல்ல. உட்கார்ந்து நிதானமாகப் பேச வேண்டும்" என்றான் அவன்.

"இப்போது உட்கார்ந்துதானே இருக்கிறோம்?" என்று தன்னை மீறிச் சொல்லிவிட்டு, நாக்கைக் கடித்துக் கொண்டாள் சாரூபா.

"என் கவனத்தில் பாதி, ஓட்டுவதில் அல்லவா, இருக்கும்? அத்தோடு எனக்கு உன் முகத்தைப் பார்த்துப் பேச ஆசை! பார்த்துக் கொண்டே இருக்கவும் ஆசை தான்!"

பெரிய ஹோட்டலில், முன்னேற்பாடு செய்த, ஒதுக்குப்புறமாய் தனி மேஜையில் அமர நேர்ந்தபோது, சாரூபா எரிச்சலைக் காட்டினாள்.

"மீண்டும், நீ வந்தாயே என்று சொல்லாதீர்கள். அது அலுவலகம். ஆனால், இது ஹோட்டல், தயா. நீங்கள் யார் அபிப்பிராயத்தையும் பொருட்படுத்தாத, பொருட்படுத்தத் தேவையற்ற நிலையில் இருக்கலாம். ஆனால், நான் அப்படியல்ல. இங்கே நம்மைப் பார்த்துவிட்டு யாரேனும் என் பெற்றோரிடம் போய், ஏதாவது சொல்லி

வைத்தால் நன்றாக இராது. அதுவும், நாம் பிரியப் போகிறோம் எனும்போது...'' என்று அவள் சொல்லிக் கொண்டே செல்கையில், அவன் குறுக்கிட்டான்.

''பிரிவானேன்?'' என்று தணிந்த குரலில் கேட்டான்.

காயத்தில் கத்தியை விட்டுத் திருகுவது என்றால், இதுதான் போல! வலியையும் வருத்தத்தையும் அடக்கிக் கொண்டு, ''என் வரையில் வேறு வழியில்லை, தயா'' என்றாள் உறுதியோடு.

''அது பற்றித்தான், பேச வேண்டும், சாரூபா பார். உன் மனதில் நான்தான் என்று, எனக்கு நிச்சயம். என் அன்பில் உனக்கு ஏதாவது சந்தேகம் இருக்கிறதா?'' என்று அவளை நேரே பார்த்துக் கேட்டான் தயாளன்.

பணக்கார வண்டு என்று எண்ணியது அவளுக்கு நினைவு வந்தது. ஆனால் அது மனதில் இருந்த வேதனை விளைவால் தோன்றிய வினாடி நேரத்து எண்ணம். மற்றபடி, ''ஊகூம்'' என்று மறுப்பாகத் தலையசைத்தாள் அவள்.

''இன்னொரு விதமாகக் கேட்கிறேன். பழைய சினிமாக்களில் வருகிற மாதிரி, தொட்டுப் பழகிவிட்டுக் கைவிட்டு விடுவேன் என்ற பயம் சிறிதும் இல்லை தானே?''

அவனை உற்றுப் பார்த்தாள் சாரூபா. ''நீங்கள் எங்கே வருகிறீர்கள்? என்று புரிகிறது, தயா. ஆனால் என் மறுப்புக்குக் காரணம், உங்களிடம் நம்பிக்கை, அது இல்லாமை என்றெல்லாம் கிடையாது. எனக்கு விவரம்

தெரிந்த நாளில் இருந்து, அறிவுறுத்தப்பட்டு, நல்ல தென்று நானும் ஏற்றுக்கொண்ட சில பல கொள்கைக்ள் இருக்கின்றன. சமூக விதிமுறைகளின்படி அங்கீகாரம் அற்ற உறவு கூடாது என்பது, அவற்றுள் முதன்மை யானது. காலம் காலமாகப் பின்பற்றி வரும் பண்பாட்டை உடைக்க, என்னால் முடியாது'' என்றாள் இளக்கமற்ற குரலில், தெளிவாக.

''என்ன பெரிய 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் இருந்து' கடைபிடித்து வரும் பண்பாடு? அன்றிலிருந்து இன்று வரை, எத்தனை மாறுதல்கள் வந்திருக்கின்றன? எத்தனையோ காலமாகப் பலதார மணம் நடைமுறைதான். பழைய பண்பாடு என்று, அதை இன்று ஒத்துக் கொள்வாயா? சட்டமே, அது கூடாது என்கிறது. காலம் மாறும்போது, நாமும் மாற வேண்டும் சாரூபி?'' என்றான் அவன்.

''என்னைப் பொறுத்தவரையில், என் பெற்றோர் பயிற்றுவித்த கொள்கைகளைப் பின்பற்றுவதில் மாற்றம் கிடையாது, தயா... அது உங்களிடம் இருந்துதான் வரவேண்டும்'' என்றாள் அவள் தீர்மானமாக.

''அதாவது, பின்னோக்கிப் போகச் சொல்லுகிறாய்!''

''அப்படிச் சொல்வது நீங்கள்தான் என்பது என் கருத்து. வரைமுறையற்ற பழைய குகை வாழ் மனிதர்களின் பாணிக்குப் போகச் சொல்லுகிறீர்கள்!''

''கருத்துச் சுதந்திரத்தோடு வாழலாம் என்பதற்கு, இப்படி ஒரு விளக்கமா? ஒரு தங்கத் தகட்டில்தான், நம் பண்பாடே அடங்கியிருப்பதாகக் கூறுவதுதான் அநாகரீக

மாக, எனக்குத் தோன்றுகிறது. சற்று யோசித்தால், உனக்கே புரியும். நீதான் பிடிவாதமாக, யோசிக்கவே மறுக்கிறாயே!''

''யோசிக்க மாட்டேன் என்று ஒரே பிடியாக இருப்பது நீங்கள்தான் தயா. வெறும் தங்கத் தகடைக் கழுத்தில் மாட்டுவது மட்டுமா, திருமணம்? அதை ஒட்டி எத் தனை சடங்குகள், உற்றார் உறவினரின் பங்களிப்புகள், ஆசிகள்! இதையெல்லாம் யோசித்து மாற வேண்டியது. நீங்கள் மட்டுமே'' என்றாள் அவள் திடமான குரலில்.

கொஞ்சமேனும் யோசிப்பானா என்று, சாரூபா ஆவலாக எண்ணும்போதே ''ஏனோ? உன்னை மாற்ற என்னால் முடியும் எனும்போது நான் ஏன் மாறவேண் டும்?'' என்றுரைத்து, லேசாகத் தலை தூக்கிய அவளது சிறு நம்பிக்கையும், அடியோடு அழித்தான் தீனதயாளன்.

சாரூபாவின் மனம் சலித்துப் போயிற்று.

தயாளன், இதையேதான் சொல்லிக் கொண்டிருக்கப் போகிறான். திரும்பத் திரும்ப இதையே கேட்டு, ஐயோ இது என்ன பைத்தியக்காரத்தனம் என்று வருந்தி... எதற்கு இந்தத் துன்பம்?

''போதும் தயா. நாம் இரண்டு பேருமே ஒவ்வொரு வகையில் பிடிவாதக்காரர்கள். அவரவர் சொன்னதையே தான் சொல்லிக் கொண்டிருக்கப் போகிறோம். அப்படி யிருக்க, எதற்கு இந்த வெட்டியான சந்திப்புகளும் வாக்கு வாதங்களும்? பேச்சு அளவு மீறும்போது, அது வேறு வேதனை! எதற்கு? இத்தோடு விட்டு விடுவோம். நாம் ஒருவரை ஒருவர் சந்திக்கு முன்னரும், நாம் நல்லபடி

யாக வாழத்தானே, செய்தோம்? அதுபோல இருந்து கொள்வோம். இப்போது கிளம்புகிறேன்'' என்று எழப் போனாள் சாரூபா.

சட்டென்று, மேஜை மீதிருந்த அவளது கையைப் பற்றி அழுத்தி, அவளது முயற்சியைத் தடுத்துவிட்டு ''என் அமைதியான வாழ்வில் அதிரடியாக, அதுவும் பிடிவாதமாகக் குறுக்கிட்டவள் இப்போது நீ வேண்டாம் என்றால், நான் கையைக் கட்டிக் கொண்டு 'யெஸ் மேடம்' போடுவேன் என்று நினைத்தாயா? நிச்சயமாக மாட்டேன். ஆனால், இதற்கு மேல், இந்த இடத்தில் வைத்துத் தொடர வேண்டாம். நிறுத்திக் கொள்வோம். இங்கே சிற்றுண்டி வகை நன்றாக இருக்கும். நம் இரு வருக்கும் ஆர்டர் கொடுத்துவிட்டேன். சேர்ந்து சாப்பிட்டு விட்டுப் போகலாம். இப்போதைக்கு இந்தப் பேச்சை விட்டு விடுகிறேன், சரிதானா?'' என்றான்.

அவள் தயங்கவும் ''ப்ளீஸ்யா. இரண்டு செட் உணவு வகைகளை வைத்துக்கொண்டு, தனி ஆளாக நான் அசடு வழிவதா? உன் வழக்கமான கற்பனைக் குதிரையைத் தட்டிவிட்டு யோசித்துப் பார். சகிக்காதுதானே? தயவு செய், கண்மணி!'' என்று கொஞ்சலும், குழைவுமாகக் கேட்டுக் கொண்டான்.

கற்பனையில் கண்ட தோற்றம், அவளுக்கும் பிடிக்காது போய்விட, சரிதான் என்று தலையாட்டினாள்.

வாக்கு மீறாதவனாகத் தீனதயாளன், அவர்களிடையே இருந்த பிரச்சினை பற்றி, அதற்கு மேல் ஒரு வார்த்தை கூடப் பேசினானில்லை.

ஆனால், விருந்தளிப்பவனாக, அவன் சிரிக்கச் சிரிக்கப் பேசிய பேச்சுக்களின் விளைவாக, வீடு சேர்ந்த பின்னரும் வெகு நேரம், அவளது முகத்தில் புன்னகை விகசித்திருந்தது. எண்ணி எண்ணி ரசிப்பதின் அடை யாளம்.

ஆனால் ஒரு கட்டத்தில், படுக்கச் செல்லுமுன் பல் துலக்கி முகம் கழுவுகையில், கண்ணாடியில் தெரிந்த முகத்தின் மலர்ச்சியை ரசித்துப் பார்க்கையில்தான் அவளுக்கு உண்மை உறைத்தது.

எத்தனையோ நாட்களுக்குப் பிறகு, முகத்தில் இந்த மலர்ச்சி எப்படி வந்தது? தீனதயாளனின் அருகாமை, பேச்சு சிரிப்பினால்தானே?

எத்தகைய சுகத்தை இழக்கிறோம் என்று தோன்றி விட, மனம் மறுபடியும் இரு மடங்குத் தவிப்பில் துடிக்க லாயிற்று.

இழப்பை உணர்ந்து வருந்துவதற்கு வேண்டிய அவகாசத்தை முழுமையாக அவளுக்குக் கொடுத்த பிறகே, தீனதயாளன், மறுபடியும் சாருபாவைத் தேடி வந்தான்.

அவளும் நன்றாகவே வருந்தி வாடி, மெலிந்து கூடப் போயிருந்தாள் எனலாம். வேலை நாட்களாவது பரவா யில்லை. வார விடுமுறையின் ஓய்வும் தனிமையும்தான் தாங்க முடியாது என்று அவளுக்கு நிச்சயமாகவே தெரிந்தது.

அடுத்த வார முழுமைக்கும் அணிவதற்கான துணி மணிகளைத் துவைத்து, அயர்ன் செய்து வைப்பது.

வெறுமனே சூடுபடுத்தி உண்கிற நிலையில் ஃப்ரிஜ்ஜில் வைக்கக் கூடிய உணவு வகைகள் எல்லாம் திட்டமிட்டுச் சமைத்து வைப்பது, வீடு சுத்தம் எல்லா வற்றையும் ரசித்துச் செய்துவிட்டு, மீதி நேரத்தை ஓய்வாக டி.வி. முன்னோ, புத்தகம் படித்தோ, இரண்டு நாட்களையுமே சந்தோஷமாகக் கழித்தவள் அவள் தானா?

வேலை, ஓய்வு இரண்டையுமே நினைக்கக்கூடப் பிடிக்காமல் போயிற்று. எனவே, அந்த வாரக் கடைசி யில் பெற்றோரிடம் போய் வரலாமா என்று யோசித்து விட்டு பிறகு அந்த எண்ணத்தையும் உதவாது என்று ஒதுக்கினாள் சாரூபா.

அவளது வாடலும், மெலிவும், நிச்சயமாகத் தாயின் கண்களுக்குத் தப்பாது. என்ன என்ன என்று கேட்கும் போது, அவளால் அடியோடு மறைக்கவும் முடியாது. அவளது கருத்துக்கு வீட்டில் மாறு இருக்காது, என்றாலும், தீனதயாளன் பற்றி பெற்றோர் குறைவாக எண்ணுவ தையும் அவளால் தாங்க முடியாதே!

எனவே, சில்லரை வேலைகள் நிறைய இருப்பதால், இந்த வாரம் ஊருக்கு வருவதற்கில்லை என்று பெற்றோ ரிடம் தெரிவித்துவிட்டு, வரட்டுத்தனமாகச் சும்மா ஊரைச் சுற்றினாள்.

எதையும் ரசிக்காமல் ''மால் மாலா''க் கால் ஓயு மட்டும் அலைந்து திரிந்துவிட்டுச் சோர்வுடன் வீடுவந்து சேர்ந்தாள். வெந்நீரில் குளித்துவிட்டு, வசதியான பிரம்பு நாற்காலியில் விழுந்தவளுக்கு கையோடு

வாங்கி வந்திருந்த சிற்றுண்டியைச் சூடு படுத்தி உண்ணக்கூட மனம் வரவில்லை. அப்புறமாக கொஞ்சம் பாலை மட்டும் குடித்துவிட்டு படுத்து விட வேண்டியது தான் என்று நினைத்தபடி சுருண்டு கிடந்தபோது, அழைப்பு மணி அடித்தது.

மணி ஒன்றும் ரொம்ப அகாலம் ஆகிவிடவில்லை. ஒன்பதுக்கும் குறைவுதான். என்றாலும், இந்த நேரத்தில் யார், என்று யோசித்தபடியே கதவில் பதித்திருந்த லென்ஸ் வழியே, வெளியே பார்த்தவளுக்கு அப்படியே தூக்கி வாரிப் போட்டுவிட்டது.

காரணம் வாயிலில் காத்து நின்றவன் தீனதயாளன்.

அவனையே நினைத்துக் கொண்டிருப்பதால், அவன் நிற்பது போலத் தோன்றுகிறதா என்று, தன் கண் மீதே சந்தேகம் வந்தது அவளுக்கு. இந்த நேரத்தில், அவன் இங்கே எப்படி வருவான்?

ஆனால், கண்ணைக் கசக்கிவிட்டுத் திரும்பவும் இரண்டாம் முறை பார்த்தபோதும், அங்கே அவனேதான் நின்றிருந்தான்.

லென்ஸ் வட்டத்தில் நின்றபடியே தீனதயாளன் மறுபடியும் அழைப்பு மணி பக்கம் கையை நீட்டவும், சாருபா பதறிவிட்டாள்.

பொதுவாக, அந்த குடியிருப்புவாசிகள் அடுத்தவர் விஷயங்களில் அனாவசியமாக மூக்கை நுழைப்பவர்கள் இல்லை. தனியே வசிப்பதால், யாரும் அதிக உரிமை எடுத்துக் கொண்டு உள்ளே வந்து உட்காரும் அளவுக்கு சாருபாவும் யாருடனும் ரொம்பப் பழகுவது கிடையாது.

பார்த்தால் ஒரு புன்னகையோடு ஒதுங்கிப் போகிறவள், ஆனால் வம்பு வழக்குக்கு இடம் தராத நல்ல பெண் என்கிற அபிப்பிராயம், இந்த இரவு நேரத்தில் இவன் இப்படிப் படபடவென்று மணியடித்துக் கொண்டிருந் தால் மாறிவிடாதா?

இப்படி எண்ணித்தான் சாருபா அவசரமாகக் கதவைத் திறந்தாள்.

''நல்லவேளை சீக்கிரமே கதவைத் திறந்துவிட்டாய், எங்கே காமீ சத்யபாமா, கதவைத் திறவாய்' என்று பாடும்படி ஆகிவிடுமோ என்று, ஒருகணம் பயந்தே போனேன்.''

அப்படி அவன் பாடுவது போல தோன்றிய கற்பனை யில், தன்னை மீறி எழுந்த சிரிப்பை அடக்கி, ''என்ன திடீர் விஜயம்?'' என்று விசாரித்தாள் அவள்.

''ஏன் வரக்கூடாதா? எத்தனையோ தரம், உன்னை இங்கே கூட்டி வந்து விட்டிருக்கிறேன். அழைத்துப் போயுமிருக்கிறேன். பழச்சாறு கொடுத்து உபசாரம் செய்தும் இருக்கிறாய். இன்று மட்டும் ஏன் இந்தக் கேள்வி?''

செக்யூரிட்டி எப்படி இவனை உள்ளே அனுப்பினான் என்ற கேள்விக்கு, இப்போது அவளுக்கு விடை கிடைத்தது. ஆனால், பகலுக்கும் இரவில் வருவதற்கும் வேறுபாடு இல்லையா என்று நினைக்கும்போதே, அந்த வேறுபாட்டை இவனல்லவா உணர்ந்திருக்க வேண்டும் என்று தோன்றியது.

''இந்த நேரத்தில் வந்ததால்தான்'' என்றாள் பதிலுக்கு.

அவன் விரும்பிய பேச்சு வந்தது போலும். ஓரக் கண்ணால் பார்த்து "ஏன் பயமாக இருக்கிறதா?" என்று வினவினான்.

"ஏன்? என்ன பயம்?" என்று அசிரத்தையாகக் காட்டிக் கேட்டாள் அவள்.

"இல்லையா? உன்மேல் ஆசைப்பட்ட மனிதன் இரவு நேரத்து மயக்கம் வேறு. கூடவே சவாலும் இருக்கிறது. எப்படியும் பயம் இருக்கும்தானே?"

"உடல் பலத்தைப் பயன்படுத்த மாட்டேன் என்று உறுதியாகச் சொல்லியிருக்கிறீர்கள். அப்புறம் எனக்கென்ன பயம்?" என்று தொடர்ந்து அலட்சியம் காட்டியே பேசினாள் அவள்.

"அப்படியானால், என் பேச்சில் நம்பிக்கை இருக்கிறது?"

"நிச்சயமாய், இல்லாவிட்டால், கதவை திறந்து உள்ளே வரவிட்டிருப்பேனா?"

ஆனால் "ஓ அப்படி வேறு இருக்கிறதோ?" என்று கேலியாகப் புருவம் உயர்த்திப் பேசியவன், தொடர்ந்து "ஒருவேளை, பலம் தேவைப் படாமலும் போகலாம்!" என்று பூடகமாகப் பேசவும், அவளுக்கு நெஞ்சு துடிப்பு வேகமெடுக்கத் தொடங்கிவிட்டது.

ஊகூம். இவன் பேசுகிற பாணியே சரியில்லை. இவனை, உடனே கிளப்பியாக வேண்டும்!

இன்னும் ரொம்ப நேரம், இப்படிப் பாதிப்பே இல்லாதது போல நடிப்பது மிகவும் கடினம்.

இல்லாத சிரிப்பை வரவழைத்து, வேடிக்கைப் போலக் காட்டி "விளையாட்டுப் பேச்சு போதும், தயாளன்.

கிளம்புங்கள். எனக்கு நாளைக்கு நிறைய வேலை இருப்பதால்..." என்றவளை இடைமறித்தான் தீனதயாளன்.

"என்னது? ஞாயிற்றுக்கிழமையா வேலை?" என்று பெரிதாக அதிசயம் காட்டித் தன் பங்குக்கு நடித்தான் அவன்.

ஒரு கணம் திகைத்தாலும், உடனேயே அவளால் பதில் சொல்லவும் முடிந்தது "இராதா, பின்னே? வார முழுதுக்கும் தேவையான துணிகளைத் துவைத்து, அயர்ன் பண்ணி வைக்க வேண்டும். இரண்டு மூன்று குழம்பு வகைகளைச் செய்து ஃப்ரிஜ்ஜில் வைக்க வேண்டும். வீடு சுத்தம் செய்ய வேண்டும். சீக்கிரமாகத் தூங்கி காலையில் எழுந்தால்தானே, எல்லாம் செய்து முடிக்க முடியும்? கிளம்புங்கள், சார்!" என்று இயல்பாக பேசியே அவனை அனுப்ப முயன்றாள் சாரூபா.

"எல்லாம் சரியாகத்தான் பேசுகிறாய்" என்றான் அவனும் "ஆனால் பசியோடு வந்தேனே, அதைத் தீர்க்க வேண்டாமா?" என்று சற்று மெலிந்த குரலில் குறைப் பட்டான் தீனதயாளன்.

இரட்டை அர்த்தத்தில் பேசுகிறானா?

எதார்த்தமாக எடுத்து "உங்கள் வீட்டில், சைனீஸ் என்ன, செட்டிநாடு என்ன என்று வகைவகையாகச் செய்து தரச் சமையல்காரன் இருக்கிறான். போய், வேண் டியதைச் செய்து தரச் சொல்லிச் சாப்பிடுங்கள்!" என் றாள் சாரூபா.

"பிரமாதமான விருந்துபசாரம். வள்ளுவர் கேட்டால் மயக்கம் போட்டு விழுந்து விடுவார், பாவம்!

அதிருக்கட்டும். இந்த நேரத்தில் என் சமையல்காரன் மூஞ்சியைப் பார்க்கப் பிடிக்காமல்தானே, இங்கே வந் திருக்கிறேன்! என் பசியாற ஏதேனும் கிடைக்காமல், நான் இங்கிருந்து செல்லப் போவதில்லை! தயவு செய், கண்மணி!''

ரொம்பவே இரட்டை அர்த்தம், தொனித்தது. ஆனால் இல்லாமலும் இருக்கலாம்.

துரும்பையும் பற்றுகிறவளாகி, அவனது உணவைப் பற்றி யோசிக்கும்போதே, சாரூபாவின் மனதுள் இன் னொரு திட்டமும் உருவாயிற்று. கொஞ்சம் கோணல் புத்தி என்றாலும், தீனதயாளன் மனிதன்தான்.

வரும்போது கையோடு வாங்கிக் கொணர்ந்த சிற் றுண்டியைச் சூடுபடுத்தி அவனுக்குக் கொடுப்பது சரிவராது. எனவே, அதை ஃப்ரிஜ்ஜினுள் வைத்துவிட்டு, உப்புமா செய்வதாகச் சொல்லி, ஃப்ளாட்டின் குட்டிச் சமையல் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

புத்தி என்னதான் திட்டமிட்டாலும், மனம் ஒத்துழைக் காமல் அமைதியிழந்து கலங்கியது.

தீனதயாளன், தான் சொன்னதை நடத்துகிற பிடிவாதக் காரன். அவனாக மனம் மாறி வருவது, வெறும் கனவு, நப்பாசைதான் என்று சாரூபா உணர்ந்தே இருந் தாள். தன்னையும் அறிந்தவள். எனவே கடைசி முடிவு பிரிவுதான் என்பதில், அவள் உறுதியாகவே இருந்த போதும், அந்தக் கட்டம் நெருங்குகிறதோ என்ற எண்ணமே, அவளுக்குத் தாங்க முடியாத தவிப்பாக இருந்தது.

பிரிவு என்று நினைப்பது வேறு. அந்த நிலைக்கு தள்ளப்படும் ஒவ்வொரு கணத்தையும் அனுபவிப்பது வேறு அல்லவா?

வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலை, கொத்துமல்லித் தழை, எல்லாம் கழுவி எடுத்து வைத் துக்கொண்டு, வெட்டும் போர்டையும் சுத்தம் செய்யும் போது, பின்புறம் அரவம் உணர்ந்து, அவளது உள்ளம் மிகவும் சோர்ந்தது.

ஆனால், தனியே உட்கார்ந்திருக்க போரடித்து, வெறும் பேச்சுத் துணைக்காகக் கூட, அவன் இங்கே வந் திருக்கலாம்.

வெங்காயத்தை உரித்து வெட்டும் பலகையில் வைத்து கத்தியை எடுத்தாள்.

''வியர்க்கவில்லை?'' என்று கழுத்தடியில் விரிந்து கிடந்த கூந்தலை, தீனதயாளனின் கை விலக்கியது.

இல்லை. இன்னமும் தப்பாக நினைக்கக்கூடாது. மெய்யாகவே, சமையலறைச் சூடு, வியர்வைக்காகவே, கூந்தலை ஒருபுறமாக ஒதுக்கி விட்டிருக்கலா... ம்... என்று அவள் தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டிருக்கும்போதே, அவனது உதடுகள் அவளது பின்னங்கழுத்தில் ஒற்றிப் பிரிந்தன.

''என்ன வாசனையாக இருக்கிறாய், டார்லிங்!'' என்று காதோரம் ரகசியம் பேசி, அவள் மனதில் கொஞ்ச நஞ்சம் மிச்சம் மீதியிருந்த ஐயத்தையும் தீனதயாளன் முழுமை யாக நிவர்த்தி செய்தான்.

இனிமேல் யோசிக்கவும் ஒன்றுமில்லை. தாமதிக் கவும் அவகாசமில்லை!

பல்லைக் கடித்துக்கொண்டு தன் திட்டத்தை செய லாற்ற முனைந்தவள் சுரீலென்ற வலியில் "ஆ" என்று கத்திவிட்டாள்.

"என்ன என்ன?" என்று பதறிப்போய், அவளது கையைப் பிடித்துக் கவலையுடன் அவன் பார்த்தது. அவள் எதிர்பார்த்ததே. ஆனால் "ஐயோ எவ்வளவு ரத்தம்?" என்று அவன் மேலும் பதறவும், குனிந்து பார்த்தபோது, அவளுக்கே தலை சுற்றிவிட்டது.

வெட்டும் பலகை முழுவதிலும் ரத்தம்! "கண்களைப் பிடரியில் வைத்துக்கொண்டா, கத்தியால் காய் வெட்டு வாய்?" என்று அதட்டியவாறு அவளைப் பார்த்தவனின் பேச்சு ஒரு கணம் நின்றது.

"முதலுதவிப் பொருட்கள் ஏதாவது இருக்கிறதா? அல்லது, கத்தியளவு தேவையிராது என்று வாங்காமலே விட்டுவிட்டாயா?" என்று ஒரு மாதிரிக் குரலில் கேட் டான் அவன்.

"இ... இருக்கிறது. கு... குளியலறை அலமா...ரியில்..." என்று பதில் கூறியபோது, பெரிய தப்பு செய்து மாட்டிக் கொண்டவள் போல, அவளுக்குத்தான் திக்கித் திண றியது.

காயத்தை சுத்தம் செய்து மருந்திடும்போது, இன் னொரு திட்டு விழுந்தது.

"இவ்வளவு ஆழமாக வெட்டி வைத்திருக்கிறாயே! தேவையான அளவு கூடத் தெரியாதா?"

தேவையற்றது... தேவை...

சாரூபா என்ன பதில் சொல்லுவாள்? வாயே திறக்க வில்லை. முடியவில்லை.

அவசியத்திற்கு சற்றுப் பெரிதாகவே கட்டுப்போட்டு விட்டு, தீனதயாளன் அங்கிருந்து கிளம்பினான்.

கதவைத் திறக்குமுன் திரும்பி ''ரத்தக் காயம் பட்டிருக்கிறதே, துணையிருக்கட்டுமா என்று கேட்க ஆசை'' என்று அவளை அதிர வைத்தான் அவன்.

இது என்ன, புதுப்பூதம் கிளப்புகிறான்?

அவள் பேந்த விழிப்பதைப் பார்த்துவிட்டு ''பயப் படாதே செய்தி சரியாக உணரப்பட்டு விட்டதால், அப் படிக் கேட்க எனக்குத்தான் பயமாக இருக்கிறது. ஆனா லும் ஒன்றுமில்லாத விஷயத்தில் இவ்வளவு தீவிரமா என்று, இதை முழுதாக நம்புவதுதான் இன்னமும் கடின மாக இருக்கிறது. ஓர் ஆர்வக் குறுகுறுப்பில் கேட் கிறேன் சொல்லு. மொத்தம் பத்து விரல்கள், பத்து நாட் களுக்குப் பிறகு என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று கேட்டான்.

இவ்வளவு ரத்தத்தைப் பார்த்ததும், அவளது மறுப்பை நம்ப முடியவில்லையாமா? ஒவ்வொரு விரலாக வெட் டிக் கொள்வது, அவ்வளவு எளிதாகவா, இவனுக்குத் தோன்றுகிறது? பத்து விரல்களுக்குப் பத்து நாட்கள், கணக்கு வேறா? இதற்கு மேலும் ஒன்றுமில்லாத விஷயம் என்கிறானே!

கோபம் அவளை நிமிர வைத்தது. என்ன சொன்னால் இவனுக்குத் தைக்கும்?

தலை சரித்து அவனை நோக்கிப் பதில் சொன்னாள் சாரூபா. ''விரல்களுக்கு அடுத்துக் கையில் மணிக்கட்டு என்று ஒரு பகுதி உண்டு, எனக்கும் இருக்கிறது, இரண்டு கைகளிலும்!''

முகம் சிவந்து ''ராட்சசி! ராட்சசி!'' என்று சீறியவன் சட்டென கதவைத் திறந்து வெளியே சென்றுவிட்டான், திரும்பிப் பாராமலே.

தூக்கமின்றி, வெகு நேரம் சாரூபா சும்மா உட்கார்ந் திருந்தாள். படுத்துத் தூங்க வேண்டும் என்ற எண்ணம் கூட வரவில்லை. தீனதயாளனின் வருகையும், கோபமாக அவன் பிரிந்து சென்ற விதமும், அவளை அவ்வளவு பாதித்துவிட்டது.

ஒருவகையில் அவளுக்கு வெற்றிதான். அவளது ரத்தம், அவனது மோகத்தை அணைத்துவிடும் என்று அவள் நினைத்தது சரிதான். அவளிடம் அந்த அளவு அக்கறை, அவனுக்கு இருக்கத்தான் செய்தது.

ஆனால் இயன்ற முதலுதவியைச் செய்துவிட்டுப் போய்விடுவான் என்று அவள் எண்ணியது நடக்க வில்லை.

மாறாக, அவளது சின்னத் தந்திரத்தை, அவன் உடனே கண்டுபிடித்து விட்டான்! அந்த அளவு கூர்மை இல் லாமல், இந்த வயதில் இத்தனை வெற்றிகள் அவனுக்குச் சாத்தியமில்லை என்று, அதுகூட அவளுக்குப் பெரு மையே.

ஆனால், இப்படி ரத்தம் சிந்தவும் தயாராக இருக் கிறாள் என்று தெரிந்த பிறகும், அவளது கொள்கைப்

பிடிப்பை அவன் மதிப்பதாக இல்லை என்பது ஒரு வருத்தம் என்றால், ஒன்றுமில்லாத விஷயத்துக்காக அவனை மிரட்டி, விரட்டியதாகக் கருதியல்லவா, கோபப் பட்டிருக்கிறான்.

அவனது கோபம், அவளுக்கு இவ்வளவு துன்பம் தர, ஒரு காரணம், அந்த ஆத்திரத்தில் அன்றோடு அவன் பிரிந்து போய் விடுவானோ என்ற அச்சம். அந்த அச்சமும், அற்ப சொற்பமானதல்ல.

இன்னொன்று அந்த அடுத்த காரணத்தைப் பற்றி நினைத்துப் பார்க்கக்கூட சாருபாவுக்குத் தயக்கமாக இருந்தது.

ஆனால், தன் நெஞ்சறிய பொய்யற்க என்று வளர்ந் தவள், அப்படி உண்மையை ஒத்துக் கொள்வதானால்... அவளது கழுத்தில் முத்தமிட்டபோது, அப்படியே பின்புறமாக அவன் மீது சாய்ந்து கொள்ள வேண்டும் போல, ஒரே ஒரு கணம் என்றாலும், அவளுக்குத் தோன் றத்தானே செய்தது?

இதுதான் அவளை மிக மிகக் கலங்கடித்துவிட்ட விஷயம்.

அப்படியானால், எத்தனையோ ஆண்டுகளாக, இது சரி. இதுதான் ஒழுங்கான வாழ்க்கை முறை என்று உறுதியாக எண்ணி, அனுசரித்து வந்ததெல்லாம், உடல் தேவையின் முன் காற்றில் பறந்துவிடுமா? இன்னொரு தரம் அவன் முயன்றால், கொள்கையாவது, இன்னொன் றாவது, என்று தூக்கிப் போட்டுவிட்டு, அவனிடம் தன்னை ஒப்படைத்து விடுவாளோ?

தயாளன் ஒன்றும் அவளை விட்டுவிட்டு ஓடிவிடப் போவதில்லை. திருமணம் கட்டாயம் நடக்கும். வேறு யாருக்கும் தெரியவும் வாய்ப்பில்லை... என்று எண்ணம் ஓடும்போதே, அவளுக்கு மனம் கசந்துவிட்டது.

இந்த மாதிரி சமாதானங்கள் மனதில் தோன்றுவது என்றால், என்ன அர்த்தம்? தீனதயாளனுக்கு அடி பணிய, அவள் மனம் கிட்டத்தட்ட தயாராகிவிட்டது என்பது தானே?

வேறு யாருக்கும் தெரியாமல் போனாலும், அவளுக்குத் தெரியுமே! அது வாழ்நாள் பூராவும், அவளைச் சுட்டெரிக்காதா?

அந்த அவமானத்தோடு எப்படி வாழ்வாள்? நல்லொழுக்கம் பற்றி கற்றுக் கொடுத்த பெற்றோர் முகத்தை எப்படிப் பார்ப்பாள்?

மிக மிக இலகு வாழ்க்கை வாழும் வெளி நாட்டிலும், பெற்றோர் கற்பித்த நெறிமுறைப்படி வாழ்கிறவன், அவளுடைய அண்ணன், சுகந்தன். ஆண்மகனா என்று கூடக் கேட்பார்களாம். சிரித்துக்கொண்டே விலகிப் போய்விடுவானாம். அந்த அண்ணன் முகத்தைத்தான், ஏறிட்டு எப்படிப் பார்ப்பாள்?

இரவெல்லாம் உட்கார்ந்து யோசித்தவளால், ஒரே ஒரு முடிவுக்குத்தான் வர முடிந்தது.

அதன் விளைவாக, அலுவலகத்தில் ஒரு வாரம் விடுப்பு கேட்டுக்கொண்டு சாரூபா தான் பிறந்து வளர்ந்த ஊருக்குப் போனாள்.

# 7

எதிர்பாராது வந்த மகளைப் பார்த்து, தாய் தந்தை இருவருக்கும் மிகுந்த மகிழ்ச்சி.

வீட்டில் இருந்து, மகளுக்குப் பிடித்தமான உணவு வகைகளைச் சமைத்து கொடுக்கும்படி கூறி, மனைவியை விட்டுவிட்டு கந்தவேல் தனியே பணிக்குப் போனார்.

சாரூபாவுக்கும் அது சந்தோஷமே. தாயிடம் சுகமாகப் பேசிக் கொண்டிருக்கலாமே!

ஹால் கண்ணாடியில் பார்த்துத் தலையை வாரிக் கொண்டிருந்தாள் சாரூபா.

அவளது தலைக்குப் பின்னே தந்தை மனைவியிடம், ஏதோ சைகை செய்தது, தெளிவாகவே தெரிந்தது.

அவளுக்குத் தெரியாமல், அந்த வீட்டில் நாடகம் நடத்தி விட்டுத் தந்தை சென்றுவிட, தாயாரும் சமையலைப் பார்க்கப் போனாள்.

தந்தை, அப்படி என்ன விஷயம் பற்றி, அவளுக்குத் தெரியாமல் ரகசியம் பேசினார்?

அவர்களுக்கு இப்போது பெரிய விஷயம், அவளது திருமணம்தான். அவளே எண்ணி வந்த விஷயமும் அதுதான்.

ஆனால் சந்தர்ப்பம் நேரும்போது, பேச மாட்டாமல், தயங்கினாள். இருக்கட்டும், இன்னமும் ஆறு நாட்கள் இருக்கின்றனவே!

ஆற்றுப் படுகையில் சற்று நேரம் காலாற நடந்து விட்டு வருவதாகச் சமையலில் ஈடுபட்டிருந்த தாயிடம் சொல்லிவிட்டு, சரசுவதி அரை மனதாய் விடை கொடுத் ததைக் கவனியாதவள் போலக் கிளம்பினாள்.

எதைப் பேசுவது என்றாலும், மனதைத் திடப்படுத்திக் கொண்டு, அப்புறம்தான் சாத்தியம்.

இது சிந்துபூந்துறை அல்ல என்றாலும், இதுவும் தாமிரபரணிக் கரையோரமே. தொண்டு நிறுவனத்தில், பணியில் சேர்ந்ததுமே, குடியிருப்பை இங்கே மாற்றி விட்டார்கள். அவர்கள் தொண்டு செய்யும் இல்லமும் அருகில்தான் இருந்தது. செய்யும் வேலையில் வரு மானம் கொஞ்சம் என்றாலும், சிந்துபூந்துறை வீட்டு வாடகையும் சேர்ந்து, செலவுக்குத் தாராளமாகவே இருந்தது. பெருகி வரும் நெல்லை மாநகரின் பாதிப்பை ஒத்திடுகையில், இங்கே இயற்கை எழில் கொஞ்சியது எனலாம்.

குற்றால சீசன் என்பதால், காற்றில் இருந்த ஈரப்பத மும், உடலைக் குளிர்விப்பதாகவே இருந்தது. ஆனால், சாரூபாவின் உள்ளம்தான் குளிர மறுத்து கணகணத்துக் கொண்டே இருந்தது.

ஆற்றின் கரை ஏறி, நதிப்புறமாக இறங்கினாள். சிற்றோடையாகத்தான் நதிநீர் சென்றது. அங்கங்கே பாறைகளின் இடுக்குப் பள்ளங்களில், சிறு மடுக்களாகத் தண்ணீர் தேங்கியும் நின்றது.

அந்த நீரே உலகமாக, இங்குமங்கும் பாய்ந்த வண்ண மீன்களால் அழகு கண்களை கவர்ந்தாலும், கருத்து வரை எட்டவில்லை. முன்பானால், பக்கத்திலேயே உட்கார்ந்து, தண்ணீருக்குள் கையை விட்டுக்கொண்டு அசையாமல் அமர்ந்திருப்பாள். மீன்கள் அச்சமகன்று கையில் முட்டும்போது, அவ்வளவு சந்தோஷமாக இருக்கும். இப்போது நின்று பார்க்கக்கூட தோன்றவில்லை.

கால் போன போக்கில் உடல் சென்றாலும் மனம் ஒன்றையே நினைத்து உளைந்தது.

அவள் எண்ணி வந்தது, எந்த அளவுக்கு நிறைவேறக் கூடும்? அல்லது அனாவசியமாக, இன்னும் பெரிய சிக்கலில் தானே போய் மாட்டிக் கொள்ளப் போகிறாளா?

பேசாமல் திரும்பிப் போய்விடலாம் என்றால், அதற்கும் அவளுக்குத் தைரியம் வரவில்லை. தன்னிடமே நம்பிக்கை போய்விட்டால், அப்புறம் எதைச் செய்யத் தான், துணிவிருக்கும்?

'தெனாலி' திரைப்படத்தில் வருவது போல, நிற்கப் பயம், உட்காரப் பயம், படுக்கப் பயம், படுத்துத் தூங்கப் பயம் என்றாகிவிடப் போகிறாளா?

அப்படி நடுங்குவது போன்ற காட்சி மனத்திரையில் தோன்ற, இன்னமும் மனம் சோர்ந்தது.

சே! இது என்ன பைத்தியக்காரத்தனம்? அது போலெல்லாம் ஆகாது. சுய விருப்பமாகத் தொண்டு மனதோடு முதியோர் இல்லம் வைத்து நடத்துகிறவன் எனும் போது...

"... ஹலோ, ஹலோ உங்களைத்தான்ங்க... அந்தப் பக்கம் முள் செடி வெட்டியிருக்கிறார்கள். காலில் குத்தி விடப் போகிறது... வெறும் காலோடு நடக்கிறீர்களே!" என்று ஒருவன், அவளைத்தான் கூறி அழைத்துக் கொண்டிருந்தான்.

தன்னையறியாது காலைப் பார்த்தாள், வெறும் கால் தான்.

ஈஷா ஜக்கி வாசுதேவ் பேச்சில், நிலத்தோடும் நம் உடலுக்கு உள்ள தொடர்பு பற்றிக் கூறியதைச் சாருபா ஒரு தரம் கேட்டதுண்டு. 'நம் உடம்பே மண்ணால் ஆனது. நோய் நொடி என்று வருகிறவர்களைச் செருப்புக் கழற்றிவிட்டுத் தோட்டத்தில் நடக்க விட்டாலே பாதி குணமாகிவிடும்' என்று அவர் சொன்னதைக் கேட்ட பிறகு, நிலம் சுத்தமாக இருந்தால், வெறும் காலோடு நடப்பது, அவளது வழக்கம். மனம் எங்கெங்கோ உழன்றபோதும், கால் வழக்கத்தை கடைப்பிடித்திருக் கிறது.

கழற்றிய செருப்புகள், கரையிரங்கி வந்த ஒற்றையடிப் பாதையோரமாகக் கிடந்தன.

அவன் போக வேண்டாம் என்று தடுத்து நிறுத்திய இடத்தைப் பார்த்தபோது அவளது உடல் சிலிர்த்தது.

ஆற்றினுள் வளர்ந்திருந்த உடை மரத்தை விறகுக்காக யாரோ வெட்டியிருக்கிறார்கள். சிறு குச்சிகள் வரை, தறித்து எடுத்தவர்கள், முட்களை அப்படியே விட்டுப் போயிருந்தார்கள். அதில் மிதித்திருந்தால், கால் கந்த லாகி இருக்கும்.

''இந்த முட்களையும் அள்ளிப் போயிருக்கலாம்'' என்றவள், கூடவே ஒலித்த குரலைக் கேட்டுத் திடுக் கிட்டாள். ஏனெனில், அவளை எச்சரித்து நிறுத்திய வனும், அதே வார்த்தைகளைத்தான் சொல்லிக் கொண்டு இருந்தான்.

அவனை வியப்புடன் நோக்கி நன்றியுரைத்தாள்.

''நன்றியை எனக்குச் சொல்லாதீர்கள். ஒன்றுமே சாப் பிடாமல் வந்துவிட்டீர்களாமே! தாய்மனம் தாங்க வில்லை. உங்களைக் கண்டுபிடித்து உணவருந்த அழைத்து வருமாறு, ஆன்ட்டி அனுப்பினார்கள். அத னால், நன்றியை அவர்களுக்குத்தான் சொல்ல வேண் டும். அதற்கு முன்னதாக, உங்கள் தந்தைக்கும் சொல்ல வேண்டும். ஆன்ட்டி உணவருந்த அழைத்ததாக, அங்கிள் சொல்லிராவிட்டால், நான் இப்போது முதியோர் இல்லத்தில் யாருக்காவது முதுகு தேய்த்து விட்டுக் கொண்டு இருந்திருப்பேன்'' என்றான் அவன் புன்னகை யோடு.

காலையில் தாயிடம் தந்தை பேசிய ரகசியம் புரிந்தது. அவளும் ஓரளவு எதிர்பார்த்ததுதான். ஆனால், அவளது திட்டத்துக்கு இவன் ஒத்து வருவானா?

வரவேண்டும்! வருவான். முதியவர் யாருக்கோ முதுகு தேய்த்து விடுவதை இவ்வளவு இயல்பாகக் கூறுகிற வனைக் கட்டாயம் நம்பலாம்.

புன்னகை செய்து ''மிஸ்டர் குணாளன்தானே? வணக்கம் சார்'' என்றாள் அவள்.

அவள் தன்னை கண்டுபிடித்து விட்டதில், அவனுக்கு மிகவும் மகிழ்ச்சி, சற்றே தூக்கலாக இருந்த பற்களைக்

காட்டி பெருமுறுவல் செய்தான். ''பரவாயில்லையே! அங்கிளும் ஆன்ட்டியும் என்னைப் பற்றி நிறையச் சொல்லியிருப்பார்கள் போல? உடனே கண்டுபிடித்து விட்டாயே?'' என்றான் உற்சாகத்துடன்.

தப்பான ஊகத்துக்குப் போக விட்டு விடக்கூடாதே... அவனை இன்னான் என்று அறிந்து கொண்டாள் என்ற துமே, ஒருமைப் பேச்சுக்கு போய்விட்டானே!

திரும்பி நடந்தபடி ''ம், சொல்லியிருக்கிறார்கள். தன்னலமற்று சேவை மனதோடு செயல்படுகிறவர்கள் என்றால், இருவரும் அப்படியே உருகி விடுவார்கள். ஒத்த மனம் என்பதோடு, அப்படிப்பட்டவர்கள் இப் போது அரிதாகிக் கொண்டே வருகிறார்களே!'' என்றாள் அவள்.

''என்னவோ? சின்ன வயதில் இருந்தே, இது போல ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டே இருப்பேன். வாய்ப்பு வசதி எல்லாம் அமைந் தும் அதில் ஈடுபட்டுவிட்டேன். ஆனால், ஆன்ட்டி, அங்கிள் இருவரையும் பார்க்கும்போதுதான், எனக்கு அதிசயமாக இருக்கும். கணவன் மனைவி இருவருமே, பிறர் நலம் பேணுகிறவர்களாக இருக்கிறார்கள். தம்பதியர் என்றால், அவர்கள் மாதிரி அமைய வேண்டும். கடவுள் அருள் இருந்தால் நடக்கும்'' என்றவாறு திரும்பி அவளைப் பார்த்தான் குணாளன்.

குணாளனைப் போலத் திரும்பிப் பாராவிட்டாலும், அருகே நடந்து வந்தவன் திரும்பிப் பார்ப்பதைச் சாரூபா உணர்வினாலேயே அறிந்தாள்.

இன்னோரன்ன வார்த்தைகளால், அவளை மணந்து, அவளுடைய பெற்றோரைப் போல, ஜோடியாகப் பொதுநலத் தொண்டு செய்ய ஆசைப்படுகிறானாம். அவனது பேச்சில் குறிப்பாக... ஏன், கிட்டத்தட்ட வெளிப்படையாகவே, அவன் தெரிவித்த விவரம் இதுதான்.

இதில் ஓரளவு சாரூபாவுக்கும் உடன்பாடுதான். சென்னையிலிருந்து கிளம்பும்போதே, அவள் பெருமளவு இதற்குத் தயாராகத்தான் வந்தாள்.

அவளுடைய பெற்றோரைப் போல தன் சுகங்களை எல்லாம் அடியோடு விட்டுவிட்டுப் பிறருக்காக உழைக்கும் மனப்பான்மை அவளுக்கு கிடையாது. ஆனால் சிலதிற்காக, அந்த விலை கொடுக்க அவள் தயாராகவே இருந்தாள்.

ஆனால், அதற்கும் உச்ச விலை வரம்பு என்று ஒன்று இருந்தது. எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும், அதைப் பற்றிப் பேசிய பிறகுதான், அவளால் முடிவெடுக்க முடியும்!

அவள் செருப்பை அணிவதற்காகக் காத்து நிற்கும் போது! ''நீ ஒன்றும் சொல்லவில்லையே!'' என்று குணாளன் கேட்டான்.

சொல்வதற்கு ஒன்றும் இல்லை, போடா என்ற வார்த்தைகள் சாரூபாவின் தொண்டைக்குழி வரை வந்து துடித்தன. அப்புறம், அவள் எண்ணி வந்ததையும் அடியோடு மறந்துவிட நேரும்.

எதற்காக அவள் விடுப்பு எடுத்துக்கொண்டு இவ்வளவு தூரம் வந்தாளோ, அந்தக் காரணம் அப்படியே

இருக்கும்போது, பட்டென்று எதையும் போட்டு உடைத்துவிடக் கூடாது.

எனவே ''என்ன சொல்வது என்று யோசித்துக் கொண் டிருந்தேன்'' என்றாள் அவள்.

அவன் கேள்வியாகப் பார்க்கவும் ''உங்களது வேலை... பணி நேரம் என்ன குணாளன்? உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டுமே'' என்றாள்.

''இப்போது வந்த மாதிரி, எப்போது வேண்டுமானா லும், மற்றவர்களிடம் பொறுப்பைக் கொடுத்துவிட்டு என்னால் வரமுடியும்'' என்றான் குணாளன்.

தொடங்கி நடத்துவது அவனே என்பதால், யார் யாரிடம் எதையெதை ஒப்படைப்பது என்று தெரிந்து செய்வானாக இருக்கும். மற்றவர்களும் மறுப்பதற்கு இல்லைதானே?

ஆனால், பெரிய எதிர்பார்ப்புகளை உருவாக்கவும் அவளுக்கு மனமில்லை. எனவே ''நான் ஒரு வாரம் விடுப்பு எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன். காலை மாலைகளில் இதுபோல நடப்பது வழக்கம். உங்களால் முடிந்தபோது வாருங்களேன்'' என்றாள் சாதாரணமாக.

அதாவது, நீ கட்டாயம் வர வேண்டும் என்கிற ஆர்வ மான அழைப்பு இல்லை. வரக்கூடாது என்ற மறுப்பும் இல்லை.

ஒருகணம் தயங்கியவனின் பார்வை, மறுபடியும் தன் முகத்தை ஆராய்வதை உணர்ந்தபோதும், கவனியாதது போல நேரே நடந்தாள் அவள்.

சொல்லப்போனால், இவனது தொண்டு மனப்பான்மை தவிர, அவளுடைய பெற்றோரை ஈர்க்க, இவனிடம் எதுவும் இருப்பதாகவே சாருபாவுக்கும் தோன்றவில்லை. வயது கூட, முப்பதுகளின் பாதியையேனும் எட்டியிருப்பான் போன்ற தோற்றம்தான்.

மற்ற வகையிலும், தீனதயாளனின் கிட்டே கூட வரமாட்...

இதற்காகத்தானே, சாருபா இங்கே ஓடி வந்ததே! கூடவே அவளுடைய பெற்றோரைக் கவர்ந்த தொண்டு மனப்பான்மையை நம்பியும். அப்படியிருக்க, உண்மையிலேயே தீனதயாளனாக இருக்கும் இவனை, அவனோடு இப்படி ஒத்திட்டுப் பார்ப்பது எவ்வளவு பெரிய பிழை?

அவளது நிபந்தனையை மட்டும் ஏற்பான் என்றால், பேசாமல் திருமணத்தையே முடிவு செய்து கொண்டு போய்விடலாம்!

போகத்தான் வேண்டும்... நல்லவேலை! நல்ல வருமானம். எதற்காக விடுவது? எப்படியும் சென்னையை விட முடியாது...

''இந்த மாற்றுத் திறனாளிப் பிள்ளைகளுக்கு உதவியாக வேலை செய்யும்போது, இதற்காகத்தான் பிறவி எடுத்திருக்கிறோம் என்பது, தெளிவாகப் புரிகிறது. ஆனாலும் அவ்வப்போது நாங்கள் பெற்ற பிள்ளைகளையும் பார்க்க வேண்டும்போல, இருக்கிறதும்மா. சுகன்தான் வெளிநாட்டுக்கே போய்விட்டான். நீயாவது பக்கத்திலே இருக்கலாமில்லையா, ரூபிமா?'' என்று ஏக்கத்துடன் கேட்டாள் சரசுவதி.

நியாயமான கேள்விதான்.

''இதோ இருக்கிறது சென்னை! என்னவோ அண்டார்டிகாவில் இருப்பது போலப் பேசுகிறீர்களேம்மா. நினைத்தால் வாருங்கள். அல்லது, வா என்றால் நானே வந்துவிட்டுப் போகிறேன்'' என்று பிடிகொடாமல் பதில் கூறினாள் பெண்.

''நான் என்ன சொல்ல வருகிறேன் என்று தெரிந்தும், முட்டாள் பெண் போல இப்படிப் பதில் சொன்னால் எப்படிம்மா?'' என்றாள் தாயார் வருத்தத்துடன்.

கிட்டு முட்டி வரும்போது, மனதும் வாயும் மக்கர் செய்தால், சாரூபாதான் என்ன செய்வாள். சிறு மௌனத்தின் பின் ''நானும் யோசித்துக் கொண்டுதான் இருக்கிறேன், அம்மா. இன்னும் கொஞ்சம் யோசித்து விட்டுப் பதில் சொல்லுகிறேன்...'' என்று முடித்தாள்.

''நல்ல பதிலாகச் சொல்லு, கண்ணு!''

அன்று மாலையே குணாளனும் வந்துவிட்டான்.

வந்ததுமே ''உன் பெற்றோர் ஒன்று சொன்னார்கள். அதன் அடிப்படையில் சிலது கேட்பது தப்பில்லை என்று நினைக்கிறேன். நீ யாரையேனும் காதலிக்கிறாயா?'' என்று நேரடியாகக் கேட்டான்.

இவனிடம் மறைத்துப் பேசக்கூடாது என்று சாரூபா முதலிலேயே முடிவு செய்திருந்ததால், அவளும் கிட்டத் தட்ட வெளிப்படையாகவே பேசினாள்.

சென்னையில் வேலை செய்கிற நாட்களில் ஒரு காதல் அரும்பியதாகவும், இப்போது அதற்கு எதிர்காலம்

இல்லாது போய்விட்டதாகவும், தன் காதல் கதையை வெகு சுருக்கமாகக் கூறினாள். பெற்றோரிடம் தெரிவிப்பது பற்றிச் சிந்திப்பதற்குள், அந்த அன்பே முறிந்து போயிற்று என்றாள்.

''சில மனிதர்களுக்குத்தான் அற்ப ஆயுள் என்பது இல்லை. தகுதியற்ற காதலும் அப்படித்தான் ஊத்திக் கொள்ளும்போல!'' என்று விட் அடித்துச் சிரித்தான் குணாளன்.

அவளது உயிரோடு மட்டுமே மறையக்கூடிய ஒன்று என்று பாவம், இவனுக்கு என்ன தெரியும்?

அவள் பேசாமல் அமர்ந்திருக்கவும், ''ஓ, காயம் இன்னும் ஆறவில்லை போல, இப்போது அது பற்றி விட் அடித்திருக்கக் கூடாது சாரி'' என்று அவன் மன்னிப்புக் கேட்ட விதமும் அவளுக்குப் பிடிக்கவில்லை

இது ஆறிவிடக் கூடிய காயம் என்று இவன் எப்படி நினைக்கலாம்?

ஆனால், தன்னை மட்டும் நினைக்கிறவள் அல்ல என்பதால், விரைவிலேயே குணாளன் பக்க நியாயத்தையும் அவளால் யோசிக்க முடிந்தது.

காதல் தோல்வி என்பது அப்போதைக்கு ரொம்ப வலித்தாலும், எல்லா காயங்களையும் போல, அதுவும் சீக்கிரமே ஆறிவிடக் கூடியது என்பதுதான் பொதுவான கருத்து.

கண் பாராதது கருத்தில் நிலைக்காது என்று கூடச் சொல்வதுண்டு. அதை நினைத்தே குணாளனும்

கூறியிருக்கலாம். ஆனால் இது கல்லில் பொறித்த எழுத்து என்று, இவனுக்கு எப்படித் தெரியும்?

'பத்துக் கட்டளைகளை' போல இதயத்தில் எழுத்துக் களைப் பொறிப்பது போலக் கற்பனை செய்துவிட்டுத் தலையை உலுக்கிவிட்டு கொண்டாள் சாரூபா. இப்படி யெல்லாம் கற்பனை பண்ணக்கூடாது!

அவளது தலை உலுக்கலின் பொருளைத் தவறாக ஊகித்து, ''மறக்க விரும்புகிறாய் என்று தெரிகிறது. எனவே, நானும் அது பற்றிப் பேச விரும்பவில்லை. ஒன்றே ஒன்று தவிர, ஏற்கனவே முடிந்துவிட்ட காதலை, நான் பெரிதாக எண்ணப் போவதில்லை. சொல்லப் போனால், வழுக்கி விழுந்த ஆதரவற்ற பெண்களுக் காகத் தனியாக ஓர் இல்லம் தொடங்குவதாக இருக் கிறேன். இந்த வயதில், அதைத் தனியாளாகச் செய் வதை விட, மனைவி நிலையில் ஒரு பெண்ணோடு சேர்ந்து நடத்துவது நன்றாயிருக்கும் என்று நான் திருமணம் பற்றி யோசித்ததே. கந்தவேல், சாருடைய மகள். அதற்கு ஏற்றவளாக இருப்பாள் என்றும் எண்ணி னேன்... மேலே நீதான் சொல்ல வேண்டும்'' என்றான் குணாளன்.

குணாளனின் பேச்சில், தனக்கு சாதகமாக ஒரு பெரிய விஷயம் இருப்பதைச் சாரூபா கண்டாள்.

நலிந்த பெண்களுக்குச் சேவை செய்வதற்காகவே, அதில் ஏதும் தவறான பேச்சு வந்து விடக்கூடாது என்பதற்காகவே, அவன் மணம் புரிய விரும்புகிறான். இல்லற இன்பத்துக்காக அல்ல! அவளுக்கு வேண்டியது, இன்னும் ஒன்றே ஒன்றுதானே!

ஒரு பெரிய மூச்சை எடுத்து விட்டுவிட்டு ''நீங்கள் சொல்வது எல்லாமே எனக்கு ஒப்புதலாகத்தான் இருக் கிறது. குணாளன். பெண்களுக்கான இல்லம் விஷயமாக என்னால் முழுத் துணையாக இருக்க முடியும். ஆனால், மற்றபடி நான் உங்களுக்கு மனைவியாக வாழ முடி யாது'' என்று வேகமாக முழுதும் சொல்லி முடித்துவிட் டாள்.

ஒருசில கணங்கள் அவர்களிடையே அமைதி நில வியது.

பிறகு ''உங்களுக்கிடையில் எல்லை மீறி எதுவும் நேர்ந்து விடவில்லையே?'' என்று குணாளன் வினவி னான்.

கேட்பது தப்பில்லை என்றானே, அந்த சிலதில் இதை யும் ஒன்றாகக் கருதி கேட்கிறான் என்று அவளுக்குப் புரிந்தது.

என்ன மாதிரிக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லும்படி ஆகிவிட்டது என்று உள்ளூர தோன்றிய வெறுப்பை மறைத்து ''கந்தவேல், சரசுவதியுடைய மகள் நான். என்னிடம் இந்தக் கேள்வி அனாவசியம்'' என்றாள் இறுகிய குரலில்.

''நிஜம்தான்!'' என்று தலையாட்டிக் கொண்டான் அவன். ''ஆன்ட்டியும், அங்கிளும் வளர்த்த பெண்ணிடம் இந்தக் கேள்வி அனாவசியம். ஆனால்... பின்னே ஏன் முடியாது?'' என்று கேட்டான் அவன்.

இந்த மாதிரி விடாமல் கேட்டால், பதிலை வாங்கிக் கொள்ளவும் தயாராகத்தான் இருக்க வேண்டும் என்று

எண்ணியவாறே ''மனதில் ஒருவரை அந்த மாதிரி யெல்லாம் எண்ணிவிட்டு, இன்னொருவரோடு குடும்பம் நடத்த என்னால் முடியாது'' என்றாள் அவள் திட்ட வட்டமாக.

சாரூபா எதிர்பார்த்தவாறே, குணாளனின் முகம் சற்று வாடியது.

ஆனால் உடனேயே சமாளித்துக் கொண்டு ''உன் வளர்ப்பு அப்படி எனும்போது, நீ இப்படித்தான் இருப்பாய்! எனக்கு அதில் ஆட்சேபணை இல்லை'' என்று அவளுக்கு நிம்மதியைத் தந்தான் குணாளன்.

தொடர்ந்து ''அம்மா, அப்பாவிடம் சொல்லி விடலாமா?'' என்று அவன் கேட்கவும், அவளுக்கு உள்ளூர திக்கென்றது, எல்லாம் நெருக்குகிறதா?

''நான் கிளம்புகிறபோது சொல்லிக் கொள்ளலாம்...'' என்றாள் சாரூபா. இன்னொன்று நினைவு வர ''என் வேலையில் ஒப்பந்தம் இருக்கிறது... சட்டென்று விட முடியாது. இன்னும் சில மாதங்களேனும் வேலை பார்க்க நேரும்'' என்றாள் கறார்க் குரலில்.

எல்லாம் அவள் விருப்பப்படியேதான் நடந்திருக்கிறது. சொல்லப் போனால், இப்படி நடந்தால் நல்லது என்று ஒரு வெற்றுக் கற்பனை மட்டும்தான். இங்கே வரும்போது அவளுக்கு இருந்தது. ஆனால், பெரும் அதிசயமாக, வார்த்தைக்கு வார்த்தை அப்படியே அவளது கற்பனை பலித்தபோதும், சாரூபாவால் சற்றும் சந்தோஷப் பட முடியவில்லை.

அவளது சந்தோஷத்தைத்தான் தீனதயாளன் மொத்த மாக மூட்டை கட்டிக் குப்பைத் தொட்டியில் வீசிவிட் டானே!

என்னவோ, பெற்றோருக்கு ஏற்ற மகளாக, பிறந்த சமூகத்துக்கு ஒரு தொண்டு செய்யும் வாய்ப்புக் கிடைத் ததை எண்ணி, திருப்திப் பட்டுக்கொள்ள வேண்டியது தான்!

விஷயம் மெல்லக் கசிந்தபோது, கந்தவேல் தம்பதிக் கும் மகிழ்ச்சியே. வயது வேறுபாடு சற்று அதிகமே என்றாலும், எந்த விதமான கெட்ட பழக்கமும் இல்லாத, அடுத்தவருக்கு உதவும் நல்ல மனப்பான்மை கொண்ட ஒருவன் மகளை மணக்கப் போகிறான் என்று, அவர் களும் ஆனந்தம் அடைந்தார்கள்.

சென்னைக்குத் திரும்பி வரும்போது, நெஞ்சுக்கூடு, வயிறு எல்லாம் காலியாக இருப்பது போலச் சாரூபா உணர்ந்தாள்.

இன்னும் ஒரு வேலை பாக்கி இருந்தது. இந்த திருமண ஏற்பாடு குறித்து தீனதயாளனிடம் சொல்ல வேண்டும். அவன் இன்னும் ஏதாவது திட்டத்தைச் செயலாக்க முற்படுமுன் முந்திக் கொள்வது புத்திசாலித் தனம்.

ஆனால், சாரூபா தயக்கத்தை வெற்றிக் கொள்ள முயன்று கொண்டிருந்தபோதே, இப்போதும் முந்திக் கொண்டவன் தீனதயாளனாகத்தான் இருந்தான்.

''உன்னிடம் தனியே பேச வேண்டும் எங்கே சந்திக் கலாம்?'' என்று கேட்டான்.

தனியே சந்திப்பதா? கடைசிச் சந்திப்பு அப்பவே மனதுள் வந்தது. பத்து விரல், பத்துநாள் கணக்கும் கூட.

ஆனால், இந்த சந்திப்பைத் தவிர்க்கவும் முடியாது. அவளது செய்தியை நேரில் சொல்வதுதான் நாகரீகம்.

எனவே சூடுபட்ட பூனையாகி ''வீட்டில் வேண்டாம்'' என்றாள் அவள் எச்சரிக்கையோடு.

மறுக்காமல் ஒத்துக்கொண்டு ''உன் விருப்பம்... எங்கே என்று நீயே சொல்லு'' என்றான் அவன்.

கடைசியாக பெரிய ஹோட்டல் ஒன்றின் பரந்த தோட்டத்தில் சற்றே ஒதுக்குப்புறமாக இருவருக்கான மேஜை ஒன்றை, அவன்தான் முன் பதிவு செய்தான். ஏதோ ஒரு திரைப்படத்தில் வருகிற வசனம் போல, அங்கே தனிமை இருக்கும், ஆனால் இருக்காது என்கிற நிலை.

உள்ளே போய் உட்கார்ந்ததும், ''இந்த இடம், உன் நிம்மதிக்காக'' என்று அவன் சொன்னதை காதில் விழாதது போல ஒதுக்கி ''உங்களிடம் ஒரு செய்தி சொல்ல வேண்டும். அதற்காக நானே உங்களைச் சந்திப்பதாக இருந்தேன்'' என்றாள் சாரூபா அவசரமாக.

''வந்து... எனக்குத் திருமணம் நிச்சயமாகிவிட்டது. நான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்'' என்று வேகமாக விஷயத்தை சொல்லியும் முடித்தாள்.

ஓடிவந்த சர்வரிடம் காபியோடு கொறிப்பதற்கும் சொல்லிவிட்டு ''என்ன கதை இது? எதற்காக?'' என்று கேட்டான் அவன்.

''கதையில்லை. முழு நிஜம். நான் பொய் சொல்வ தில்லை என்று உங்களுக்கே தெரியும். இது, முன்பே வீட்டில் நடந்த பேச்சுத்தான். இப்போது நானும் சரியென்று விட்டேன்'' என்றாள் அவள் அமைதியாகக் காட்டிக் கொண்டு.

''நடக்க விடாவிட்டால்? நம் கதை தெரிந்தால், பின் னங்கால் பிடரியில் பட ஓடிவிட மாட்டானா?'' என்றான் அவன் அலட்சியமாக.

அதாவது, அவர்கள் பழகியதைப் பற்றிச் சொல்லித் திருமணத்தை நிறுத்துவானாம். நினைத்ததை நடத்த, எந்த அளவுக்கு இறங்கத் தயாராக இருக்கிறான்!

''குணாளன் அப்படி ஓட மாட்டார்'' என்றாள் அவள் உறுதியோடு. ''அவர் நல்லவர். தயாளன். நம் விஷ யத்தைப் பற்றி, நானே அவரிடம் சொல்லிவிட்டேன். அவர் பெயர் குணாளன். பெயருக்கேற்ற குணமும் உள்ளவர். முதியோர் இல்லம் நடத்துகிறார். அவர்களுக்கு முதுகு தேய்த்துவிடும் அளவு சேவை மனப்பான்மை உடையவர்...''

''என்ன பெரிய சேவை? காசை விட்டெறிந்து செய்ய வேண்டியதை கஷ்டப்பட்டு செய்வதுதான் சேவை மனப்பான்மையா? சுத்த மடத்தனம்'' என்றபோது, தீன தயாளனின் குரலில் அடக்க முயன்ற ஆத்திரம் தெரிந்தது.

இந்த ஆத்திரம் தனக்காக என்று மயங்கிய மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவள் சொன்னாள் ''உண்மை தான். காசை விட்டெறிந்து காரியம் நடத்துகிறவர்,

நீங்கள். குணாளனின் நல்ல மனம்... உங்களுக்குப் புரியாது''

நல்லவன் இல்லாவிட்டால், அவளது நிபந்தனைக்கு ஒத்துக் கொள்வானா? இது தயாளனுக்குப் புரியாது என்ப தோடு, அவனிடம் சொல்வது ஆபத்து.

உடனே அவன், அதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிப்பான். தீனதயாளனுக்கு வெற்றிதான் முக்கியம். நியாய அநியாயங்கள் அல்ல.

தன் நிபந்தனைக்குக் குணாளன் ஒத்துக்கொண்ட காரணமும் நினைவு வர, ''குணாளன் என் பெற்றோரின், என் கொள்கைகளோடு ஒத்துப் போகிறவர். ஒரு திருமணத்துக்கு, அதுவும் முக்கியம்'' என்றாள் சாரூபா.

அருவருப்புடன் நோக்கி ''லைசன்ஸ் தகட்டை மாட்டி விட்டு, அதன் பிறகே இழுத்துப் போகிறவன் என்கிறாய். அப்படிப் போக, நீயும் தயாராகிவிட்டாய்! சே! உன் னிடம் நான், இதை எதிர்பார்க்கவில்லை, சாரூபா. உன் பெயர்ப் பொருத்தத்தையே தொலைத்துவிட்டாயே!'' என்று ஆத்திரத்தோடு அவளை வெறித்துப் பார்த்தான். இன்னமும் நம்ப முடியாதவன் போலத் தலையசைத்து விட்டு ''ஆனால் பெண்களை முழுதாக அறிந்தவர் என்று உலகில் யாரும் கிடையாது என்பது மெய்தான் என்று தெரிகிறது. நம்பி ஏமாந்தவர்கள் பட்டியலில் என் பெயரையும் சேர்க்க வேண்டியதுதான் போல'' என்று வெறுப்புடன் உரைத்தான்.

இவன் இழுத்த இழுப்புக்கு வரவில்லை என்றால், பெண்கள் ஏமாற்றுகிறவர்களாகி விடுவார்களா?

அவளது நியாயமற்ற பேச்சில் நிமிர்ந்து ''உங்கள் தாயாரும் ஒரு பெண்தான், நினைவிருக்கட்டும்?'' என்று அழுத்தமான குரலில் நினைவுபடுத்தினாள் சாரூபா.

ஆனால் ''அதற்காக? பெண்கள் எல்லோரும் உத்தம சிகாமணிகள் என்று சொல்வேன் என்று எண்ணினாயா? ஒரு விஷயம் தெரிந்துகொள். என் அம்மாவினாலேயே எனக்குப் பெண்களிடம் அடியோடு மதிப்புக் கிடையாது. புருஷனைக் கூட இருந்து திருத்த தெரியாமல், தன் உரிமைகளையும் அறியாமல், கோழைத்தனமாக வீட்டை விட்டு வெளியே போன முட்டாளை எப்படி மதிப்பது?'' என்று சீறியவன், சற்றுத் தூரத்தில் காபி ட்ரேயுடன் விரைந்து வந்த சர்வரைப் பார்த்து முகம் சுளித்தான்.

''பாவம் தயா, என்ன காரணமோ...'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அருகில் வந்து விட்ட சர்வர் ''ரொம்ப சாரி சார்... முதல் ட்ரேயை எடுத்து வரும்போது, குழந்தை பின்னாலே ஓடுகிறேன் என்று ஒருவர் என்மேல் முட்டித் தள்ளிவிட்டார். அவசரமாக மறுபடி போட்டு எடுத்து வந்தேன். சாரி சார்! சாரி மேடம்!'' என்று மறுபடியும் மன்னிப்புக் கேட்டான்.

கல்லாய் இருந்த தீனதயாளனின் முகத்தை பார்த்து விட்டு ''காபியை வைத்துவிட்டு மற்றதைப் பார்சல் கட்டிக் கொண்டு வாருங்கள். கூடவே பில்லையும் கொண்டு வந்து விடுங்கள். அவசரமாக போக வேண்டும்'' என்றாள் சாரூபா.

''நன்றிம்மா'' என்று காபியை வைத்துவிட்டு, தப்பி னேன் பிழைத்தேன் என்பது போல சர்வர் விரைந்தான்.

அவளை முறைத்துவிட்டு ''சாரூபாதான் என்று காட்டிக் கொண்டாய் போல! ஆனால் நம்புவதற்குத் தான், வேறே யாராவது மடையனைத் தேட வேண்டும்... அதுவும்தான் தேடியாயிற்றே! ஆனாலும் ரொம்பவும் வேகமான செயல்பாடு!'' என்று குத்தலாகக் கூறினான் தீனதயாளன்.

தோற்றுப் பழக்கம் இல்லாதவனின் பேச்சு. பெரிதாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று தனக்குள் சொல்லித் தன்னை சமனப்படுத்திக் கொண்ட பிறகே, சாரூபா பேசினாள்.

''உங்களுக்கு எப்படியோ தயா, எனக்கு தொண்டை காய்ந்து தெரிகிறது. அத்தோடு, சர்வர் மேல் தப்பு இல்லாதபோது... விட்டு விடலாமே? நீங்களும் எடுத் துக் கொள்ளுங்கள், ப்ளீஸ்!'' என்று ஒரு கப்பை அவன் புறம் தள்ளி வைத்துவிட்டு, இன்னொன்றை எடுத் தாள்.

தோளைக் குலுக்கிவிட்டுக் கையை நீட்டினான் அவன்.

இருவரும் மௌனமாகக் காபியை அருந்தி முடிக்கு முன், பில் பார்சலுடன் சர்வர் வந்துவிட்டான்.

ஓடி வந்து மூச்சிரைக்க நின்றவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

தீனதயாளனுக்கும் அப்படித்தான் இருந்ததோ? ஒன்றும் சொல்லாமல் பில் பணத்தோடு, பொதுவான டிப்சும் சேர்த்து வைத்துவிட்டே கிளம்பினான்.

புருவ முடிச்சுடனேயே வந்து, கார்க் கதவைத் திறந்தவனிடம் ''ஆட்டோவில் போவது, எனக்குக் கடினம் அல்ல, தயா. நீங்கள் என்னைக் கூட்டிப் போயாக வேண்டிய கட்டாயம் எதுவும் இல்லை...'' என்றாள், அவள் மெதுவாக.

''நீ என்ன நினைத்தாலும், என் கூட வந்தவளை கொண்டுபோய் விடும் நாகரீகம் எனக்கு இருக்கிறது...'' என்று அடிக்குரலில் உறுமினான் அவன். ''அல்லது, உன்னை இழந்த துக்கத்தில், நிலை தடுமாறி காரை எங்கேனும் கொண்டு போய் இடித்துவிடுவேன் என்று பயமா? நம்பும்மா. என் உயிர் இன்னமும், எனக்கு வெல்லம்தான்''

பதிலின்றிக் காரில் ஏறி அமர்ந்தாள் அவள்.

அவளது ஸ்கூட்டியை எடுப்பதற்காக, அவளது அலுவலகத்தின் முன்னே காரை நிறுத்தியவன், பயண நேரம் முழுவதிலும் காத்து வந்த மௌனத்தைக் கலைத்தான். ''பார் சாரூபா. நான் வேறு நினைத்தேன். ஆனால் நடப்பது வேறாகிவிட்டது. எப்படியோ? உன்னாலேயே இன்னொருவனை மணக்க முடிகிறபோது, உன்னை மறக்க என்னால் முடியாதா? இதைச் சவாலாக எடுத்துக் கொண்டு செய்து காட்டுகிறேன் பார்!'' என்று சூளுரைத்தான்.

உணர்ச்சி மரத்த சிலையாகச் சாரூபா நிற்கையிலேயே கார் பறந்துவிட்டது.

# 8

இதில் சாரூபா வருத்தப்படுவதற்கு ஒன்றுமே இல்லை. சரியானபடி யோசித்துப் பார்த்தால், மகிழ்ச்சி தான்... அது கொஞ்சம் கஷ்டமே என்றாலும், குறைந்த பட்சமாக ஆறுதல், நிம்மதி... இப்படித்தான் அவள் உணர வேண்டும்.

தீனதயாளன் அடுத்து என்ன திட்டம் போடுவானோ, எப்படித் தாக்குவானோ என்று கலக்கத்திலேயே வாழத் தேவையில்லை.

அவளது வளர்ப்பு முறை, கொள்கைகள் எதற்கும் எந்த விதமான பாதிப்பும் இனி நேராது என்ற நிச்சயத்தில் அப்பாடி என்று, ஆசுவாசமாகத்தானே இருக்க வேண்டும்?

ஆனால், விசித்திரமான வகையில், அவளுக்கு அப்படிப்பட்ட அமைதி எதுவும் மனதில் தோன்றவே இல்லை. மாறாக, இதயத்தின் மீது ஏதோ பளுவைத் தூக்கி வைத்த மாதிரி அழுத்த, இலகுவாக மூச்சு கூட விட முடியாதது போலச் சாரூபா திணறித் திண்டாடினாள்.

ஊரிலிருந்து திருமணம் தொடர்பாக அவ்வப்போது வந்த சிறுசிறு தகவல்களும், ஆலோசனைகளும் அவளை மேலும் அலைப்புற வைப்பவனாகவே அமைந்தன.

அவற்றை நல்லவிதமாக ஏற்பது போலக் காட்ட நேர்ந்தது, இன்னும் கொடுமை!

தீனதயாளனிடமிருந்து எந்த விதத் தொடர்பும் இல்லாது போனது ஒரு வேதனை என்றால், தேவை யற்று உளையில் சிக்கிக் கொண்டது போல, அதுவேறு, அவளுக்கு மூச்சு முட்டிப் போனது.

ஆனால், இந்தத் துன்பம் எதையும் வெளியே காட்டிக்கொள்ள முடியாமல், உள்ளேயே வைத்துப் பூட்டிக் கொண்டு சாதாரணம்போல நடந்து கொள்ள நேர்ந்தது, அவளுக்குப் பெரும் சித்திரவதையாக இருந் தது.

''எனக்கு இங்கே வேலை அதிகம், அம்மா. ஏதோ நீங்களே பார்த்து எல்லாம் முடிவு பண்ணுங்கள். ஆனால், ரொம்ப அவசரப்பட வேண்டாம். எனக்குச் சட்டென்று விடுமுறை கிடைக்காது'' என்ற அளவில் தாயின் உற் சாகத்தைச் சாரூபா ஓரளவு தேக்கி வைத்தாள்.

தீனதயாளன், சாரூபா பிரிவில், உண்மையிலேயே வருத்தப்பட்டவள் லேகா, தோழியின் கண்களில் வெறுமையைக் காண, அவளுக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

சும்மாவே சினேகிதி, அத்தோடு அவளுடைய சகோ தரியின் வாழ்வை மலரச் செய்தவள், வீட்டில் ஒரு திரு மணத்தை செய்துவிட்டு நாலு ஆண்டுகளாக மொத்த குடும்பமும் அனுபவித்துக் கொண்டிருந்த வேதனையைத் தீர்த்து எல்லோரையும் மகிழ வைத்தவள்.

அப்படிப்பட்டவள், இப்போது உதட்டால் மட்டுமே புன்னகை செய்தவாறு வெறும் கூடாக நடமாடுவதைக் காண லேகாவுக்குக் கொஞ்சமும் சகிக்கவில்லை.

எனவே, ஓய்வு நேரங்களில் அடிக்கடி வந்து சாருபா வுடன் பேசிக் கொண்டிருப்பாள். நிருபராக அவள் செல்ல வேண்டிய பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு தோழியை யும் கூட்டிச் சென்றாள்.

தனியே கிடந்து தன்னை மீறிய நினைவுகளில் தவித்துக் கொண்டிருப்பதற்கு, இந்தத் தோழியின் அனாவசியத் தொணப்பலற்ற அன்பு, சாருபாவுக்கும் இதமாக இருக்கவே, அவளும் லேகாவோடு கூடச் செல்லலானாள்.

மீண்டும் தனிமை நேரும்போது, பழைய சஞ்சலம் தான் என்றாலும், அந்தக் கூட்டங்களில் பேசிய, நடந்த விஷயங்களை, சற்று நேரமேனும் மனதை வேறு திசையில் சற்றுத் திருப்ப உதவின.

அன்றும் அப்படித்தான் ''பெண்கள் முன்னேற்றம் பற்றிய ஒரு கருத்தரங்கு. போரடிக்கும் நீயும் வந்தால், எனக்குக் கொஞ்சம் பரவாயில்லாமல் இருக்கும் என்ன? வருகிறாயா?'' என்று தனக்கு உதவி போல லேகா அழைக்கவும் ''கட்டாயம்!'' என்று சாருபா அவளோடு கிளம்பிவிட்டாள்.

ஆனால், அந்த கருத்தரங்கு, சற்றே அமைதி அடைந்து வந்த சாருபாவை மேலும் அதிர வைத்துவிட்டது. ஏனெனில், அங்கே அவள் சந்தித்த நபர், தீனதயாள னுடைய தாயார் தேவி!

பெண்களின் முன்னேற்றத்தில் பெண் கல்வியும் முக்கியம், பெண் கல்வியில் ஆர்வம் உடையவள், தீனதயாளனுடைய தாயார் தேவி என்பதெல்லாம், ஏதோ குறிப்புகளைப் பெறுவதற்காக லேகா சென்றுவிட, தனியே அமர்ந்து மேடையைப் பார்த்துக் கொண்டிருந் தவளின் அருகே வந்து அமர்ந்து ''என்னம்மா, எப்படி இருக்கிறாய்?'' என்று அந்த தேவியே கேட்ட பிறகுதான், சாரூபாவுக்கு நினைவு வந்தது.

ஆனால், அப்போது நினைவு வந்து என்ன பயன்?

அத்தோடு தீனதயாளனைப் பெற்றது தவிர, இந்தப் பெண்மணி என்ன தப்பு செய்தாள், பாவம்! மேலும் இவளும் பாவம்தானே?

லேசாக முறுவலித்து ''வணக்கம்மா, நீங்கள் நன்றாக இருக்கிறீர்களா?'' என்று நலம் விசாரித்தாள்.

நெளிவு நீக்கி, அழகாக வெட்டி விடப்பட்டிருந்த கூந்தல் கற்றையை இயல்பாக நளினத்துடன் ஒதுக்கி விட்டுக் கொண்டு, ''நன்றாக... என்று சொல்ல என் னம்மா இருக்கிறது. ஜிம், உணவுக் கட்டுப்பாடு என்று, உடல் ஆரோக்கியத்தோடு இருக்கிறேன். பெண் கல்வி தொடர்பாக என்னுடைய சில கருத்துக்களை கொள்கை யளவில் அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அரசு நிர்வாகத்தின் சிவப்பு நாடா, அரசியல்வாதிகளின் குறுக்கீடு எல்லாம் தாண்டி, இதை அமுல்படுத்தும் போது நான் உயிரோடு இருப்பேனா, என்னவோ? ஆனால் என் பங்களிப்புக்காகப் 'பத்மஸ்ரீ' கிடைக்கலாம் என்றார்கள். தடைகளை எல்லாம் தாண்டி, ஒருவேளை விருது கிடைத்தால், அதை வாங்கச் செல்லும்போது,

என்கூட டெல்லிக்கு வருகிறாயா?'' என்று சாருபாவை அழைத்தாள் தேவி.

அரசு அளிக்கும் கௌரவ விருது. கணவன், மகன் இருவரும் இருந்தும், வேற்று மனுஷி. அவளை அழைக் கிறாள்!

மனம் நெகிழ ''கட்டாயம் வருகிறேன்'' என்று வாக் களித்தாள் சாருபா.

''தாங்க்ஸ்டா!'' என்று முறுவலோடு நன்றி தெரிவித் தவளின் முகம், உடனே வாடியது.

சின்னவளை நேராகப் பார்த்து ''தப்பித்துவிட்டாய் போ?'' என்று வினவினாள்.

உதட்டைக் கடித்துக் கொண்டு சாருபா பேசாதிருக் கவும், ''என் பேச்சுக்காக மறுக்கவில்லையே?'' குரலில் கவலை தொனிக்க மேலும் விசாரித்தாள்.

தலையசைத்து ''அதற்காக என்று மட்டும் இல்லை. ஒழுக்கம் விஷயமாக எங்களுக்கு பெரிய கருத்து வேறுபாடு இருக்கிறது. அதுதான் முக்கியமான காரணம்'' என்றாள் சாருபா.

''ஓ! என்னால் கெட்டதோ என்று, உள்ளூர வருத்த மாக இருந்தது'' என்றாள் பெரியவள், அப்போதும் கவலையாகவே.

''இல்லையம்மா. மெய்யாகவே, நீங்கள் காரணம் இல்லை'' என்று வலியுறுத்திச் சொன்னாள், மற்றவள்.

அப்போதும் அந்தப் பெண்மணியின் முகம் தெளி யாது போகவே, பேச்சை மாற்றுவதற்காக, ''விருதே

கிடைக்க இருக்கிறது என்றால், பெண்களுக்காக நிறைய உழைக்கிறீர்கள் போல! என் பெற்றோரும் மாற்றுத் திறனாளிகளுக்காக சிறு அளவில்...'' என்றவளை தேவி இடை மறித்தாள்.

''சிறு அளவில் என்று சொல்லாதேம்மா. தீனா சொல்லியிருக்கிறான். அவர்கள் செய்வது உண்மையான தொண்டு. நான் செய்வது சும்மா இருந்தால் பைத்தியம் பிடித்துவிடும், கூடவே பேர் புகழும் கிடைக்கும் என்று உடம்பு நோகாமல் செய்வது. அதைப்போய் உன் பெற்றோரின் உன்னத சேவையோடு ஒத்துப் பேசாதேம்மா. அவர்கள் ரொம்ப உயர்வானவர்கள்! கூடவே உன்னையும் எவ்வளவு உயர்வாக வளர்த்திருக்கிறார்கள், பார்! இவ்வளவு பணத்தை விட ஒழுக்கம் பெரிது என்று, அவனைப் பிரிந்திருக்கிறாயே! ஆனால்...'' என்று பெருமூச்சு விட்டாள்.

சொல்வது அறியாமல் சாரூபா பேசாதிருந்தாள் 'ஆனால்' என்ன? ஏன் இந்தப் பெருமூச்சு?

முக்கியமாக தீனதயாளனுக்கு என்ன?

அதுவும் தெரிய வந்தது.

சாரூபாவின் முகத்தை ஏக்கத்துடன் பார்த்து ''உங்கள் பிரச்சினை என்னவென்று எனக்குத் தெரியாது. ஆனால், நீ கிடைத்திருந்தால் பையன் நன்றாக இருந்திருப்பானோ என்று, ரொம்பவும் தோன்றுகிறது. இப்போதெல்லாம் கொஞ்சம் அதிகம் குடிப்பதாக கேள்வி. அவன் அப்பா மாதிரி ஆகிவிடக்கூடாதே என்று... கவலையாக இருக்கிறது'' என்றாள் பெரியவள், மெதுவாக.

வியந்து நோக்கினாள் சாரூபா.

தனித்தே வாழ்ந்தாலும், என்னதான் பற்றில்லாதது போலக் காட்டிக் கொண்டாலும், தாய் மனம், பிள்ளை பிள்ளை என்றுதான் அடித்துக் கொள்ளும் போல! ஆனால், பெற்றவள் அளவுக்கு, அவளுக்கு பயமில்லை.

எப்போதுமே 'குடிமகன்'களைப் பற்றி தீனதயாளன் கிண்டலடிப்பான் ''என்ன மட்டித்தனம் பார்! கவலை மறக்கக் குடிப்பதாம்! காரணம் சொல்லிக் கொள்ளு கிறார்கள்! கைக்காசையும் செலவழித்து, கண்ட நோயை யும் இழுத்துக்கொண்டு, அதற்காக வேறு கவலைப் பட்டாக வேண்டும். எப்படி இருக்கிறது. இவர்கள் கவ லையை மறக்கக் குடிக்கிற லட்சணம்!'' என்று சொல் லிச் சிரிப்பான் ''இது கவலையை மறப்பது அல்ல, கவலையைப் பெருக்கிக் கொள்வது!'' என்பான் ஏளனமாக.

சரத்சந்திரருடைய 'தேவதாசை'கூட பயங்கர எஸ்கேப் பிஸம், ஆனால் என்ன பலித்தது? தேவதாஸ் குடித்து என்னத்தைச் சாதித்தான்?'' என்பான்.

அவன் போய் குடித்து, உடம்பை பாழாக்கிக் கொள் வானா?

கவலையில் இருக்கும் தாயின் கையைத் தொட்டு ''கவலைப்படாதீர்கள், அம்மா. தயா மிகவும் மன உறுதி உள்ளவர். கட்டுப்பாடு இல்லாமல் குடிக்க மாட்டார்'' என்றாள் தேறுதலாக.

ஆறுதல் அடையாமல் ''நானும் அப்படித்தான் மனதை அமைதிப்படுத்த முயற்சிக்கிறேன். ஆனால் 'ஜீன்ஸ்'

என்று ஒன்று இருக்கிறதே. தகப்பன் புத்தி வந்திருந் தால்?'' என்று தவித்தது தாயின் மனம்.

''அப்படியானால், நீங்களே நேரிலே, தயாளனிடம் பேசுங்களேன்'' என்று யோசனை சொன்னாள், சாரூபா.

ஆனால் ''நான் சொல்வதா?'' என்று அதிர்ந்தாள் தீனதயாளனைப் பெற்றவள் ''எங்கே? நாங்கள் மூன்று பேரும், ஆளுக்கொரு தீவு போல வாழ்ந்து கொண்டிருக் கிறோம். எல்லை தாண்டி, ஒரு விரலைக் கூட, யாரும் வைப்பதில்லை. இதில், நான் சொல்லி... அவ்வளவு தான். பூகம்பம், பிரளயம், எல்லாம் சேர்ந்தே வந்துவிடும். என்ன, அவன் தந்தை போல ஆயிரம் வியாதிகளும் மருந்துகளுமாக இவனும் அழிந்து விடக்கூடாதே என்று தான்...'' என்று கசந்த குரலில் தேவி கூறிக் கொண் டிருந்தபோதே ''மேடம்...'' என்று யாரோ வந்து, அவளை மேடைக்கு அழைத்தார்கள்.

எழுந்து ''சரிம்மா, நான் போகிறேன். உன்னால் முடிந் தால், ஏதாவது பண்ணு. விருது பற்றி, மேலே உருப் படியாக ஏதேனும் நடந்தால் சொல்லுகிறேன்'' என்று விட்டுப் போனாள் அந்தத் தாய்.

அன்றிரவு படுக்கையில் படுத்தால், சாரூபாவால் தூங்க முடியவில்லை.

'கொஞ்சம் அதிகம் குடிப்பதாக' என்று தேவி சொன் னது, அவளது மனதை, ரொம்பவே பாதித்துவிட்டது போலும். தலையணையில் தலையை நன்கு சாய்ப்பது கூடக் கடினமாகப் பட்டது.

தொழில்துறை கூட்டங்களில், மரியாதை நிமித்தம் ''ஒரு ஸிப்' எடுப்பது உண்டு என்று தீனதயாளனே

அவளிடமே சொல்லியிருக்கிறான். 'ஒரு ஸிப்' ஒரு பாட்டில் ஆக, எவ்வளவு நாட்கள் ஆகும் என்று அவளும் கேட்டிருக்கிறாள்.

''வாழ்நாள் முழுவதும்'' என்று சொல்லிவிட்டு, அவன் விவரித்திருக்கிறான். ''தொழில் தொடர்பான கூட்டங்களில் எதிராளியின் மன இறுக்கத்தை தளர்த்து வதற்காக கொடுப்பதுதான். அதை அவனே ரசம் மாதிரி ஊற்றி ஊற்றிக் குடித்தால், அப்புறம் குடிக்கிற அவன் அல்லவா, அதிகம் தளர்ந்து போவான்? அதனாலேயே, கையில் இருக்கும் கிண்ணம் காலியாகாமலே கவனித் துக் கொள்ளுவேன். தேவை, கொஞ்சம் மனஉறுதி அவ்வளவே'' என்று விளக்கியும் இருக்கிறான்.

அவனே எப்படி அதிகம் குடிப்பான்?

அறிந்து கொள்ளாமல் இருக்க முடியாது என்று தோன்றிவிட, எழுந்து சென்று, தீனதயாளனுக்கு போன் போட்டாள்.

உடனே எடுத்துவிட்டாலும், அவனது 'சொல்லு'வில் சிறு குழறல் இருந்ததோ?

''தேவதாசாகி விட்டீர்கள் போல?'' என்று கேட்டாள்.

அவனது பதிலிலும் தயக்கம் இருக்கவில்லை ''ஊரில் எத்தனையோ தேவதாஸ்கள். எல்லோருக்கும் இப்படித் தான் போன் செய்து கொண்டிருப்பாயா? ஜாக்கிரதை யம்மா. மதுபானக் கடைக்காரர்கள், விற்பனையைத் தடுப்பதாக கேஸ் போட்டுவிடப் போகிறார்கள்!'' என் றான் கிண்டலாக.

''சும்மா ஏதேதோ பேச வேண்டாம், தயா. மன உறுதி என்பீர்களே! அந்த உறுதி எங்கே போயிற்று?'' என்று விடாமல் கேட்டாள் சாரூபா.

''மனோ திடத்திற்கும் குடிக்கும் என்ன சம்பந்தம்? பிடித்திருக்கிறது குடிக்கிறேன்'' என்றான் அவன் அசிரத்தையாக. அவன் அலட்சியமாகத் தோளைக் குலுக்குவதைக் கூட, அவளால், மனக் கண்ணில் காண முடிந்தது. பேச்சுக்குச் சரியாக உடல்மொழியும் இருக்கும் அல்லவா?

''இதை நம்பச் சொல்லுகிறீர்களா?'' என்று அவளும் விடுவதாக இல்லை.

அவனது மனக் கட்டுப்பாடு குடியினால் தளர்ந்திருந் ததோ?

''இப்போது உனக்கு என்ன வேண்டும்?'' என்று ஆத்திரமாகச் சீறினான் தீனதயாளன். ''உன் பிரிவால் என் மனம் நொந்து, நைந்துபோய் விட்டது. சோகத்தை மறப்பதற்காக குடல் வெந்து செத்தாலும் பரவாயில்லை என்று மொடாக் குடியாகக் குடிக்கிறேன் என்று ஒப்பாரி வைக்க வேண்டுமா? அதை ஆனந்தமாகக் கேட்டு விட்டு, ஐயோ பாவம் என்று முதலைக் கண்ணீர் வடிக்கப் போகிறாயா? எல்லோரும் அண்ணாந்து பார்க்கும் ஒருவனை அழித்துவிட்டதாகப் பெருமைப்பட ஆசை. அதுதானே?'' என்று கண்டபடி பொரிந்து கொட்டி னான்.

தயாளன் குடிக்கிறான் என்பதையே தாங்க முடியாமல் கூப்பிட்டுப் பேசினால், என்னென்ன சொல்கிறான்!

''ஒருவரது அழிவில் பெருமைப்படுகிற சின்னத்தனம் எனக்குக் கிடையாது, தயாளன். கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். இதேபோல நானும் குடிக்கத் தொடங்கிருந் தால், உங்களுக்கு சந்தோஷமாகவா இருக்கும்?'' என்று கேட்டாள்.

எதிர்புறம் மௌனமாக இருக்கவும் தன் வாதத்தை மேலும் வலியுறுத்த ''அல்லது பெண்கள் குடித்தால் போதை ஏறாது என்று, அதுபோல எதுவும் இருக்கிறதா?'' என்று கிண்டலாகக் கேட்டாள்.

''அப்படி ஏதும் இல்லை. ஆனால்...'' என்று இப்போது பேசிய தீனதயாளன், அவளுக்குப் பதிலாகத் தானொரு கேள்வி கேட்டான் ''சொல்லு சாரூபா அப்படியானால் உனக்கும் பெரிய பாதிப்புதான் இல்லையா? இல்லாதது போல ஏன் வேஷம்?'' என்று கேட்டு, அவளை வாய டைக்க வைத்தான்.

இவனுடன் பேசியிருக்கக்கூடாது. எதற்காகவோ சொல்லும் ஏதோ ஒரு வார்த்தையில் கப்பென்று பிடித்து விடுவான் என்று தெரிந்திருக்க வேண்டும். இதற்கு என்ன பதில் சொல்வது?

அவள் யோசிக்கும்போதே அவன் மேலே பேசினான் ''சொல்லு சாரூபி, இது, உன்னை நம்பி தாலி கட்டப் போகிறவனை ஏமாற்றுவது ஆகாதா? மனதில் ஒரு வனை வைத்துக்கொண்டு...''

அதற்குள் அவனுக்கு பதிலைக் கண்டுபிடித்துவிட்ட சாரூபா ''போதும் நிறுத்துங்கள்'' என்று தயாளனின் பேச்சில் குறுக்கிட்டாள்.

தொடர்ந்து வேகமாக ''அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் கஷ்டப்படுவது எனக்கு பிடிக்காது என்று உங்களுக்கும் நன்றாகத் தெரியும். அத்தோடு உங்கள் அம்மா வேறு மிகவும் வருத்தப்பட்டார்களே என்று பேசினால், உடனே ஏதேதோ கற்பனை செய்யத் தொடங்கி விட்டீர்களே! அப்படி என்ன, நீங்கள் பெரிய ஹீரோ, உங்களை மறக்க மாட்டாமல் நான் தவிப்பதற்கு?'' என்று இடையில் நிறுத்தாமல் படபடத்தாள்.

அவள் மூச்சுக்காக நிறுத்தியதும், காத்திருந்தாற் போலத் தயாளனும் உடனே பேசினான் ''நீ என்னதான் சொன்னாலும், உன் ஹீரோ நான்தான். நான் மட்டுமே தான். மற்றபடி உன்னுடைய இந்தக் கல்யாணம் கண்ண ராவி எல்லாம், வாழ்க்கை முழுவதற்கும், உன் அசட்டுப் பிடிவாதத்துக்கு நீ கொடுக்கப்போகிற பெரிய விலை!'' என்றான் அவன்.

உன்னதுதான் அசட்டுப் பிடிவாதம் என்று, உணர்வுப் பூர்வமாக அவள் நம்புகிற கொள்கை, கோட்பாடு பற்றி அவனிடம் எடுத்துச் சொல்லலாம், ஆனால் அது ஒரு நீண்ட வாக்குவாதத்திற்கு வழி வகுக்குமே தவிர, வேறு பயன் எதுவும் விளையப்போவதில்லை.

எனவே, தயாளனோடு வாக்குவாதத்தைத் தவிர்ப்பதே நல்லது.

மேலும், அவன் பேச்சில் ஓர் உண்மையும் இருந்த தால், அது பற்றிப் பேசுவதே ஆபத்துதான்.

வேண்டும் என்றே, ஓர் அலுத்த மூச்சை சத்தமாக வெளியேற்றி, ''பிடித்த முயலுக்கு மூன்றே கால் என் கிறவர் நீங்கள். இப்போதும், என் செயல்களுக்கு நீங்கள்

விரும்பிய வண்ணம் பூசிப் பார்த்துப் பேசுகிறீர்கள்...'' என்றவளின் பேச்சில் தீனதயாளன் மீண்டும் குறுக் கிட்டான்.

''இல்லை என்று இப்போதே நிரூபிக்கட்டுமா? உடனே வருகிறேன். நீ மட்டும் விரலை வெட்டி, ரத்தம் கொட்டி என்னை வெளியேற்றாமல் இருந்தால், நீ முழுக்க முழுக்க என்னவள் என்று, உனக்கே புரிய வைப்பேன்!''

அன்றைய நினைவில் சாரூபாவின் உடல் சிலிர்த்தது. அவன் சொல்வதெல்லாம் உண்மையே! ஆனால் இந்த உயிருள்ளவரை, அவன் விரும்புகிற விதமாக மன மொப்பி ஏற்க முடியாத உண்மை.

இதற்கு மேல், இவனுடன் பேச்சை வளர்ப்பது பேரா பத்து என்று உணர்ந்து, சாரூபா ஆத்திரத்தை துணை சேர்த்துக் கொண்டாள். ''சேச்சே! என்ன மட்டரகமாகப் பேசுகிறீர்கள்? இந்த நேரத்தில் நீங்கள் இங்கே வருவதா? சூழ உள்ளவர்கள் எல்லாம் என்னைப் பார்த்துக் காறித் துப்பவா? போங்கள். எதையேனும் குடித்து எப்படியோ போங்கள். எனக்கு அக்கறை இல்லை. போதும் பேச்சு!'' என்றாள் வெறுத்த குரலில்.

ஆனால் செல்லை அணைக்க மனமின்றி, காதில் வைத்தபடியே ஒரு கணம் தாமதித்தாள்.

''போயேன். என்ன பெரிய ரதி. உன்னை மணக்கக் குடி தேவை எதற்கு? அது இல்லாமலே மறப்பேன் என்னால் முடியும்? என்னால் முடியும். ஆனால், உனக்கு

ஒரு பாடம் கற்றுக்கொடுப்பேன்'' பேச்சினிடையே மடக் மடக்கென்று எதையோ குடிக்கும் ஒலியும் கேட்டது.

நிறுத்த முயல்வதாக எண்ணி அதிகப்படுத்தி விட்டாளா?

செல்லை அணைத்துவிட்டு சாரூ'' அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

அவளுக்குப் பாடம் கற்றுக் கொடுப்பானாம்! குடி வேறு!

சும்மாவே நினைத்ததை நடத்த, இல்லாத குறுக்கு வழி, சுற்று வழியெல்லாம் செல்லுகிறவன்.

பெரியசாமியை மருத்துவமனையில் பார்க்கச் செல்லும்போதெல்லாம் ஆள் வைத்து அறிந்து, அவளையும் நிறுத்தி வைத்து, தற்செயல் போல வந்ததிலிருந்து, கடைசியாக அன்றிரவில் வந்து பசியென்று உணவு கேட்டது வரை யோசித்துப் பார்த்தால், எல்லாமே தயாளன் திட்டமிட்டுச் செய்த நிகழ்வுகள்தான்.

என்ன தெளிவுடன் காய் நகர்த்தியிருக்கிறான்!

அன்று, அவனுடைய தாயார் வந்து பேசியது கூட, மகனது உந்துதல்தானோ, என்னவோ?

அப்படி இராது என்று மூளை சொன்னபோதும், தீன தயாளன் தொடர்பான எந்தத் தற்செயலையும் நம்புவது, இப்போது அவளுக்கு கடினமாகப் பட்டது. இல்லை, நம்பாமல் இருப்பதுதான், அவளது நிம்மதிக்கு நல்லது.

ஆனால், நிம்மதி என்ற வார்த்தையின் பொருளே மறந்துவிடும் போல அல்லவா ஆகிவிட்டது!

கண்ட கண்ட எண்ணங்களால் சாரூபா அலைக்கழிக் கப்பட்டு தவித்துக் கொண்டிருந்தபோது, கையில் இருந்த செல்போன் சிறு ஒலியெழுப்பி, ஒளிர்ந்தது.

ஏதோ எஸ்எம்எஸ்!

மனதை மாற்றும் முயற்சியாக, பல தினங்களாகப் பாராமல் விட்ட செய்திகளை எல்லாவற்றையும் ஒவ் வொன்றாக பார்த்து அழிக்கலானாள்.

திடுமெனக் கை நின்றது.

அது, அவளுடைய அன்னை அனுப்பியது.

திருமணத்தை எப்போது வைத்துக் கொள்ளலாம் என்று, குணாளன் கேட்கிறானாம். ரொம்பத் தள்ளிப் போட்டால், குளிர்காலம் வந்துவிடுமாம். அப்போது அவனுடைய முதியோர் இல்லத்து வாசிகளின் நலத் தைப் பேணுவதற்கே அவனுக்கு நேரம் சரியாகப் போய் விடும். கல்யாண வேலைகளைக் கவனிக்க இயலாது என்றானாம். சாரூபாவை நெருக்குவதாக நினைக்க வேண்டாம். உள்ள நிலைமை இது. என்ன பண்போடும் பணிவோடும் கூறினானாம்.

இங்கேயும் இதுவா?

தலையைப் பிடித்துக் கொண்டு இருக்கையில் சாய்ந்தாள் சாரூபா.

இதற்கு என்ன பதில் அனுப்புவது?

ஏதேதோ எண்ணி சாரூபாவின் மனம் கலங்கியது.

சற்றுமுன் தீனதயாளன், வேஷம், துரோகம் என்றானே! அதெல்லாம் மெய்தானே?

அவள் மனதில், தீனதயாளன் இருப்பது மெய்தான். மனதில் அவனை வைத்துக்கொண்டு குணாளனை மணக்க ஒப்பியதும் நிஜம்.

ஆனால், இதையெல்லாம் குணாளனுக்கு மறைத் திருந்தால்தானே, அது வேஷமும், துரோகமும் ஆகும்? அவள்தான் எல்லாம் சொல்லிவிட்டாளே!

அதற்காகத்தானே, அவள் அந்த நிபந்தனையை முன் வைத்ததே! அதற்கும் குணாளன் ஒத்துக் கொண்டதால் தானே, அவள் மணம் புரிய ஒத்துக்கொண்டதே!

ஆனால், கிட்டி முட்டி வருகையில், திருமணம் என்கிற வார்த்தையே, அவளுள் திகிலைக் கிளப்பியது. எப்படி முடியும் என்று கலங்க வைத்தது.

பெயரளவே என்றாலும், தீனதயாளனைத் தவிர்த்து, இன்னொருவனை மணக்க, அவளால் எப்படி முடியும்?

இந்தக் கலக்கத்திலும் குழப்பத்திலுமாக, இன்னொரு பெண் என்றால் பாவம், என்ன கதியாகி இருப்பாளோ?

ஆனால், சாரூபா சிந்தையில் தெளிவுள்ள பெண். பெற்றோரின் உந்துதலில் பலமுறை 'சுந்தரகாண்டம்' படித்ததன் பலனாக, எதையும் தீர ஆலோசித்து முடி வெடுக்கக் கூடியவள், முடிவெடுக்கிறவளும் கூட.

'சுந்தரகாண்டம்' அடிக்கோடிட்டுச் சொல்வதும் அதைத் தானே? சுந்தரனாகிய அநுமானாகட்டும், இலங்கையில் சிறைப்பட்டிருந்த சீதையாகட்டும், எதையும் எவ்வளவு யோசித்து செயல்படுகிறார்கள்! 'சுந்தரகாண்டம்' போதிப் பதே, அதையேதானே? பலமுறை யோசித்து தீர ஆலோ சித்து, சரியாக முடிவெடுப்பது!

முகத்தில் நன்றாக நீரடித்துக் கழுவிவிட்டு வந்து, சம்மணமிட்டு அமர்ந்து, சாருபாவும் அமைதியாக யோசித்தாள்.

அவளைப் பொறுத்தவரையில், அவளது மனம் தீன தயாளனுக்குத்தான் சொந்தம். உயிருள்ளவரை அப்படித் தான். அடிக்கடி மனதை மாற்றிக் கொள்ளுகிறவள் அவள் அல்ல!

அதேபோல, ஓர் ஆணுடன் அவள் உறவு கொள்ளு வது என்றால், அதுவும், அவனுடன் மட்டும்தான். இதிலும் மாற்றம் கிடையாது. சத்தியம்!

அவனை அடியோடு பிரிய நேர்வது உயிர் வேதனை தான். அதிலும் சிறிதும் சந்தேகமில்லை!

ஆனால், அவனை இழக்காமல் இருப்பதற்காக, அவன் விரும்பிய விதமாக திருமணத்துக்கு முன்பாகவே உறவு வைத்துக் கொள்வாளா என்றால், அதற்கும் மிகப் பெரிய மறுப்புதான், பதில்.

திருமணத்திற்கு முந்திய உறவை, தயாளனின் பாஷைப்படி 'லைசன்ஸ் தகடு' இல்லாத உறவை அவளால் ஒருபோதும் ஏற்க முடியாது.

'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்று படித்த தோடு மட்டுமின்றி, அதைப் பின்பற்றியும் வந்திருப் பவள். நாலு பேர் ஆசியோடு, அவள் கழுத்தில் தீன தயாளனின் தாலி... லைசன்ஸ் தகடு கட்டினால், அதன் பிறகு, கணவனாக அவனை ஏற்பதுதான் அவளது ஒழுக்கம்!

தீனதயாளன் கூறுவது போல, அவளை மீறி அந்த மாதிரித் தவறு எதுவும் நடந்துவிட்டால், அப்புறம், அவள் அவனை வெறுத்து, தன்னை வெறுத்து, வாழ்வையும் வெறுத்து விடுவாள்.

அதுபோல எதுவும் நடக்காமல் இருக்கவும், தீனதயாளன் திரும்பத் திரும்ப வந்து அவளது மன அமைதியைக் குலைக்காமல் இருப்பதற்கும், அவனுக்கு ஒரு தடையும், அவளுக்கு ஒரு பாதுகாப்பும் தேவை! அந்த இரண்டுமாக இருக்கக்கூடியது, அவளது திருமணம் ஒன்றே!

கூடவே, மனைவி என்ற பெயரைத் தவிர, வேறு எந்த உரிமையும் கிடையாது என்பதைக் குணாளனும் ஒத்துக் கொண்டிருப்பதால், அவளுக்குப் பிடித்திருக்கிறதோ, இல்லையோ, இனியும் இந்தப் பெயரளவுத் திருமணத்தை ஒத்திப் போடுவது முட்டாள்தனம்!

வெகு நேரம் சிந்தித்து எடுத்த முடிவு என்றாலும், அதைப்பற்றி பேச மனமின்றி, செல்போன் மூலம் மனம் அமைதியாக இருப்பது போலத்தான் அவளுக்குத் தோன்றியது. ஆனால், ஏனோ கண்ணிமைகள் மூட மறுத்து, இரவு முழுவதும் திறந்தே இருந்துவிட்டன!

சாரூபாவின் சம்மதம் என்கிற ஒரு வார்த்தைக்காக காத்திருந்தது போல திருமண வேலைகள் வெகு வேகமாக நடக்கலாயின. முதலாவதாக, வாய் மொழிப் பரப்புதல்.

மறுநாளே, அவளுடைய அண்ணன் போன் செய்து வாழ்த்துத் தெரிவிக்கவும், சாரூபா சற்றுத் திகைத்துப் போனாள்.

பொதுவாக சும்மா சுகமா என்பது போலச் சாதாரண விஷயங்களையெல்லாம், சுகனிடம் யாரும் சொல்லிக் கொண்டிருப்பதில்லை. ஓர் ஆராய்ச்சி சம்பந்தமான வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருப்பவன் அவன். அவனது கவனத்தைக் கலைப்பது கூடாது என்பது, அந்தக் குடும்பத்தின் எழுதாத சட்டம். எப்போதாவது வேலைப்பளு குறைவாக இருக்கும்போது, அவனாகத் தொடர்பு கொள்ளுவான். அவ்வளவுதான்.

இப்போது, அண்ணனே கூப்பிட்டு வாழ்த்துச் சொல்லவும், அதுவும் வாழ்த்திவிட்டு, ''மேலே பேச நேரம் இல்லைடா'' என்று அவன் வைத்துவிடவும், சாரூபாவுக்கு குப்பென்று ஆத்திரம் பொங்கிவிட்டது.

உடனே தாயை அழைத்து, பிடிபிடியென்று பிடித்துவிட்டாள்.

சுகனின் ஆராய்ச்சி எவ்வளவு முக்கியமானது? உலகத்தின் கோடானு கோடி மக்களின் நலத்துக்காக, அவன் எப்படி இடைவிடாது உழைத்துக் கொண்டிருக்கிறான்? அவனைப்போய், அனாவசியமாகத் தொல்லை பண்ணலாமா? அதுவும், அவனது ஆராய்ச்சியின் முக்கியத்துவம் தெரிந்த அம்மா, அவனது கவனத்தைக் கெடுக்கலாமா?

''சும்மா என்றால், அப்பாவோ, நானோ அப்படிப் பண்ணுவோமா, சாருமா? இது ரொம்ப முக்கியமாக சந்தோஷ சமாச்சாரம் என்பதால்தான் சொன்னேன். அவனுக்கும் தெரிந்திருக்க வேண்டும்தானே?'' என்று மகளின் கோபம் பற்றிய வருத்தமே இல்லாமல், குரலில் குதூகலத்துடன் கூறினாள் தாய்.

''அப்படி என்ன முக்கியமான சந்தோஷ சமாச்சாரம், அண்ணனின் காதில் போட்டே ஆக வேண்டியதாக, நம் குடும்பத்தில் இப்போது நேர்ந்திருக்கிறதாம்?'' என்று எரிச்சலாகக் கேட்டவளுக்கு உடனே விஷயம் புரிந்தது. உடம்பெல்லாம் வியர்த்துவிட்டது.

சுகனின் வாழ்த்துதானே, தொடக்கம்? எதற்காக வாழ்த்தினான்? அவளது திருமணத்துக்காக அல்லவா? அதையே மறந்து, என்ன அசட்டுக் கேள்வி?

அவ்வளவுக்கு நினைவில் நிற்காத ஒரு திருமணத் தையா, அவள் செய்து கொள்ளப் போகிறாள்!

அவளது திகைப்பு அடங்குமுன், சரசுவதியும் அதையே கேட்டுவிட்டாள், அதுவும் சும்மா அல்ல. அதுவும் சும்மா அல்ல.

''கண்ணு, நீ பிடித்துதானேம்மா, திருமணம் செய் கிறாய்? வேறே எதற்காகவும் இல்லையே?'' என்று கலவர மடைந்த குரலில் வினவினாள்.

தானே திணறுகையில், சாரூபா என்ன பதில் சொல்லு வாள்? ''என்னம்மா அசட்டுக் கேள்வி இது?'' என்று பதில் கேள்வி கேட்டு சமாளிக்க முயன்றாள்.

ஆனால் ''பின்னே, இதை எப்படி மறப்பாய்?'' என்று நேரடியாகக் கேட்டாள் தாயார்.

''ம... மறக்கவில்லையே! மறக்கவில்லை, அம்மா. அண்ணனின் ஆராய்ச்சி ரொம்பப் பெரிய விஷயம். அ... அதன் முன், ஒரு சாதாரண பெண்ணான என் திரு மணம், ஒரு தூசு மாதிரி. அதைப்போய், அவனது ஆராய்ச் சியைக் கெடுத்துக்கொண்டு சொல்ல வேண்டுமா

என்றால், உடனே வேறே ஏதேதோ கற்பனை பண்ணிக் கலங்குறீர்களே! இப்படியெல்லாம் செய்தால், இனி உங்களிடம் பேசவே போவதில்லை!'' என்று செல்லக் கோபம் காட்டித் தாயைச் சமாளித்தாள்.

தாயைச் சமாளிக்கலாம், ஆனால் தன்னைத்தானே எப்படி சமாதானம் செய்வது?

இதுவே, தீனதயாளனோடான திருமணம் என்றால், இப்படியா இருப்பாள்?

தயாளனோடு திருமணம் நின்றதன் காரணமும், குணாளன் இந்தப் பெயரளவு திருமணத்துக்கு ஒப்புக் கொண்ட காரணத்தையும் எண்ணிப் பார்க்கையில், தன் மீதே சாருபாவுக்குக் கோபம் வந்தது.

அதன் விளைவாகக் கல்யாணத்தை விரைவிலேயே நடத்தும்படியான அன்னையின் யோசனைக்கும், உடனே ஒப்புக் கொண்டாள். தாயின் மனம் முழுதாக அமைதியுறும் என்பதும், அதற்கு ஒரு காரணம்.

ஒரு சின்ன வாய்ச் சறுக்கல்தான். ஆனால், அதைச் சமாளிக்கவும் எவ்வளவு பாடுபட வேண்டியிருக்கிறது!

ஆனால், என்ன முயன்றாலும் திருமணம் தொடர்பான வேலைகளில் உற்சாகத்துடன் கலந்து கொள்ள முடியாது என்று புரிந்துவிடவே, ''அலுவலகத்தில் வேலை அதிகம். அதனால் கல்யாண வேலைகள் அனைத்தையும் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். துணிமணி, அழைப்பிதழ் இன்னும் எல்லாவற்றையுமே, என்னை விடப் பத்து மடங்கு சிறப்பாக செய்வீர்கள் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதனால், எல்லாப்

பொறுப்பையும் உங்கள் தலையில் சுமத்திவிட்டு, நிம்மதியாக அலுவலக வேலையைப் பார்க்கப் போகிறேன். ஆனால் திருமணத்தன்று மனையில் உட்கார மட்டும் 'டாணெ'ன்னு சரியான நேரத்துக்கு நான் அங்கே வந்துவிடுவேனாக்கும்!'' என்று வேடிக்கை போலக் கூறிக் கழன்றுகொண்டாள்.

ஆனால், வீட்டிலும் அலுவலகத்திலும் ஏதேதோ வேண்டாத வேலைகளை எல்லாம் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தபோதும் 'தொலையாப் பகலே, முடியா இரவே' என்கிற நிலையில்தான் சாரூபா சென்னையில் தவித்துக் கொண்டிருந்தாள்.

இந்நிலையில், மீண்டும் ஒருதரம், அவளது வாழ்வுக்குள் தான் இருப்பதை, தீனதயாளன் உறுதியாகக் காட்டிக் கொண்டான், அதுவும் எப்படி?

# 9



சில தினங்களாகவே, சாரூபாவுக்கு மனது சரியில்லை... கூடச் சேர்ந்து உடம்பும்.

தீனதயாளனைப் பிரிந்ததில் இருந்தே சோர்வுதான் என்றாலும், இந்தத் திருமணத்துக்கு சம்மதித்ததில் இருந்து இன்னும் அதிகமாகவே கலக்கம் என்றாலும், அச்சடித்து வந்து விட்ட திருமணப் பத்திரிகைகளை எடுத்துக்

கொண்டு விரைவிலேயே சென்னைக்கு வரப்போவதாக தாயார் சொன்னதிலிருந்து அவளுக்கு, நெஞ்சுக்குள் ஏதோ பிசைந்து கொண்டே இருந்தது. விடுமுறை நாள் என்பதால், அனேகமாக, அன்றே வரக்கூடும்.

எப்போது கல்யாணத்திற்கு ஒத்துக் கொண்டாளோ, அதன் தொடர்பாக இதெல்லாம் வந்தே தீரும் என்று தெரியாதா? இதற்காக கலங்குவது படு முட்டாள்தனம் என்று தன்னைத்தானே கடிந்து கொண்டபோதும், அவளால் இயல்பு நிலைக்குத் திரும்ப முடியவில்லை.

இது போதாது என்று, அன்று காலையில் தயாள னுடைய தாயார் தேவி வேறு போன் செய்தாள். தீன தயாளன் எங்கே இருக்கிறான் தெரியுமா என்று சாரூபா விடம் கேட்டாள்.

என்ன கூத்து, இது? இருவரும் பிரிந்துவிட்டது. அவளுக்குத் தெரியும்தானே? அதன் பின்னும் மகனின் இருப்பிடம் பற்றி, இவளிடம் விசாரித்தால் என்ன அர்த்தம்?

அதுவும், காலை ஏழு மணிக்கு, ஓர் இளம் பெண் ணிடம் கேட்கிற விஷயமா, இது?

ஆனால் கேட்பவள் பற்றியும் ஓரளவு அறிந்திருந்த தால், சாரூபாவால் கோபப்பட முடியவில்லை. மாறாகப் பெரியவளின் கலங்கியிருந்த குரலால், சும்மாவே தக ராறாக இருந்த அவளது நெஞ்சுக்குள் பந்தயக் குதிரையும் சேர்ந்து ஓடத் தொடங்கியது.

முடிந்தவரை நிதானப்படுத்திக் கொண்டு ''தெரி யாதே. ஆன்ட்டி. ஏன் கேட்கிறீர்கள்?'' என்று விவரம் கேட்டாள் அவள்.

''வ... வந்தும்மா, இரண்டு நாட்களாக அவனிட மிருந்து தகவலே இல்லையாம். வீட்டுக்கு, அலுவலகத் துக்கு... யாருக்குமே எந்த உத்திரவும் வரவில்லையாம். முன்பானால், இங்கே கிளம்பினால், தீனாவுக்கு அங்கே கார் தயாராக நிற்க வேண்டும். அதனாலேயே எங்கே போகிறான், எங்கே இருக்கிறான் என்று எல்லோருக்கும் தெரியும். இப்போது கொஞ்ச காலமாகவே... உன்னைக் குற்றம் சொல்வதாக எண்ணாதேம்மா. அவனிடம் யாரா லும் நெருங்க முடிவதில்லையாம். அவனாக எதுவும் சொல்வதும் இல்லையாம். துணிந்து அவனது செல் லுக்கு பண்ணினால் ஸ்விட்ச் ஆஃப் என்று வருகிறதாம். அலுவலகத்திலிருந்து எனக்கு ஏதாவது தெரியுமா என்று கேட்டார்கள். இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக, என் அம்மாவோடு இருக்கிறவள், நான். வாராவாரம் அவன் பாட்டியைப் பார்க்க வருகிறபோது, பேருக்காக, என்னிடமும் இரண்டு வார்த்தை பேசுவான். அதற்கு மேல், மற்றவர்களுக்குத் தெரிகிற அளவுகூட எனக்குத் தெரியாது. இதில், நான் என்ன விவரம் சொல்லுவேன்?'' என்று கிட்டத்தட்ட புலம்பினாள் அந்த அன்னை.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாகத் தாய் வீட்டிலா? 'உரிமை தெரியாமல் ஓடிய கோழை' என் றானே! மூன்று வயது பிள்ளை, பெற்றவளுக்காக எப்படி ஏங்கியிருப்பான்! அதுதான் கோபமாக... ஆனால் இப்போது அது முக்கியமில்லை.

''ஆன்ட்டி, அவன் அப்பாவிடம் கேட்டார்களாமா?'' என்று வினவினாள். தந்தை, கூடவே இருக்கிறவர் ஆயிற்றே!

''ஹூம்'' என்று ஆத்திரமூச்சு விட்டாள் பெரியவள், ''கேட்டு என்னம்மா செய்வது? போதையைத் தாண்டி அந்த மனிதருக்கு, விஷயத்தை புரிய வைக்க முடிய வில்லையாம்... எப்போதும் போல, அவர் எப்படியோ போகட்டும். உனக்கு என்ன தோன்றுகிறது? பிணைத் தொகைக்காக பணக்காரர்களை கடத்துகிறார்களே, அது போல எதுவும் நடந்திருக்குமா?'' என்று கேட்டபோது, தேவியின் குரல் நடுங்கியது.

கடத்தலா என்று சாரூபாவும் ஒரு கணம் அதிர்ந்தாள். உடனேயே இராது என்று, அவளுக்குத் தோன்றிவிட்டது. அதையே தேவியிடமும் சொன்னாள் ''அப்படி எதுவும் இராது, ஆன்ட்டி. தயா எப்போதும் கவனத்தோடு இருக் கிறவர். அவரைக் கடத்துவது கடினம். அப்படியே கடத்தி யிருந்தாலும், அந்தக் கடத்தல்காரர்கள், இதற்குள் பணம் கேட்டிருப்பார்கள். அப்படி எதுவும் இருக்க வாய்ப் பில்லை'' என்று அவனுடைய தாயோடு சேர்த்து, தனக் குமே கூறிக் கொண்டாள் சாரூபி.

''பின்னே அவனைக் காணோமே!''

ஆமாம் காணவில்லையே!

அவசரமாக யோசித்து ''பயப்படாதீர்கள். தனியாக இருக்க வேண்டும் என்று... அவருக்கு மனம் சரியில்லை என்று நீங்களே, சொன்னீர்களே. அதனால், இரண்டு மூன்று நாட்கள் தன்னந்தனியாக இருக்க எண்ணி, எங்கேயாவது போயிருப்பார். விரைவில் வந்துவிடுவார். கவலைக்கு ஒரு காரணமும் இராது'' என்றாள் குரலில் உறுதியைக் காட்டி சாரூபா.

சிறு அமைதியின் பின் ''அப்படியானால், பயப்பட வேண்டாம் என்கிறாயா?'' என்று பரிதாபமாக கேட்டாள் அந்த அன்னை.

''வேண்டவே வேண்டாம்!'' என்று பெரியவளுக்குத் தைரியம் சொல்லிவிட்டு, அவளது பயத்தை, அப்படியே தான் ஏற்றுக் கொண்டாள் சாரூபா.

ஒரு பயத்தோடு, ஓர் அரை மணிநேரம் கூட, சாரூபா வால் அமைதியாக இருக்க முடியவில்லை. அதற்குள் ஆயிரம் கற்பனைகள், அவள் மனதைக் குதறி, ரணகள மாக்கிவிட்டன.

தயாவுடைய தாயின் நிம்மதிக்காக சொன்ன காரணம், இப்போது படு முட்டாள்தனமாகத் தோன்றியது. என்ன தான் தனிமை, அது இது என்று போனாலும், தொழிலை அவன் எப்படிப் புறக்கணிப்பான்?

'மதர்ஷிப்' என்று அவன் 'தீனாஸை' வைத்திருந்த போதும், அதில் எத்தனை கிளைகள்! புதிது புதிதாக அவன் தொடங்கிய... அந்த மார்பிள் தொழில் போல எத்தனை? பிரச்சினை இல்லாத தொழில் ஏது? அவனது ஒப்புதல், ஆணை இல்லாமல் என்ன நடக்கும்? இது புரியாதவனோ, பொறுப்பற்றவனோ, அவன் இல் லையே!

ஒருவேளை, தன்னை மிரட்டுவதற்காக இப்படி செய்கிறானோ என்று யோசித்துவிட்டு, அதையும் இராது என்று சாரூபா ஒதுக்கினாள். என்னதான் இப்போது போலக் கலங்கினாலும், அப்புறமாக, அன்று கண்ட மேனிக்கு பழுதில்லாமல், அவன் அப்படியே வந்து

நிற்கும்போது, அவள் அவனை அடியோடு ஒதுக்கிவிட மாட்டாளா? அவனும், இது புரியாதவன் அல்ல.

கடத்தலுக்கும் வாய்ப்பு மிகவும்... ஊகூம், இராது.

ஆனால்... பெருமளவு வாய்ப்பு இருந்த இன்னொன் றைப் பற்றி நினைத்துப் பார்க்கக்கூட, அவளுக்குப் பயமாக இருந்தது. மற்றவர்களுக்கும் அப்படித்தான் இருந்ததோ, என்னவோ, தயாளனுக்கு ஏதேனும் விபத்து நேர்ந்திருந்தால் என்ற எண்ணமே அவளை நடுங்க வைத்தது.

அதுவும், சாதாரண விபத்து என்றால், செல்போன் லாப்டாப் எதையாவது பயன்படுத்தியிருப்பான், உத விக்கு அழைத்தும் இருப்பான்! பின்னே?

திகிலடித்து, மூளை மரத்து, அவள் உட்கார்ந்திருந்தது எவ்வளவு நேரமோ? முதலில் சுரணை பெற்ற மூளை, இதை எப்படி அறிந்துகொள்வது என்று, ஆலாகப் பறந்து யோசித்தது. தானாக விசாரிப்பதற்கு மதிப்பு இராது.

லேகா நினைவுதான் உடனடியாக சாரூபாவுக்கு வந்தது. ஆனால், கேட்ட உடனே பதில்கள் வந்து குவிய, பத்திரிகைத் துறையில் அவளும் பெரிய ஆள் இல்லை.

இதை, தீனாஸின் பெரிய அதிகாரிகளோ, அவனுடைய தாயோதான் செய்தாக வேண்டும். அப்போதுதான், உ... உள்ள நிலை உடனே தெரிய வரும்!

விபத்து என்கிற எண்ணம் மற்றவர்களுக்கும் தோன் றாமல் இராது. ஆனால், அதை வெளிப்படையாகச் சொல்ல அஞ்சியோ, தயங்கியோதான் பேசாதிருப் பார்கள். அதிலும் அவனுடைய தாய்...

ஆனால், தானாக தெரிய வரட்டும் என்று சும்மா இருக்க அவளால் முடியாது.

எனவே, மேலும் ஒரு கணம் யோசித்துவிட்டு, தேவிக்கு போன் செய்தாள்.

''என்னம்மா, அவன் உனக்கு...'' என்று நம்பிக்கை யோடு தொடங்கியவளின் பேச்சில் குறுக்கிட்டு, ''இல்லை ஆன்ட்டி'' என்று மறுத்தவள், உடனே தொடர்ந்து வேகமாக பேசினாள். ''ஆன்ட்டி, என்னவென்று ஒன்றும் புரியாமல் நாம் சும்மா கிடந்து குழம்பித் தவிப்பதற்கு, போலீசில் சொல்லித் தேடினால் என்ன? அவர்களுக்கு நாடு முழுக்க எத்தனையோ ஆயிரம் நிலையங்கள், விரல் நுனியில் தொடர்புகள், நாட்டின் எந்த மூலையில் இருந்தாலும், உடனே கண்டுபிடித்து விடுவார்களே! உரிமை உள்ளவர்கள் நீங்கள். சமூகத்தில ஒரு பெயரும் இருப்பதால், நீங்கள் கேட்டால்தான், உடனே செயல்படு வார்கள். அப்படியே தயா கோபப்பட்டாலும், என்னை கைகாட்டி விடுங்கள்...'' என்று பெரியவள் எழுப்பக் கூடிய ஆட்சேபங்கள் அத்தனைக்கும் பதில்களை விரைந்து சொல்லிக்கொண்டே வருகையில் அழைப்பு மணி அடித்தது.

பேச்சை நிறுத்தாமலே நினைத்து வைத்ததை எல் லாம் வேகமாகச் சொல்லியபடியே எழுந்து சென்று லென்ஸ் வழியே வாயிலைப் பார்த்தவள் பிரமித்துப் போனாள்.

''ஆன்ட்டி, தயா.. உங்கள் மகன்தான். இனிக் கவலை வேண்டாம்'' என்றவள், அதற்கு மேல் ஒன்றும் சொல்

லாமல் செல்லை அணைத்துவிட்டு, அவசரமாகக் கதவைத் திறந்தாள்.

முகத்தில் இரண்டு பிளாஸ்திரியும், கலைந்த சிகையும், சிவந்த கண்களுமாக, அதை விடவும், அசதியில் தலை தொங்கிச் சோர்ந்து நிற்பவனைப் பற்றி, அவன் தாயிடம் எதைச் சொல்வது?

அத்தோடு, முதலில் அவனை உள்ளே அழைத்து, உட்கார வைப்பதல்லவா, முக்கியம்?

அன்று வரை அவள், அவனிடம் பார்த்தறியாத தளர்ந்த நடையுடன் போய், அவளது பிரம்பு நாற்காலியில் விழுந்தான் அவன்.

பின்னோடு வந்தவளிடம் ''எனக்குக் குடிப்பதற்கு ஏதாவது தருகிறாயா, சாரூபா? தொண்டை காய்ந்து.. நி... நிறையச் சொல்ல வேண்... டும்'' என்று சிரமத்துடன் கூறித் தலையைப் பின்னே சாய்த்துக் கண்களை மூடிக் கொண்டான்.

ஓடிப்போய், ஓர் எலுமிச்சம்பழத்தை வேக வேகமாகப் பிழிந்து அவனுக்குப் பிடித்த விதமாக உப்பும் சர்க்கரையும் இட்டுக் கலந்தபடியே அவள் விரைந்து வந்தால், நாற்காலியில் சாய்ந்த நிலையிலேயே, தீனதயாளன் உறங்கிப் போயிருந்தான்!

கையில் இருந்த பழச்சாறை அருகில் இருந்த முக்காலி மீது வைத்துவிட்டு தீனதயாளனை ஆராய்ந்தாள் அவள்.

முகத்தில் இருந்த பிளாஸ்திரிகள் போக, தோளில் தெரிந்த சட்டை கிழிசல், அங்கே ஒரு காயத்தை உறுதி செய்தது. அதேபோல, அங்கங்கே சிராய்ப்புகள்.

சாரூபா அஞ்சியது போல, விபத்துதான். ஆனால் இந்தக் காயங்களில் இவ்வளவு சோர்ந்து போவானா? சிராய்ப்புகள் காய்ந்திருந்த நிலையைப் பார்த்தால், விபத்து நடந்தே, ஓரிரு நாட்கள் ஆகியிருக்க வேண்டும்.

இந்த இரண்டு நாட்களில் வேறு என்ன நேர்ந்திருக்கக் கூடும்?

தீனதயாளனிடம், காலை மாலை எந்த நேரம் பார்த்தாலும் ஒரு நிமிர்வு இருக்கும். ஆனால் உடம்பின் ஒவ்வோர் அணுவும் களைத்து விட்டது போல, ஓய்ந்தல் லவா கிடக்கிறான்!

தயாளன் சோர்ந்து கிடந்த நிலை தாங்க முடியாமல், அருகில் சென்று, மெல்ல அவன் தலையை வருடிக் கொடுத்தாள்.

மெல்லக் கண் விழித்துப் பார்த்தவனிடம் ''முதலில் இந்த ஜூஸைக் குடியுங்கள், தயா'' என்று பழச்சாறை எடுத்துக் கொடுத்தாள்.

பணிவுள்ள பிள்ளை மாதிரி, டம்ளரை வாங்கி, சொட்டு விடாமல் குடித்துவிட்டு, டம்ளரை ஒரு புறமாக வைத்தான். அவள் புறம் திரும்பி யாசிப்பவன் போலக் கையேந்தினான்.

தயங்கக்கூடத் தோன்றாமல், அவள் தன் கையை அவனது கையில் வைக்கவும், இறுகப் பற்றிய அந்தக் கையிலேயே முகத்தைப் புதைத்துக் கொண்டான் தீன தயாளன்.

சில கணங்களிலேயே கையில் ஈரத்தை உணர்ந்து, சாரூபா திடுக்கிட்டுப் போனாள்.

அப்படியே மண்டியிட்டு ''ஷ் தயா, என்ன இது?'' என்று மறு கையால் அவனை வருடிக் கொடுத்தாள்.

தன்னை சமாளித்துக் கொண்டு, தீனதயாளன் மெல்ல நிமிர்ந்தான்.

''உன்னுடன் பேச வேண்டும், சாரூபி. ஆனால், இப்படி மண்டி போட்டுக்கொண்டு... வேண்... டாம்'' என்றபடி சுற்றுமுற்றும் பார்த்தான்.

ஒய்ந்த நேரத்தில் இலகுவாகப் படுத்தவாறு, படிக்க, டிவி பார்க்க வசதியாக, திவான் ஒன்றை வாங்கி, சாரூபா ஹாலில் போட்டிருந்தாள். ஞாயிறு மாலைகளில் நிச்சய மாகப் பயன்படும் ஒன்று.

அவன் எழுவதற்குச் சிரமப்படுவதைக் கண்டு, ''பரவாயில்லை, நான் தரையில், அல்லது டீபாயில் உட்கார்ந்து கொள்ளுகிறேன்'' என்றதை மறுத்து, பிடி வாதமாக திவானை நோக்கி நடந்தான்.

திவானில் அமர்ந்து, அவளையும் அமர வைத்து, மறு படியும் அவளது கையைப் பிடித்துக்கொண்டு பிறகே, தீனதயாளன் பேசத் தொடங்கினான்.

அப்போதும் தடுமாற்றத்துடனேயே ''நான்... நான் சாவைப் பார்த்தேன், சாரூபி. பக்கத்திலேயே ஒருவன் அணுஅணுவாக சாவதை. வேறு வழியின்றி கூடவே இருந்து, கடைசி வரை பார்த்தேன், சாரூபா!'' என்றான் கற்றாகிவிட்ட குரலில்.

அவள் திகைத்து நோக்கவும் ''உண்மைதான், சாரூபா. அந்த நேரத்தில் என்னிடம் நிறைய காசு இருந்தது. ஆனால், அதனால் ஒரு பயனுமில்லை. எதையும்

சாதிப்பேன் என்கிற இறுமாப்பு! மூளைத்திறன்! உடல் பலம்! அந்தத் திமிரும், அளவு மீறியே இருந்தது! அதனாலும் ஒரு பயனுமில்லை. மனிதனுக்குத் தன்னைப் பற்றி மனதில் உறுதி இருக்கலாம். அதுவே திமிராக மாறக்கூடாது. அப்போதுதான் அடி விழுகிறது. கண் முன்னே ஒருவன் செத்துக் கொண்டிருக்கிறான். அவனுக்காக விரலைக் கூட அசைக்க மாட்டாமல், உட்கார்ந்திருந்தேன், சாரூபி!'' என்றான் அவன் தவிப்புடன்.

''ஏன் அப்படி, தயா?'' என்று மெல்லிய குரலில் வினவினாள் சாரூபா.

''ஏன் அப்படியா?'' என்று கண்களை இறுக மூடித் திறந்தான், தீனதயாளன். ''அதுவும் திமிர்தான். அன்று நீ திருமணம் செய்யப் போவதாகக் கூறியது, என்னை ரொம்பவே பாதித்துவிட்டது. அப்பாவைப் பார்த்துப் பார்த்து குடியில் சும்மாவே ஒரு வெறுப்பு உண்டு என்பதால், உன்னை மறக்கக் குடித்ததும், அவ்வளவாக பயன் தரவில்லை. தேவதாசா என்று நீ கேட்டது வேறு! உன்னால் என்னை மறந்து, இன்னொருவனை மணக்க இயலும்போது, என்னால் மட்டும் மறக்க முடியாதா என்கிற வீம்பு! என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தபோதுதான், இந்த யோசனை வந்தது. யாரிடமும் எதுவும் சொல்லாமல், எங்காவது போய்விட்டால்? விஷயம் கசியும்போது, உன்னை பாதிக்காதா? பாதிக்கும் என்ற நிச்சயத்தோடு கிளம்பிப் போனேன். விமானப் பயணம் காட்டிக் கொடுத்துவிடும் என்று ரயிலில் தட்கால் டிக்கெட் எடுத்துப் போனேன். பணம் தவிர,

செல், லாப்டாப் எல்லாம் ஸ்விட்ச் ஆப் பண்ணி, உள்ளே வைத்துப் பூட்டிவிட்டே கிளம்பினேன். சில நாட்கள் எல்லோரும் திட்டிமுடித்துவிட்டு உன்னிடம் வருவார்கள். உனக்கும் புரியும் என்று எண்ணினேன்... என்ன?''

அவளது முக மாறுதலைப் பார்த்து கேட்டவனிடம் ''ஆனால் அப்படி திரும்பி வரும்போது உங்களை அடி யோடு வெறுத்துவிட மாட்டேனா, தயா?'' என்று முன்பு நினைத்ததைக் கேட்டாள் சாரூபா.

''செய்வாய். ஆனால், அந்தத் திருமணத்தை நிச்சய மாக நிறுத்திவிடுவாய் என்று நினைத்தேன். பிறகுதான் உன்னிடம் கெஞ்சிக் கூத்தாடி, உன் மனதை இளக்க, நீண்ட நெடு வாழ்நாள் முழுவதும் இருக்கிறதே என்னால் முடியாததா? கட்டாயம் முடியும் என்ற நிச்சயம்... ஆனால் கடவுள் சித்தம் வேறாக இருந்தது. நீண்ட நெடு வாழ்நாள் என்ன? அடுத்த வினாடிகூட நமக்கு சொந்தம் இல்லை என்று, ஒரு விபத்தின் மூலம் எனக்குப் புரிய வைத்தது...'' என்று சோர்வுடன் தலை பின்னே சாயப் பெருமூச்சு விட்டான்.

''தயா?''

சிரமப்பட்டு அயர்வை ஒதுக்கி, மீண்டும் நிமிர்ந்து அவளைப் பார்த்தான் தீனதயாளன் ''ஆமாம் சாரூபா. ஏதோ சதி வேலை காரணமாக, ரயில் தடம்புரண்டு விட்டது. அதில் என் எதிர் சீட்டில் இருந்த ஆள்... அடுத்தவர் கதை வேண்டாம், தேவையில்லை என்பேன். ஆனால் நீ, என்னை போலக் கல் நெஞ்சக்காரி இல்

லையே. கேள். அவருக்கு ஐம்பது வயதிருக்கும். சிறு வயதில் ஆடாத ஆட்டமில்லை. பணக்காரப் பெண்ணை ஏமாற்றி மணந்து, அவளது சொத்துக்களை அபகரித்து, அவளைப் பிள்ளைகளுடன் தெருவுக்கு ஓட்டிவிட்டு, இன்னொருத்தியோடு குலாவியவர். அந்தப் பெண்ணே ஏமாற்றவும் திருந்தியிருக்கிறார். இழந்த சொத்துக்கள் மனைவியுடையவை என்பதால், அவற்றை இழந்து வெறும் கையோடு அவளிடம் திரும்பிச் செல்ல மன மின்றி, சில ஆண்டுகள் போராடி, அவற்றை மீட்டிருக் கிறார். சொத்துக்களின் உரிமையோடு, மனைவி குழந்தை களை நாடி, அவர் வரும்போதுதான், அந்த விபத்து நேர்ந்தது. நாங்கள் இருவரும் ஒரு சிறு இடத்தில் மாட்டிக் கொண்டோம். விபத்தில் அவருக்கு ரொம்ப அடி. அதிக ரத்த சேதம்! சாவு நெருங்குவதும் அவருக் குப் புரிந்துவிட்டது. ஆனால், செய்யக்கூடாத தப்பை யெல்லாம் செய்துவிட்டுத் திருந்தி வாழ விரும்பி வந்தவர், மனைவியிடம் மன்னிப்புக் கேளாமல் சாகப் போகிறோமே என்றுதான் ரொம்பவும் தவித்துப் போனார். என்னால் முடியும், முடியும் என்பேனே, அப்போது ஒன்றுமே செய்ய முடியவில்லை. இருவருமே இலகு வாக அசையக் கூட முடியாத நிலையில் மாட்டியிருந்த தால், எதையாவது கிழித்து கட்டி, அவரது ரத்தப்போக்கை நிறுத்தக் கூட முடியவில்லை. எனக்கும் ரத்தம் கசிந்து கொண்டேதான் இருந்தது, சாரூபா... ஒரு வேதனையான மரணத்தை, சாகிற மனிதருக்கு இதமாக எதையும் செய்யக் கூட முடியாமல் சும்மா இருந்து பார்க்க நேர்வது... நாம் எவ்வளவு அற்பமான... அற்பத்திலும் அற்பமான துகள்... துரும்பு என்று நமக்கு புரிய வைத்து,

காற்றடிக்கும்போது பறந்து போய்க் கோபுரத்தின்மேல் விழுந்திருப்பது தெரியாமல், என்னால் முடியும், என்னால் முடியும் என்று எவ்வளவு திமிர் நமக்... இல்லை எனக்கு! உதவி கிடைப்பதற்கு இன்னமும் ஒருநாள் ஆகியிருந்தால், நானும் எனக்கு எல்லாமுமான உன்னிடம் மன்னிப்புக் கேளாமலே மடிய நேர்ந்திருக்கும்...''

மடிவதா? அவனா?

சட்டெனத் திரும்பி, அவன் தோளை அழுந்தப் பற்றி, அணைத்து ''தயா, ப்ளீஸ், இதுபோலப் பேச வேண்டாம்!'' என்று பதறினாள் அவள்.

சில கணங்கள் அசையாமல் இருந்தவன், மெல்ல அவளை விலக்கினான் ''நெருப்பு என்றால் வாய் சுட்டு விடுமா, சாரூபா?. இன்னொருவனை மணக்க இருக்கும் நீதான் இது போல, எனக்காக வருந்துவதே தப்பு'' என்றான் மெதுவாக.

அவள் சற்று திகைத்து, பேசாதிருக்கவும் ''கதை இன்னமும் முடியவில்லை, சாரூபா. சொத்துக்களைக் கொண்டுபோய், அவருடைய குடும்பத்திடம் ஒப்படைக்குமாறு, அவர் என்னிடம் கேட்டுக்கொண்டார். ஒரு வழியாக உதவி வந்தபோது, அவர் இருக்கவில்லை. ஒருவழியாகப் பத்திரங்களோடு போனால், அவருடைய மனைவி, அதை... அதையென்ன, எதையும் கண்டுகொள்வதாகவே இல்லை. அந்த மிஸ்டர் நாதனின் மரணம் உட்பட, தானே கஷ்டப்பட்டு பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கியிருக்கிறார்கள். 'குடும்ப அமைப்பு, ஒருவனுக்கு ஒருத்தி என்று ஒழுங்கு முறையோடு வளர்ந்தவள்

நான்... அதையெல்லாம் சிதைத்ததையும் மறக்கவும் முடியாது மன்னிக்கவும் முடியாது' என்று முடித்து விட்டார்கள். அவர் வருந்தி இறந்தது கூட, அவர்களை பாதிக்கவில்லை. முறை தவறி, அவர் அனுபவித்த சொத்தே வேண்டாம் என்றார்கள். உங்கள் அம்மா வுடைய தந்தை வழிச் சொத்து. உங்கள் தாத்தா சொத்து. உங்களுக்கு உரிமை உள்ளதுதானே, திருட்டுப் போனது, கிடைத்துவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள் என்று அந்தப் பிள்ளைகளிடம் வற்புறுத்திக் கொடுத்துவிட்டு வந்தேன்... ஒரு வகையில், நானும் அதுபோலத்தானே, சாரூபா? உன் கொள்கையை, நம்பிக்கையை உடைக்க முயன்றேன். என்னை மன்னிப்பாயா?அல்லது அவளைப் போல, என்னை வெறுத்துவிட்டாயா?'' என்று கலங்கி னான்.

அவள் பதில் சொல்லுமுன், அவளது உதட்டின் மீது விரலை வைத்து ''வேண்டாம். சொல்லாதே, நீ வேறொருவரை மணக்கச் சம்மதித்தபோதே எனக்குப் புரிந்திருக்க வேண்டும். நானும் இங்கே வந்திருக்கக் கூடாதுதான். ஆனால் நான் வேறு யாரிடம் போவேன்? சொல்... லு!'' என்று முனகியவன், சோர்வுடன் அவளது தோளிலேயே மீண்டும் சாய்ந்தான்.

தாய், தந்தை இருந்தும் யாரிடம் போவேன் என் கிறானே!

முதலில் அவனுடைய தாயின் அன்பு பற்றிச் சொல்ல வேண்டும் என்று நன்றாகத் திரும்பி, தோளில் சாய்ந் திருந்த அவனது முகத்தை, லேசாகக் குனிந்து பார்த்தால், அரைக்கண் மூடினாற்போல அவனது நிலை அவளைப் பதற வைத்தது.

''தயா, தயா!'' என்று அவனை அசைத்து எழுப்பினாள். ''வாருங்கள் முதலில் ஒரு டாக்டரிடம் போக வேண்டும் எழுந்திருங்கள்!'' என்று அவனை உலுக்கி எழுப்பிக் கூப்பிட்டாள்.

''டாக்டர்தான் பிளாஸ்டர் எல்லாம் போ... ட்டது. இரண்டு நாட்களாகத் தூங்காததுதான்... ஆனால் உன்னிடம் மன்னிப்புக் கேட்ட பிறகுதான் ம... மற்றது என்று இங்கே வந்... தேன்... கேட்டும் விட்...'' எனும்போதே, அவனது குரல் தேய்ந்து நின்றே விட்டது.

விபத்து, அதைத் தொடர்ந்த சம்பவங்கள்... அவளிடம் மன்னிப்புக் கேட்கவென்று உடல் அயர்வைப் பிடிவாதமாக ஒதுக்கி வைத்து வந்திருக்கிறான். வந்த வேலை முடியவும், உடல் சோர்வு, அவனை மீறி ஓய்வைத் தேடிக் கொண்டுவிட்டது என்று அவளுக்குப் புரிந்தது.

அவனுக்கு உடனடித் தேவை ஓய்வும், தூக்கமும் தான்.

திவானிலேயே அவனை நேராகப் படுக்க வைத்தாள். அசைவுகளில் அரைகுறையாக விழித்தவனிடம், ''உங்கள் அம்மாவுக்கு உங்களிடம் அன்பு அதிகம், தயா. எனக்குத் தெரியும்?'' என்றாள் அவசரமாக.

அதுவும் கட்டாயம் தெரிய வேண்டியதுதானே? பெற்றவளை ஏங்க விடுவது, எவ்வளவு பெரிய தவறு! மகன் விரும்புறான் என்றதுமே, பார்க்க கூடி வந்து, யோசனை சொன்னாளே! இப்போதும், எவ்வளவு கவலை!

''அம்மா... வா?'' என்று கேட்டவன், அவளது கையைப் பற்றியவாறே, உறக்கத்தில் ஆழ்ந்துபோனான்.

அந்தக் பக்கம் பெற்றவள் துடித்துக் கொண்டிருப்பாள் என்பதால், சாரூபா தேவிக்கு போன் செய்தாள்.

''ஒரு விபத்து, ஆன்ட்டி. கூட இருந்தவரின் வேண்டு கோளை நிறைவேற்றிவிட்டு வந்திருக்கிறார்...'' என்றவள், இன்னும் விளக்கம் தேவை என்று உணர்ந்து, அவன் எதற்காகக் கிளம்பிப் போனான் என்பதையும் சுருக்கமாக தெரிவித்தாள்.

அவர்களது உறவையும் பிரிவையும் அறிந்தவள் தானே அந்த அன்னை.

ஆனால், ''இந்த அம்மாவும் வருத்தப்படக் கூடும் என்ற எண்ணமே தீனாவுக்கு வரவில்லை பார்த்தாயா?'' என்றாள் தேவி வேதனையோடு.

''சிறு வயதில் அவரை விட்டுப் போனீர்கள் என்ற கோபம் அவருக்கு!'' என்றாள் சாரூபா சமாதானமாக.

''என் பிடிவாதக்காரப் பிள்ளை, இன்றுவரை, அந்தக் கோபத்தைக் குறைய விடாமல், அப்படியே பிடித்து வைத்துக்கொண்டு இருக்கிறான், அப்படித்தானே? ஆனால் அவன் தந்தை குடித்துவிட்டு வந்து செய்த கொடுமை... எந்தப் பெண்ணாலும் தாங்க முடியாது, சாரூபா. வாய்விட்டுச் சொல்லக்கூட முடியாத கேவலம்! என் மாமனாரே அது புரிந்து, அம்மா வீட்டில் நான் வசதியாக வாழத் தேவையான வழி வகைகளைச் செய்து கொடுத்தார். மகனைத் திருத்த முடியாது என்று கண்டு, சொத்தை அழித்துவிடாமல், அவருக்கும் ஏதோ கட்டுப்

பாடுகள் செய்தார். ஆனால், வாரிசான தீனாவை விட்டுக் கொடுக்க மறுத்துவிட்டார். அவரே தன் பார்வையிலேயே, இவனை வளர்த்தார். ஆனால், சில விஷயங்கள் அவருக்கே பெரிதாகத் தெரியவில்லை என்று தோன்றுகிறது!'' என்ற தாயின் குரலில் வருத்தம் தொனித்தது.

எடுத்துச் சொன்னால், இன்றைய தீனதயாளன் புரிந்து கொள்வான் என்ற நம்பிக்கையோடு ''எல்லாம் நன்றாகிவிடும், ஆன்ட்டி! கவலைப்படாதீர்கள்'' என்று பெரியவளைச் சாரூபா தேற்றினாள்.

செல்லை வைத்துவிட்டு தீனதயாளனிடம் போய் பார்த்தாள்.

அயர்ந்த உறக்கத்தில், ஆதரவற்ற சிறுவனைப் போல தோன்றினான் அவன்.

மனம் கனியப் பார்த்துக் கொண்டு நிற்கும்போதே அழைப்பு மணி அடித்தது.

தீனதயாளன் விழித்து விடக்கூடாதே என்று ஓடோடி போய் கதவைத் திறந்தாள். அவளுடைய பெற்றோரும், குணாளனும் வந்திருந்தார்கள்.

அந்த வினாடியில், அவர்களது வரவு, அவளுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை.

ஆனால், அவர்கள் பேசியபடியே உள்ளே வந்ததில, தீனதயாளன் விழித்துவிடுவானோ என்ற கவலையில் ''ஷ்'' மெல்லப் பேசுங்கள் அம்மா, தயா விழித்துவிடப் போகிறார்'' என்று திவானைக் காட்டி அவசரமாக எச்சரித்துவிட்டுச் சத்தமின்றிக் கதவைக் சாத்தினாள், அவள்.

சாத்திவிட்டுத் திரும்பிய பிறகே, வந்த மூவரும் அதிர்ந்து நிற்பதும், காரணமும் புரிய, சொல்வது அறியாமல் அவளுமே திகைத்தாள்.

இதை ஓரிரு வார்த்தைகளில் சுருக்கமா விளக்குவது கடினம். கூடவே...

முதலில் தன்னிலைக்குத் திரும்பியவர் கந்தவேலே. கையில் இருந்த பார்சலை டீபாய் மேல் வைத்துவிட்டு மகளைப் பார்த்து ''உன்னிடம் ஒரு விளக்கம் இருக்கும் என்று தெரியும். அது என்ன, சாரூபா?'' என்று உணர்ச்சி துடைத்த குரலில் விவரம் கேட்டார்.

சாரூபாவுக்குக் கொஞ்சம் நிம்மதியாயிற்று. தந்தையை மீறித் தாயார் படபடத்துப் பேசிவிட மாட்டாள்.

வாய்ப்பூட்டு அகல, சாரூபா, தணிவான குரலில், தந்தைக்குப் பதில் சொன்னாள். ''அப்பா, இவர்தான் தீனதயாளன். ரொ... ரொம்ப வேண்டியவர். கு... குணாளனுக்குத் தெரியும். இப்போது, தயா... தீனதயாளன் ரொம்ப கலங்கிப் போயிருக்கிறார். இரண்டு நாட்களாகத் தூங்கவில்லையாம்... இப்போது இவருக்கு நான் ரொம்ப தேவைப்பா...''

அவளது பேச்சில் குறுக்கிட்டு ''இப்போது மட்டும் தானா?'' என்று குணாளன் ஒரு மாதிரிக் குரலில் வினவினான்.

அவனை நேராகப் பார்த்தாள் சாரூபா, தெளிவு படுத்த வேண்டிய தருணம்!

பார்வை தளராமலே ''மன்னித்துக் கொள்ளுங்கள், குணாளன். உங்களிடம் நான் திருமணம் பற்றி

பேசியிருக்கவே கூடாது. ஆனால் தயாளனைப் பற்றி நான் உங்களிடம் மறைக்கவில்லை'' என்றாள், அமைதியாக.

கோபமாக அவளை முறைத்துப் பார்த்தான் அவன். உடனேயே, அதன் பயனற்ற தன்மை உணர்ந்து, வீட்டுப் பெரியவர்களைப் பார்த்தான். அவர்களும் பார்வையாளர்களாக மட்டுமாய் மாறியிருக்கவும், மறுபடியும் சாருபாவைப் பார்த்தான்.

''காதலனோடு வெறும் ஊடலில், என்னை மணக்க நினைத்தாய் போல! அவனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை என்றதுமே, ஊடல் தீர்ந்து விட்டதாக்கும்! என்னை மாதிரித் தாலாட்டுப் பாடித் தூங்க...'' என்றவனின் பேச்சில் கந்தவேல் குறுக்கிட்டார்.

''போதும், குணாளன். நினைத்து வருந்தக் கூடிய வார்த்தைகளை எதையும் விட்டுவிடாதீர்கள்'' என்று எச்சரித்தார் ''நாங்கள் இதுவரை அறிந்த பெரிய மனிதனாகவே இருங்கள்'' என்றார் தொடர்ந்து.

ஒருகணம் உதடு துடித்தாலும், குணாளன் அதற்கு மேல், அந்த மாதிரி பேசவில்லை.

டீபாய் மீதிருந்த பார்சலைப் பார்த்தான். ''இது பயன் படாதில்லையா? கிழித்துப் போட்டு விடுங்கள். இப்போது நான் கிளம்புகிறேன். நீங்கள்...'' என்றவனின் பார்வை, அயர்ந்த உறக்கத்தில் இருந்த தீனதயாளனின் மேல் பாய்ந்து மீண்டது. ''ரைட், உங்களுக்கு வேறு வேலை இருக்கும். அதனால் நான் மட்டும் போகிறேன்'' என்று கையோடு கொண்டு வந்திருந்த சிறு பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியே போய்விட்டான்.

அப்பாடி! ஒரு பிரச்சினை தீர்ந்தது என்ற நிம்மதியோடு திரும்பிய சாரூபா, தந்தையின் குற்றம் சாட்டும் விழிகளை சந்தித்தாள்.

''இப்படியாம்மா, ஒருவனை ஏமாற்றுவது?'' என்று கேட்டார் அவர்.

ஒரு கணம் தலைகுனிந்தாலும், உடனே நிமிர்ந்து ''இல்லைப்பா நான் ஏமாற்றவில்லை. தீனதயாளன் பற்றி குணாளனிடம் முதலிலேயே சொல்லிவிட்டேன்'' என்றாள் மகள்.

''என்னவென்று? இவரைப் பிரிந்துவிட்டதாகத்தானே? மறந்து தன்னோடு வாழ்வாய் என்றுதானே எண்ணியிருப்பார்? குழந்தை, குட்டி என்று அவரும்...''

சகிக்க மாட்டாமல் ''ஐயோ இல்லைப்பா! முதலிலேயே, இது பெயரளவு திருமணம்தான் என்று குணாளனிடம் தெளிவாகச் சொல்லிவிட்டேன். அவரும், பெண்கள் ஆசிரமம் தொடங்குவதற்கு, மனைவி என்று ஒருத்தி இருந்தால் நல்லது என்றுதான் மணப்பதாகச் சொன்னார்'' என்று, நடந்ததைத் தந்தையிடம் சாரூபா விளக்கினாள்.

''ஓகோ! ஆனாலும், காலப் போக்கில் மாறுவாய் என்ற எதிர்பார்ப்பு இருந்திருக்கும் என்றுதான் தோன்றுகிறது. ஆனால் உன் வரையில் வெளிப்படையாகவே இருந்திருக்கிறாய். அதனால் பரவாயில்லை போகிறது!'' என்றார் தந்தை.

''என்ன பரவாயில்லை? எல்லோருமாய் சேர்ந்து என்னை ஏமாற்றி இருக்கிறார்கள்! அழைப்புகளை கொடுத்துவிட்டு,

காஞ்சீபுரத்துக்குப் போய் பட்டுச்சேலைகள் வாங்க வேண்டும் என்று, ஆசையாக வந்தேன். இப்போது பாருங்கள்!''

''ஏன் இப்போதும்தான் வாங்கலாமே. என்னம்மா, வாங்கலாம்தானே?'' என்று திவான் பக்கம் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு, மகளைக் கேள்வியாய் நோக்கினார் கந்தவேல்.

தந்தையின் பார்வையைத் தொடர்ந்து, தீனதயாளனைப் பார்த்த சாரூபாவின் முகம் மலர்ந்தது.

மன்னிப்பு கேட்டவன், மாற மாட்டான். நம்பலாமா! ''வாங்கலாம்பா!'' என்றாள் மகிழ்ச்சியோடு.

''சரிம்மா'' என்று கிளம்பினார் தந்தை ''இங்கிருந்து உன்னையும் காஞ்சிக்கு அழைத்துப் போவதாக வந்தோம். சரி பரவாயில்லை. இப்போது, நாங்கள் இருவருமாய் போய் வாங்கி வருகிறோம். நீ அதற்குள், திருமணம் எப்போது, என்ன என்று, தெளிவாகக் கேட்டு வை!'' என்று அவளுடைய பெற்றோர் இருவரும் கிளம்பினார்கள்.

வெகு நேரம் அடித்துப் போட்டாற்போலத் தூங்கிவிட்டு, மாலையான பிறகு, தீனதயாளன் மெல்லக் கண்விழித்து எழுந்தான்.

முகம் கழுவி வரச் சொல்லிவிட்டுக் காபியைக் கலந்து எடுத்து வந்தாள் சாரூபா.

அங்கே, முகத்தில் அடிபட்ட தோற்றத்துடன், அசையாமல் உட்கார்ந்திருந்தான் அவன்.

அழைப்பிதழ் பார்சலின் அருகே, காபி கப்புகளை வைத்தவள், தீனதயாளனின் முகத்தைப் பார்த்துவிட்டு ''என்ன?'' என்று கேட்டாள்.

''இ... இது'' என்று சொல்ல முடியாமல் சொல்லப் பிடிக்காமல் நிறுத்திக் கையால் காட்டினான் அவன்.

விஷயம் புரிந்துவிட, கடைக் கண்ணில் சிரிப்புடன், ''திருமண அழைப்புதான்ப்பா. ஆனால் யாருக்கும் இதைக் கொடுக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டேன்'' என்றாள் சாரூபா.

''ஏன்? ஏன்... ஏன்... ஏன், சொல்லு'' என்று ஆவலே வடிவாகக் கேட்டான் தயாளன்.

''மணமகன் பெயர் தப்பாக இருந்தது. மாற்ற வேண்டு மாம்.''

''என்னவென்று? என்னவென்று மாற்றப் போகிறார் கள்'' என்று பரபரத்தான் தீனதயாளன்.

அமர்த்தலாகப் பேசும் தயாவா என்றிருந்தது சாரூபா வுக்கு. ஆனால் இதுவும் பிடித்துப் போக ''அதை, உங் களை கேட்டு, சொல்வதாக அல்லவா, கூறியிருக்கிறேன்'' என்றாள் அவள் நமுத்தலாக.

அவனது முகம் மலர்ந்தது ''அப்படியானால், நான் சொல்லும் பெயரைப் போடுவார்கள் என்று சொல்லு? அப்புறம் தகராறு பண்ண மாட்டார்களே?'' என்றான் அவன் விளையாட்டில் கலந்து.

''அவ்வளவு சந்தேகமா? சொல்லித்தான் பாருங்க ளேன்!''

''சொல்லட்டுமா? சொல்லப் போகிறேன்! சொல்லி விடுவேன்! இதோ சொல்லுகிறேன், கேட்டுக் கொள் ளுங்கள். எனக்குப் பிடித்த பெயர், சாரூபாதாசன்! என்றான் அவன்.


சிரிப்பை அடக்கிக்கொண்டு ''ஆனால் எனக்குப் பிடித்த பெயர் என்னவென்று கேட்டுவிட்டுச் சொல்வீர் கள் என்று எதிர்பார்த்தேன்!'' என்று புருவம் உயர்த்தி மிடுக்காகக் கேட்டாள் அவள்.

''ஐய்யோ, நிச்சயம்ப்பா, பழக்க தோஷத்தில் அதைக் கேட்க மறந்துவிட்டேன் சொல்லும்மா. உனக்குப் பிடித்த பெயர் என்ன என்று முதலில் சொல்லு. ஒத்து வந்தால், அதையே...''

''ஊகூம், ஒத்து, கித்து எல்லாம் பார்க்க முடியாது. எனக்குப் பிடித்த பெயர், ஒன்றே ஒன்றுதான். அது, தீன தயாளன்தான்! ப்ளீஸ்யா, அதற்கே நீங்களும் தலை யாட்டி விடுங்களேன்!'' என்று கொஞ்சுதலாகக் கேட் டாள் அவள்.

அவள் கேட்டபடியே தஞ்சாவூர் பொம்மையைப் போல தலையை பெரிதாக ஆட்டிவிட்டு, சந்தோஷமாக சிரித்தான், அந்தச் சாரூபாதாசன்!

மேலும் மின்நூல்களுக்கு - www.tamilebooks.net : www.tamilnesan1981.blogspot.com


உண்மைக்
காதல்
மாறிப்போகுமா?
ரமணிசந்திரன்